# சிவப்பு ரோஜா

## 1

ஆனந்தன் கடைசிக் காகிதத்தில் கையெழுத்திடவும் மணி ஐந்தரை ஆகவும் சரியாக இருந்தது.

அவனுடைய ''ஸ்டெனோ'' அவன் கையெழுத்திட்ட தாள்களை வாரி எடுத்துக் கொண்டு சென்றாள்.

சற்று நேரத்தில் அவள் திரும்பி வந்து ''வருகிறேன் சார்'' என்றாள்.

தலையசைத்து அவளை அனுப்பிய ஆனந்தன், மணிக் கட்டைத் திருப்பிக் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.

''மணி ஐந்து நாற்பது. ம்...?'' என்று எதிரில் இருந்தவ ரைக் குறிப்பாக நோக்கினான்.

அவர் தயக்கத்துடன் எழுந்தார். ''சரி சார், அப்போ நானும் கிளம்புகிறேன். நீங்கள் கொஞ்சம் பார்த்துச் செய்தால் தாவலாம்...'' என்று இழுத்தார்.

அவன் பதில் கூறாமல் பேனாவை ஸ்டாண்டில் செருகி னான். மேசை மேல் இருந்த ''பேப்பர் வெயிட்''டை விழிகளால் உறுத்தான்.

அதற்குமேல் நில்லாமல் ஒரு கூழைக் கும்பிடுடன் அந்த மனிதர் அகன்றார்.

அவர் சென்றதும் ஆபீஸ் பையன் வந்தான். அவன் பேச வாயெடுக்குமுன் ''இனி யார் இருந்தாலும் நாளை வரச் சொல். நேரமாகி விட்டது அனுப்பிவிடு'' என்று உத்தரவிட்டான் ஆனந்தன்.

பணியாள் அகன்றதும் இரு கைகளையும் பின்னே கோத்தபடி இலகுவாகச் சாய்ந்து கொண்டு நாற்காலியை இங்கும் அங்குமாகச் சுழற்றினான். அரைவட்டச் சுழல்.

கூடவே சுழன்ற பார்வை மேசைமேல் இருந்த பிரேமினுள் இருந்து சிரித்த மங்கையிடம் பதிந்தது.

யோசனையுடன் அகன்ற பார்வையில், சுவரில் கிடந்த காலண்டர் பட்டது. அன்றையத் தேதித்தாளின் மூலையில் ஒரு சிறு வட்டம்.

இன்று பவுர்ணமியா?

ஒருவிதப் புன்னகையுடன் மீண்டும் படத்தைப் பார்த்தான்.

''பிறகு டெலிபோனை எடுத்து எண்களைச் சுழற்றினான்.

''ஆனந்தன் பேசுகிறேன். மாலினி இருக்கிறாளா?''

சில நிமிடங்களில், ''என் அத்தானா?'' என்று டெலிபோனில் கிளி கொஞ்சிற்று.

''உன் அத்தான்தான். மாலினி இன்று மாலை நீ எங்கேனும் செல்வதாக இல்லையே!''

''ஏன் அத்தான் நீங்கள் எங்கேனும் என்னை அழைத்துப் போகப் போகிறீர்களா? ஏதேனும் பார்ட்டியா? எங்கே?'' என்று பரபரத்தாள் மாலினி.

''அப்படித்தான் ஐடியா. இன்று முழு நிலவு பார்...''



'நிலா விருந்தா, அத்தான்? யாரெல்லாம் வருகிறார்கள்.

குரலில் நகையோட, ''நிலவுதான் விருந்து. வருவது நாம் இருவர் மட்டும்தான். நாம் இருவரும் கடற்கரையில் பூர்ணிமாவின் அழகை அமைதியாக ரசித்துவிட்டு வரலாம்'' என்றான் ஆனந்தன்.

''சரி அத்தான்,'' இனிமை திடுமென மறைந்த குரல் குறுக்கிட்டது. ''அங்கெல்லாம் வருவதற்கில்லை. அதோடு இன்று பாபு அத்தான் வேறு வந்திருக்கிறார். ஓட்டல் 'ஹெவ்' ஓக்குப் போகலாம் என்றார். டின்னர் டான்ஸ் என்று அருமையாக ஆயிரம் சொல்கிறார்.''

''வேறு எங்கேஜ்மெண்ட் இல்லை என்றாயே'' என்று அவன் கடுகடுத்தான்.

''ஆமாம். இதைவிடப் பிரமாதமாக ஏதாவது சொல்லுவீர்கள் என்று பார்த்தேன். நீங்களானால் சரியான போர் அயிட்டம் பேசுகிறீர்களே'' என்று சலித்தாள் அவள்.

அவனும் எரிச்சலுடன், ''நீ பாபுவோடு அங்கெல்லாம் போகக் கூடாது மாலினி. சொல்வதைக் கேள்'' என்றான்.

''உத்திரவா? இந்த அதிகாரம் எல்லாம் நம் திருமணத்துக்கு அப்புறமாகக்கூட என்னிடம்' செல்லாது அத்தான்'' அலட்சியமாகச் சொல்லிவிட்டு ஒலி வாங்கியை வைத்தாள் மாலினி.

உயிர் இல்லாத தொலைபேசியை வெறித்துப் பார்த்தான் ஆனந்தன்.

பாபு!

அந்த பாபு பழக்கி வைத்த பழக்கங்கள், அழைத்துச் சென்ற இடங்கள் எல்லாம் நினைவில் வந்தன.

அவனோடு இரவு ஒரு மணி வரையிலும் கூத்தடிக்கப் போகிறாள் ஒருத்தி. அவள் ஆனந்தனுடைய வருங்கால மனைவியாம்.

குமட்டிக் கொண்டு வந்தது அவனுக்கு. தீச்சுட்டாற் போல ஒலி வாங்கியைத் தாங்கியில் போட்டான்.

ஆபீஸ் பையன் மெல்லத் தலையை நீட்டினான்.

''என்ன கபாலி, பூட்ட வேண்டுமா?''

''இல்லீங்க ஒரே ஒருத்தர் உங்களைப் பார்க்காமல் போக முடியாது என்று பிடிவாதமாக உட்கார்ந்திருக்கிறார்.''

''தாராளமாக உட்கார்ந்திருக்கட்டும். நாளை வரையிலும் இருக்கட்டும். பெரிய கொம்பன் பார்!'' என்று இகழ்ச்சியாகக் கூறியபடியே ப்ரீஃப் கேஸைக் கபாலியிடம் நீட்டினான் ஆனந்தன்.

பெட்டியை வாங்கிக்கொண்டு ''பெயர் கனகு என்று சொல்லச் சொன்னார்'' என்றான் கபாலி.

உதட்டில் ஏளனம் மாறாமலே ''ம்ம்...'' என்று இழுத்தான் ஆனந்தன். பிறகு அமர்ந்து, ''அவரை வரச் சொல்'' என்றான்.

ஈயென்று காதுவரை நீண்ட வாயும், கூப்பிய கைகளுமாக ஒருவர் உள்ளே வந்தார். நாற்பதுக்குமேல் எத்தனை வயதாகவும் இருக்கலாம்.

சரிகை வேஷ்டியும் தங்க மோதிரங்களும் மின்னின. சவ்வாது செண்டும் கமகமத்தன.

ஆனந்தன் முகத்தைச் சுளித்தான். ''ஏனையா, ஒரு பாட்டில் செண்டையும் ஊற்றிக் கொண்டீரா?''

''ஹீஹிஹி! இது அசல் சவ்வாது பாருங்கள். வாசனை தூக்கி அடிக்கிறது. ஆனால், இதை இந்தக் கிழவன் போட்டுக்



கொண்டால் அவ்விடத்துக்குப் பிடிக்காது...'' என்று கண் சிமிட்டினார் வந்தவர்.

''சரி சரி, வந்த விஷயத்தைச் சொல்லும்'' என்று எரிந்து விழுந்தான் ஆனந்தன்.

''என்னா தம்பி. இது என்னா கேள்வி? ஏதோ அவ்விடத்துக்குக் கொஞ்சம் ஆனந்தனம். இவ்விடத்துக்குக் கொஞ்சம்...'' என்று சட்டைப் பையைத் தடவினார்.

''சரிதான் எத்தனை தடவை மாட்டினாலும் இதை விடமாட்டீர்'' என்று நகைத்தான் ஆனந்தன்.

''எப்படித் தம்பி விடுவது? தம்பியைப் போல என்னை நம்பி எத்தனை பேர் இருக்கிறார்கள்? ஏதோ இருக்கும் வரை நம்மாலான உதவி மத்தவாளுக்கு என்று சொல்லுகிறேன்?'' என்றார் கனகலிங்கம்.

ஆனந்தம் ஒன்றும் பேசவில்லை.

அவன் பார்வை மேசை மேல் இருந்த படத்தில் விழுந்தது.

லேசாக முகம் சுளித்தான்.

பிறகு ''அதெல்லாம் இனி வேண்டாம். எனக்குத் திருமணம் நிச்சயமாகிவிட்ட விஷயம் தெரியும் அல்லவா?'' என்றான்.

''நிச்சயம்தானே ஆகியிருக்கிறது? கல்யாணமே ஆகிவிடவில்லையே அட, அப்படியே நடந்துவிட்டால் தான் என்ன தம்பி? அப்பப்போ ஓட்டலில் சாப்பிடுறாப்போல இது ஒரு பக்கம்'' என்று வளைத்துப் பிடித்தார் அவர்.

தோளைக் குலுக்கினான் ஆனந்தன். ''பரவாயில்லை. வேண்டாம்'' என்று எழுந்தான்.

''தம்பி தம்பி... நீங்கள் எல்லாம் இப்படிச் சொன்னால் எப்படி? அதிலும் இந்த மாதிரி அழகு இந்தப் பிறவியில்

பார்த்திருக்கவே மாட்டீர்கள். நானே இருபது ஆண்டுக்கு அப்புறம் இப்போதுதான் பார்த்திருக்கிறேன். நீங்களே பாருங்களேன்'' என்று பையிலிருந்த ஒரு புகைப்படத்தை எடுத்து நீட்டினார்.

ஆனந்தன் அசையாமல் நிற்கவே, ''அட கண்ணால் பார்த்துத்தான் வையுங்களேன். பிறகும் தம்பிக்கு பிரியமில்லாவிட்டால் விட்டுத் தள்ளுகிறது...'' என்று அவன் பார்வை படும்படி மேசைமேல் வைத்தார்.

ஆனந்தன் மேலெழுந்த வாரியாகப் படத்தைப் பார்த்தான்.

பிறகு கையில் எடுத்துப் பார்த்தான்.

ஒரு பெண்ணிடம் இத்தனை அழகா?

கொடிபோல் மெல்லிய மேனி. ஆனால் மலர்க்கொடி. கண், மூக்கு, புருவம் எதிலுமே குறைவற்ற அழகுத் தோற்றம். கால்ஷியமும் பாஸ்பரசும் கலந்த பற்கள். இவ்வளவு அழகுற அமைய முடியுமா? லேசாகப் பளிச்சிட்ட பற்களை அணைத்து நின்ற செவ்விதழ்கள். லேசான வெட்கமும் மகிழ்ச்சியுமாக அந்தப் பெண்ணின் பார்வை அவனைத்தான் அழைக்கின்றனவோ?

கனகலிங்கத்தின் குரல் எங்கிருந்தோ ஒலித்தது. ''அருமையான உருப்படி. அதுமட்டுமில்லை. ஒரு நாள் 'உட்லண்'ஸில் உங்களைக் காட்டி வைத்தேனா? அன்றிலிருந்து உங்கள் நினைவில் அன்ன ஆகாரம் இல்லாமல் ஏங்குகிறது. இன்றைக்குப் பாருங்கள். என் கையால் உணவு பரிமாறி அவர் உண்ட மிச்சத்தைத் தான் சாப்பிடுவேன்; அதுவரை சாப்பிட மாட்டேன் என்று உண்ணாவிரதம் இருக்கிறது. இப்படியே உயிரை விட்டு விடுமோ என்று எனக்கு ஒரே பயமாகிவிட்டது. அதனால் தம்பி இன்று மட்டுமேனும் வருகை தரவேணும்'' என்று வெகு பவ்வியமாகப் பேசினார்.



அவரது பேச்சில் எவ்வளவு உண்மை இருக்கக்கூடும் என்பதை எண்ணி ஆனந்தன் லேசாக முறுவலித்தான். ஆயினும்... மீண்டும் ஆனந்தனின் பார்வை மாலினியின் படத்தை அடைந்தது.

மாலினி -

எவ்வளவு அலட்சியமாகப் பேசினாள்!

பாபுவுடன் ஆடப் போகிறாளாமே.

ஆடுகையில் பாபு என்னென்ன சேட்டைகள் செய்வான் என்பது ஆனந்தனுக்குத் தெரியாதா? அந்த வம்புகளை எல்லாம் ஆனந்தனுக்குக் கற்றுக் கொடுத்ததே அவன்தானே.

அந்த பாபுவுடன் இரவு ஒரு மணி வரை இவனுடைய வருங்கால மனைவி கூத்தடிக்கப் போகிறாளாம்!

சை!

மீண்டும் கையிலிருந்த படத்தைப் பார்த்தான்.

நெஞ்சில் தோன்றிய வார்த்தைகள் உதடுகளின் வழியே ஒலித்தன.

''ஏன் கூடாது?''

## 2

''அப்படியானால் வருகிறீர்களா தம்பி;'' வந்தவரின் வாயெல்லாம் பல்லாயிற்று!

''உம்'' என்று தலையசைத்தான் அவன்.

''அப்படிச் சொல்லுங்கள் தம்பி'' என்றார் கனகலிங்கம் உற்சாகமாக. ''தம்பி நம்ம வீடு மாறி விட்டது தெரியுமில்லையா? அண்ணாநகரில் கோடியிலே ஒரு தனி வீடு இப்போதே வருகிறீர்களா? அல்லது வழி கண்டுபிடிப்பது சிரமம்...''

''இப்போது இல்லை'' என்றான் அவன் சுருக்கமாக. ''சரியாக எட்டு மணிக்கு டவர் அருகே வருவேன். நீர் அங்கே காத்திரும்'' என்று உத்திரவிட்டான்.

''ஹிஹி!'' என்று இரு கைகளையும் ஏந்தினார்.

ஏந்திய கைகளில் ஐந்து நூறு ரூபாய் நோட்டுகள் விழுந்தன. ''மீதி வீட்டில் தருகிறேன்.''

பணத்தை பத்திரமாக உள் பையில் வைத்துவிட்டு நிமிர்ந்தார் கனகலிங்கம். ''போட்டோ தம்பி கிட்டக்கவே இருக்கட்டும் வரேன் தம்பி'' என்று முடிந்த அளவு வளைந்து ஒரு கும்பிடு போட்டுவிட்டு வெளியேறினார்.

ஆனந்தன் மீண்டும் புகைப் படத்தைப் பார்த்தான். எட்டு மணிக்கு அவளை நேரிலேயே பார்க்கலாம், படத்திலே அவள் இதழ்களில் செல்லமாகச் சுண்டினான்.

சரியாக எட்டு மணிக்கு டவரை நெருங்கி விட்டான் ஆனந்தன்.

கனகலிங்கம் அதற்கு வெகுநேரம் முன்பாக அங்கு வந்து காத்திருந்தார். ஆனந்தனின் காரைக் கண்டதும் ஓடோடி வந்தார். தன் பருத்த உடலைத் தூக்கியபடி அவர் ஓடிவந்ததைக் கண்டு உதட்டோடு நகைத்தான் ஆனந்தன்.

உடன் ஏறிக்கொண்ட கனகலிங்கம் வழிகாட்டினார். பல திருப்பங்களைக் கடந்து, மீண்டும் ஒழுங்கற்று இருண்ட ஒரு சாலையின் ஊடே சென்று தனியாக இருந்த சிறு வீட்டின் முன் காரை நிறுத்தினான் ஆனந்தன்.



வீடு மிகவும் சிறியது. ''என்ன இறங்கி விட்டீர்கள்?'' என்று விஷமமாகச் சிரித்தான்.

''என்ன செய்கிறது தம்பி? எல்லாம் கால வித்தியாசம் இப்ப என்ன! இன்றைக்குக் கடவுள் கை காட்டினால், நாளைக்கே மாடி வீடு வந்துவிட்டுப் போகிறது'' என்று வேதாந்தம் பேசினார் கனகலிங்கம்.

''இவனுக்குக் கூடக் கடவுளா?'' என இகழ்ச்சியாக நினைத்தபடி அவனைப் பின் தொடர்ந்தான் ஆனந்தன்.

செண்பகத்தம்மாள் - அவள்தான் கனகலிங்கத்துடைய மனைவி(?)-அவளது வரவேற்பும் பலமாக இருந்தது. ''வாங்க, வாங்க தம்பி, வாங்க, உட்காருங்க. என்னமோ நீங்க வருகிற வேளை இந்தக் குடிசை வீடு மீண்டும் கோபுரம் ஆகவேணும்'' என்றவள் உள்ளே திரும்பி ''கண்ணு உமா கண்ணு ஓடிவாடாம்மா. இதோ தம்பி வந்துவிட்டது பார். எங்கே, எங்கே என்று ஏங்கிக் கிடந்தாயே'' என்று வாய் நிறைய அழைத்தாள்.

இன்றுவரை அறிந்திராத வண்ணம் ஆனந்தனது நெஞ்சு துடித்தது. தன் ஆவலை வெளிக்காட்டாதபடி சாதாரணமாக உள் வாயிலைப் பார்த்தான்.

''அதற்கு வெட்கம் தம்பி, ''புதுசில்லையா...'' என்று முன் உள்ளேயிருந்து அந்தப் பெண் உமா வந்தாள். மெல்ல அடியெடுத்து வைத்து வந்தாள். 'இட்ட அடிநோக' என்ற சொற்றொடர் ஆனந்தனுக்கு நினைவு வந்தது!

தழையக் கட்டியிருந்த அடர்பச்சை நிறச் சேலையின் கீழ் பாத விரல்கள் ஒவ்வோர் அடியின்போதும் வெண்முத்துக்களாக ஒளிர்ந்து மறைந்தன. அவள் அவன் எதிரில் வந்து நின்றுவிட்ட பிறகுதான் பார்வையை நிமிர்த்தினான் ஆனந்தன்.

அவள் கரம் கூப்பி நின்றாள். வெண்தாமரை மொட்டுப் போலக் கூப்பிய வெண்கரங்கள்! படத்தைக் காட்டிலும் மெலிவான மேனிதான்! ஆனால் அதனாலேயே கவர்ச்சி மேலும் கூடித் தெரிந்தது.

சட்டெனெ அவள் முகத்தைப் பார்த்தான் அவன். பார்வை தரையில் பதிந்திருக்கத் தலை குனிந்து நின்றாள் உமா! ''இதை நான் வெட்கம் எனக்கொள்ள வேண்டுமாக்கும்!'' என அலட்சியமாக நினைத்தான் ஆனந்தன்!

அங்கே நிலவிய அசாதாரணமான அமைதியைச் செண்பகம் கலைத்தாள்! ''உள்ளே அவருக்குச் சாப்பாடு எடுத்து வைடா கண்ணு! ஏன் தம்பி இது...'' என்று குடிப்பதுபோல பாவனை செய்து வினவினாள்.

அந்தப் பெண் உமா மெல்லத் திரும்பிச் செல்லுவதையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன். பார்வையை விட்டு அவள் மறைந்த பின் திரும்பினான். ''பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்று சுருக்கமாகப் பதில் இறுத்தான்.

செண்பகமும் உள்ளே போனாள். சற்று நேரத்தில் உமா வுடன் திரும்பி வந்தாள்.

''கூப்பிடேண்டி. இவ்வளவு நேரம் 'அவரு அவரு' என்று கதறிவிட்டு அப்போ என்ன வெட்கம்? ''சாப்பிட வாங்கோன்னு அழகாகக் கூப்பிடு'' என்று உமாவை முன்னே தள்ளிவிட்டாள் செண்பகம்.

தடுமாறி நின்று சமாளித்துக்கொண்டு, ''சாப்பிட வாருங் கள்'' என்றாள் உமா, மெல்லிய குரலில்.

இரண்டு வார்த்தைகளில் அவள் கீதம் பாடியது போல ஆனந்தனுக்குத் தோன்றியது. எழுந்தபடி அவள் பார்வையு டன் தன் பார்வையைக் கலக்க முயன்றான்; ஆனால் அவள்



நிமிர்ந்தாள் அல்லவோ? சிறு சினம் உண்டாயிற்று. அதை மறைத்தபடி அவளைத் தொடர்ந்து சென்றான்.

நீண்ட பின்னல் இடைகீழ்க் கடையின் தொடை மீது பட்டு அசைய அவள் நடந்தது அவனது கருத்தைக் கவர்ந்தது. இது மெய்யான கூந்தலாக இருக்குமா? 'சற்றுப் பொறுத்தால் தானே தெரிகிறது, என நமட்டுச் சிரிப்புடன் நினைத்தான்.

அவளேதான் பரிமாறல் எல்லாம். ஆனால் எந்த தருணத் திலும் அவளிடம் இயல்புபோல இருந்த நளினம் தவிர அவளது அசைவுகளிலோ பார்வையிலோ எந்தவித அழைப் பும் இல்லை என்று ஆனந்தன் கண்டான். 'ஏன், ஒரு சிறு ஜாடை கூட இல்லையே' ''இந்த இடத்தில் பழக்கமற்ற ஒன்று இந்த உத்தமி ரோல் புதுமாடல் போலும்'' என்று தனக்குள் நகையாடினான் அவன்.

அந்தச் சின்ன வீட்டிலும் செண்பகம் தன் பாணியை விடாமல் அழகு செய்திருந்தாள். 'கம்'மென்ற மணத்தை அனுபவித்தபடி தலையணையில் சாய்ந்தான் ஆனந்தன். மூடிய இமைகளுக்குள் முத்து விரல்கள் தாளமிட்டன. கால் விரல்கள் கூடவா இவ்வளவு அழகாக இருக்கும்! இவள் இரவிலும் உத்தமி ரோலைத் தொடர்ந்தால் போரடிக்கும். ஆனால் இதுகளுக்குத் தெரியாதா?

கதவின்புறம் அரவம் கேட்டது. கண்களைத் திறந்து பார்த்தான் அவளேதான், அந்தப் பெண் உமாவேதான். ஆனால் வந்தவள் சாத்திய கதவின் மேல் சாய்ந்தபடி அங் கேயே நின்றுவிட்டாள். விம்மித்தாழும் நெஞ்சகத்தின் அசைவு மட்டும் இல்லையானால், பொன் வண்ணச் சிலை என்று கூறிவிடலாம்.

''உமா'' என அழைத்தான் ஆனந்தன்.

அவனது அழைப்பு அவள் காதுகளில் விழாதது போன்று அவள் அசையாமல் நின்றாள்.

ஆனந்தன் எழுந்து அழுத்தமான காலடிகளுடன் அவளை நோக்கி நடந்தான். அப்போதும் அவளிடம் அசைவில்லை. ஆனால் ஓரளவு அவள் அருகே நெருங்கி விட்டபோது, ''சற்று நில்லுங்கள்'' என்றாள் மிக மிக மெதுவான குரலில்.

ஆனந்தன் நின்றான். புருவங்கள் லேசாகச் சுளிக்க. ''ஏன்?'' என்றான் ஒற்றைச் சொல்லாக.

''....''

''நீயும் விரும்பியதாகத்தானே...''

''நான்... நான்'' லேசாக தவித்து நிமிர்ந்த பார்வை மீண்டும் தாழ்ந்தது. ''உங்களை... உங்களை போட்டோ எடுக்கப் போகிறார்கள். பி... பிறகு அதைக் காட்டி உங்களிடம் பணம் பிடுங்குவதாகத் திட்டம். வந்து... நீங்கள் மாட்டிக் கொண்டால் கடைசிச் சொட்டு இரத்தம் வரை உறிஞ்சி எடுத்து விடுவார்கள்'' என்று அவசர அவசரமாகத் தடுமாற்றத்துடன் எச்சரித்தாள்.

''ஓ, பிளாக் மெயிலா?'' என்று புருவங்களை உயர்த்தினான் அவன்.

''ஆமாம்'' என்பது போல வேகமாகத் தலையாட்டினாள் உமா.

அவன் ஒரு கணம் தயங்கினான். பிறகு ''ஆல்ரைட் நான் முதலில் விளக்கை அணைத்து விடுகிறேன். பிறகு உன்னை அணைக்கிறேன். சரிதானா?'' என்றான் விஷமப் புன்னகையுடன்.

''இல்லை, அது... அது ஏதோ ரஷியன் காமிராவாம். இருட்டில்கூடப் படம் எடுக்குமாமே, அவர்கள் பேசிக் கொண்டார்கள்'' வேகமாகப் பேசினாள் அவள்.

''ஓ...'' அவனால் அவளை நம்பவும் முடியவில்லை, நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. ''அவளாக அவனை



விரும்பினாள்'' என்றார்கள். அது கனகலிங்கம் தம்பதியின் கற்பனையாக இருக்கலாம். ஆனால் அவள் முன்னிலையிலேயே அவர்கள் அதைக் கூறியபோதும் அவள் பார்வையால் கூட மறுக்கவில்லை. கூடவே 'மீண்டும் மாடி வீடாகும்' என்று கனகலிங்கமும் 'குடிசை வீடு கோபுரம் ஆகவேண்டும்' என்று செண்பகமும் கூறியதும் காதில் ஒலித்தன.

அண்மையில் ஒரு 'ரெய்டி'ல் சிக்கிப் பெருமளவு பணத்தையும், சம்பாதிக்க உதவும் பெண்களையும் இழந்திருந்தனர், செண்பகமும் கனகலிங்கமும். இப்போது இந்த ஒரு பெண்ணை மட்டும் கொண்டு எவ்வளவு சம்பாதித்து விட முடியும்? பொன் காய்ச்சி மரமாக அவளைப் பயன்படுத்திக் கொள்ள இருவரும் திட்டமிட்டு இருக்கலாம். இருவருமே செய்யக் கூடியவர்கள் தான் இல்லை என்று சொல்வதற்கில்லை.

இந்த போட்டோ, பிளாக் மெயிலுக்கெல்லாம் ஆனந்தன் மிரளுகிறவன் இல்லை. ''உன்னால் ஆனதைப் பார்'' என்று உதறிவிடக் கூடியவன் தான். ஆனாலும் அவனுடைய அன்னையை இந்த 'போட்டோ'க்கள் பெரிதும் தாக்கி விடக்கூடும். இப்போதே அவனால் அவருக்கு கொஞ்சம் குனிவுதான் என்றாலும் அது பேச்சளவில்தான், கண்ட நிலையில் எடுக்கப்பட்ட புகைப்பட வடிவில் சாட்சியம் போனால் அவர் தாங்கமாட்டார்.

அல்லது அவள் தடுமாறிப் பேசுவதைப் பார்த்தால் இவள்தான் அவனை ஏய்க்க முயலுகிறாளோ? பார்க்கலாம்.

''ஓகோ'' என்று திரும்பவும் படுக்கையை அடைந்தான் அவன், ''நீயும் தூங்க வேண்டும் இல்லையா? என்று ஒரு போர்வையையும் தலையணையையும் எடுத்து அவள் புறம் வீசிவிட்டு மெத்தையில் படுத்துக் கொண்டான்.

அந்தப் போர்வையில் காலை மடித்து உட்கார்ந்தாள் அந்தப் பெண் உமா.

படுத்தபடியே ஓர் ஆப்பிளைக் கையில் உருட்டி விளையாடினான் ஆனந்தன். சற்று நேர அமைதிக்குப் பின் ''உமா'' என அவன் அழைக்கவும் திடுக்கிட்டு நிமிர்ந்தாள் அவள்.

''நீயோ அவர்கள் வீட்டுப் பெண். திடீரென்று என் மேல் என்ன கரிசனம்?''

''அது... அது வந்து... நம்பி வந்தவர்களை ஏமாற்றுவது தப்பு இல்லையா? அப்படித் தப்பு செய்யலாமா? அதனால் தான் உங்களிடம் சொல்லி விட்டேன்.''

அவன் உரக்கச் சிரித்தான். வேதத்தை யார் தான் ஓதுவது என்பது இல்லையா? தப்புச் செய்ய கூடாதாமே மேலும் மேலும் அவனுக்குச் சிரிப்பு பொங்கிற்று.

அவன் சற்று மிரட்சியுடன் அவளைப் பார்த்துவிட்டு மீண்டும் விழிகளைத் தாழ்த்திக் கொண்டான்.

அவன் ஒரு வழியாகச் சிரித்து முடித்தான். ''சரிதான் உமா. உன் நியாயத்தை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் பொழுது நகரமாட்டேன் என்கிறதே தூக்கமும் அருகில் கூட வரமாட்டேன் என்று விலகி நிற்கிறது உன்னைப்போல்'' என்றான் வேண்டுமென்றே. உமாவின் தலை மேலும் தாழ்ந்தது.

''பொழுதை விரட்ட உன் கதையைச் சொல்லேன்''

''என் கதையா அப்படி என்றால்...''

''உன் கதை என்றால் உன்னைப் பற்றிய விவரங்கள் என்று அர்த்தம். உன் ஊர், பெயர், பெற்றோர், வளர்ப்பு இத்யாதி. முதலில் உன் உண்மைப் பெயர் என்ன? முனியம்மாவா? என்று கேட்கும் போதே அந்த பெயரின் பொருத்தம் இல்லாமையை, உணர்ந்தவனாக அல்லது மலரா?'' என்று முடித்தான்.



அவள் புரியாதவள் போல விழித்துவிட்டு ''உமாதான்'' என்றாள்.

''உமாவேதானா?'' என்றான் அவன் புன்முறுவலோடு.

''உமா மகேசுவரி.''

''அகிலம் காக்கும் அன்னை பார்வதியின் பெயர். ஊம்... ம்...'' என்று அவளைக் கூர்ந்து பார்த்தான் ஆனந்தன்.

அந்தப் பார்வையின் பொருள் புரிந்தாற்போல அவள் முகம் ரத்தமாய் சிவந்து மீண்டும் வெளுத்தது.

''உம். அப்புறம் உன் ஊர் எது?''

''... ...''

''சொல்லு உமா. எனக்கும் பொழுதுபோக வேண்டும் இல்லையா?'' என்றான் அவன் பொறுமை இழந்தவன் போல.

''வடக்கே போபால் பக்கத்தில் ஓர் ஊர்.''

''உன்னைப் பார்த்தால் வடக்கத்திப் பெண்போல இல்லையே. தமிழும் அழகாகப் பேசுகிறாய்'' என்றான் ஐயத்தோடு.

''என் பெற்றோர்கள் தமிழர்கள்தான். முன்பே அங்கே குடி போனார்களாம்.''

''ளாம்' என்றால்? இப்போது அவர்கள் எங்கே?''

ஒரு பெருமூச்சுவிட்டு, ''நான் ஓர் அனாதை'' என்று மெல்ல உரைத்தவள், அவன் 'கரெக்ட்' என்று உற்சாகமாகக் கூறவும் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

''என்ன!'' என்றாள் அதிர்ச்சியுடன்.

''ஆமாம், உமா மகேசுவரி. இந்தச் சிவப்பு விளக்குப் பெண்கள் அனைவருமே அநேகமாக அநாதைகளாகத்தான் இருப்பார்கள். திடீர் அனாதையாகத் தவித்தபோது யாராவது முரடர்கள் உன்னைக் கற்பழித்திருப்பார்களே'' என்றான் அவன் அலட்சிய புன்னகையுடன்.

உமாவின் முகத்தில் மீண்டும் செங்குருதி குழம்பி வடிந்தது. உதட்டைப் பற்களால் அழுத்திய வண்ணம் தரையில் பார்வையைப் பதித்தாள்.

''ஆகா, அப்படியேதானா?'' எழுந்து உட்கார்ந்து கொண்டு அவன் சுவையுடன் வினாவினான்.

''இல்லை'' என்று தலையசைத்தாள் உமா. ''என் சிறு வயதிலேயே என் தாய் தந்தை இருவரும் இறந்து விட்டார்கள். நான் அனாதை ஆசிரமத்தில் வளர்ந்தேன்'' என்றாள் சிறு குரலில்.

''அது தமிழ் அநாதை ஆசிரமமாக்கும்?'' மடியில் ஒரு தலையணையைப் போட்டுக் கொண்டு அதில் தாளமிட்டபடி அவன் கிண்டலாகக் கேட்டான்.

''இல்லை. ஆனால் எனக்குத் தமிழ் கற்று கொடுக்கும்படி ஆசிரம அன்னையிடம் என் தாய் கேட்டுக் கொண்டாராம்.''

''அதன்படி கற்றுத் தந்தார்களாக்கும்.''

''ஆமாம். அங்கே வேலை செய்த ஒரு தமிழ்ப் பெண்மணியிடம் நன்கு பேசிப் பழகினேன்.

''அந்த அம்மாவின் வீட்டில் எவனாவது இளைஞன் ஆசைகாட்டி உன்னை ஏய்த்தானா!''

''இல்லை'' என்றாள் உமா சற்று சினம் கொண்டவள் போல, அந்த அம்மா தனி ஆள்; ஒரு விதவை பாவம்.''



''ஓகோ! ஆசிரமம் எப்படி? அங்கே மிகவும் கஷ்டப்பட்டிருப்பாயே, பாவம், ச்சு'' என்று அனுதாபம் காட்டினான் அவன்.

அந்த அனுதாபம் மெய்யோ பொய்யோ என்று அவளால் அனுமானிக்க முடியவில்லை. ஆனால் ''இல்லை'' என்று அவன் வார்த்தைகளை மறுத்தாள். வெகு அழுத்தமாக மறுத்தாள். ''ஆசிரமத்து அன்னை அன்பே வடிவானவர்கள். அவர் உரக்கப் பேசிக்கூட நான் கேட்டதே இல்லை,'' என்று சொல்லுமுன் அவள் விழிகளில் நீர் மல்கியது.

''அப்படியானால் ஆசிரம டிரஸ்டிகளில் ஒரு காமுகன் இருந்திருப்பானே! அவன் உன்னை வேட்டை நாயாக விரட்டினானாக்கும்?'' என்று எடுத்துக் கொடுத்தான் ஆனந்தன்.

அவனை ஆத்திரமாக உறுத்து விழித்தாள் உமா. ''ஏன் இப்படிச் சொல்லுகிறீர்கள்?''

''இல்லையானால், நீ அந்த அன்பான ஆசிரமத்தை விட்டு வெளியேற நேர்ந்திராதே என்று நினைத்து விட்டேன்'' என அவன் பரம சாதுபோல விளக்கினான்.

''ஏதாவது தொழில் செய்யும் தகுதி பெற்று வேலையும் கிடைத்த பிறகு அங்கே தங்கக்கூடாது என்பது ஆசிரம விதி.''

''பலே! வெகு வசதியான விதி'' என்று தலையை உருட்டினான் ஆனந்தன்.

''வசதியா? யாருக்கு,'' என்று விளங்காதது போல விழித்தாள் அவள்.

''அது... ஆசிரமத்துக்குத்தான் இல்லையானால் அந்த அன்பான அன்னையை விட்டுப் பிரிய மனமின்றி எல்லோரும் அங்கேயே தங்கவிட அவர் ஆசிரமத்துக்குப் பதிலாகச் சத்திரம் அல்லவா நடத்த நேரிடும்.''

''அன்னை கூட அப்படித்தான் சொன்னார்கள்'' என்றாள் அவள் ஏதோ யோசனையோடு.

''சொல்லியிருப்பார்கள், சொல்லியிருப்பார்கள்'' என்று சிரித்தான் அவன். ''ஆனால் மெய்யாகவே கெட்ட எண்ணம் கொண்ட டிரஸ்டி யாருமே இல்லையா?''

''இடையாது. கிடையாது; கிடையாது. அந்த ஆசிரமத் துக்கு ஒரே ஒரு 'புரவலர்' மட்டும்தான் உண்டு. அவரும் மிக மிக நல்லவர், ஆனால் நீங்கள் ஏன் இப்படியே கேட்கிறீர் கள்?'' என்றாள் அவள் படபடப்பாக.

''பொதுவாக சினிமாவிலும் நாவல்களிலும் ஏன் 'உண் மைக் கதை'களிலும் கூட இப்படித்தானே வருகிறது. அத னால் உன் கதை... இல்லை, வாழ்க்கையிலும் அந்த மாதி ரியே நடந்திருக்குமோ என்று நினைத்தேன் அவ்வளவே தான்,'' என்று கைகளை உயர்த்தி சோம்பல் முறித்தான்.

''அப்படியில்லை'' என்று முணுமுணுத்தாள் உமா.

''அப்புறம் செண்பகமும் கனகலிங்கமும் எங்கே வந்து சேர்ந்தார்கள்?'' என்று விசாரித்தான் ஆனந்தன்.

''அவர்களைச் சென்னையில்தான் சந்தித்தேன். அவர்கள் இருவரும் என் பெரியம்மா, பெரியப்பா என்று தெரிய வந்தது.''

ஆனந்தன் பலக்க ''சிரிக்கவே, அவள் மலைப்புடன் அவனைப் பார்த்தாள். ''ஏன், ஏன் சிரிக்கிறீர்கள்?''

''ஒன்றுமில்லை. வயதாகிவிட்டது என்று செண்பகம் கூட ஒப்புக் கொள்கிறாளே என்று நினைத்தேன். இதுவரையி லும் இந்த வீட்டுப் பெண்களுக்கு அவள் அக்காவாக இருந்து தான் பழக்கம். இன்று திடீர் பெரியம்மா ஆகிவிட்டாள்? திடீர் இட்லி சாம்பார் போல'' என்று தன் நகைச்சுவையை எண்ணித்தானே சிரித்தான்.



ஒருவாறு சிரித்து ஓய்ந்ததும் அவள் பக்கம் மீண்டும் திரும்பினான்.

தலையை நன்கு குனிந்து அமர்ந்திருந்த அவள் முகம் அவனுக்குச் சரியாகத் தெரியவில்லை. நாசுக்காக ஒரு கொட் டாவியை வெளியேற்றி விட்டு, ''இதோ பார் உமா, உன் கதை ஒரே போர், சுவையாக ஒரு சம்பவம் கூட இல்லையே. அனாதை என்கிறவரை சரிதான். பிறகு எப்படி ஆக வேண் டும் தெரியுமா? நீ வளர வளர உன் பொல்லாத, வேதனை தரும், வெறுக்கத்தக்க அழகும் நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக வளர்ந்து உன்னை வேதனைப்படுத்த வேண்டும். எவனாவது முரடன் உன்னைக் கசக்கி முகர வேண்டும். அல்லது எவனாவது உன்னை மணப்பதாக அல்லது காதலிப்பாக ஏய்த்து இங்கே கொண்டுவந்து விற்க வேண்டும். ஆதரவு அற்ற அழகிகளின் முடிவு இதுதானே என்று இந்த வாழ்வை நீ ஏற்க வேண்டும். ஆ... இன்னொரு வகைக் கதையும் இருக்கிறது. அதில் உனக்கு குறைந்தது ஒரு டஜன் தம்பி தங்கைகள் தேவைப்படும் சாப்பாட்டுக்கு வழி யில்லாமல் இந்த இடம் என்று தெரியாமல் இங்கே அகப்பட வேண்டும். இங்கே உன்னைச் சித்திரவதை... என்ன?

சிலையாக இருந்த உமாவிடம் திடுமென்ற அசைவைப் பார்த்து அவன் வினவினான்.

தலை நிமிராமலே 'ஒன்றுமில்லை' என்று தலையசைத் தாள் அவள்.

''ஆல்ரைட். அங்கங்கே பல திருப்பங்களை அழகாக இணைத்துக் கதை சொல்ல வேண்டும், உமா. அப்படியா னால்தான் வாடிக்கையாளர்களைக் கவர முடியும். இப்படி நெளிவு சுளிவு இல்லாமல் சொன்னால்...ல், பார் எனக்குத் தூக்கம் கூட வந்துவிட்டது'' என்று இன்னொரு கொட்டாவி விட்டான்.

அவள் பதிலும் சொல்லவில்லை. அசையவும் இல்லை.

தலையணையை நேராக வைத்துப் படுத்தான் ஆனந்தன்.

''விளக்கை அணைத்து விடு உமா. நித்திராதேவி உன்னைப்போல் இல்லை, அவள் கருணையோடு என்னை அணைக்க வந்துவிட்டாள்,'' என்று குரலில் நகையுடன் கூறினான்.

உமா அமைதியாகச் சென்று விளக்கை அணைத்து விட்டுப் பழைய இடத்திற்கே திரும்பினாள்.

அயர்ந்த உறக்கம் திடீரெனக் கலைந்து விழித்தான் ஆனந்தன். எங்கோ மணி இரண்டு அடித்தது கேட்டது. தலையை மட்டும் திருப்பிப் பார்த்தான்.

அவள் அதே நிலையில் தலை குனிந்து அமர்ந்திருப்பது முழுநிலவு தந்த வெளிச்சத்தில் தெரிந்தது.

''உமா'' என்றான் மெதுவாக.

அவள் தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு திரும்பினாள்.

''இன்னமுமா அவர்கள் காத்திருப்பார்கள்?'' என்று ரகசியமாக வினவினான்.

சற்றுத் தயங்கி விட்டு, ''ஒருவேளை காத்திருந்தால்...'' என்று நிறுத்தி மீண்டும் தொடர்ந்தாள். ''உங்களுக்கு இவ்வளவு பெரிய உதவி செய்திருக்கிறேனே. நீங்கள் எனக்கு... எனக்கு...'' என்று மேலே பேச முடியாதவள் போல நிறுத்தினாள்.

இரு தந்தக்கரங்கள் எதையோ யாசிப்பன போல் ஏந்தின.

அகன்ற விழிகள் அரை வெளிச்சத்தில் பளபளத்தன. கண்ணீராலோ?



லேசான புன்னகையுடன், ''ஆல்ரைட் ஆல்ரைட். ஆனால் நீயும் சற்றுத் தூங்கு'' என்று திரும்பிப் படுத்து வெகு விரைவிலேயே மீண்டும் ஆழ்ந்து உறங்கிப் போனான் ஆனந்தன்.

தன்புறம் தெரிந்த அவனது அகன்ற முதுகைப் பார்த்துக் கொண்டு சற்று நேரம் அசையாமல் இருந்தாள் உமா.

மெல்ல மெல்ல மழைமேகம் கண்ணில் இறங்கினாற் போல அவள் கயல் விழிகளில் வெள்ளமாய் நீர் பெருகி அருவியாய்க் கொட்டலாயிற்று.

## 3

மறுநாள் காலையில் ஆனந்தன் கண் விழித்தபோது உமா அந்த அறையில் இல்லை.

கனகலிங்கத்திடம் மேலும் பணம் கொடுத்துவிட்டுக் கிளம்பினான் அவன். அவனுக்கே வியப்பூட்டும் வகையில் சிரிப்புத்தான் வந்தது அவனுக்கு. புன்னகையுடனேயே காரை நோக்கி நடந்தான்.

அப்போது செண்பகத்தின் குரல் கேட்டது.

''சொல்லேண்டி, மறுபடியும் வாருங்க! என்று ஆசையாய்ச் சொல்லி வழி அனுப்பேன்'' என்று குழைவாகவே வற்புறுத்திக் கொண்டிருந்தாள்.

கார் அருகே சென்றிருந்த ஆனந்தன் சட்டெனத் திரும்பிப் பார்த்தான்.

அங்கே தன் பெரிய கருவிழிகளில் சிறு ஏக்கத்துடனும் சற்று வருத்தத்துடனும் கூடுதலாகவே அச்சத்துடனும் உமா நின்றிருந்தாள்.

ஒருகணம் யோசனையுடன் அவளைப் பார்த்தவன் ஒற்றைவிரலால் அவளை அழைத்தான்.

அவள் அவன் அருகே வந்ததும் ''என்னோடு வருகிறாயா?'' என்று மென் குரலில் வினவினான்.

ஏக்கம், வருத்தம், பயம் எல்லாம் மறைந்து அவள் முகம் பளிச்சென்று மலர்ந்தது.

பூட்டியிருந்த கார்க் கதவைத் திறந்து ''ஏறிக்கொள்'' என்றான் அவன்.

அவளோ சற்றும் தயங்காமல் காரினுள் ஏறி அமர்ந்து விட்டாள்.

அடுத்து அவனும் ஏறிக்கொண்டு கார்க் கதவைச் சாத்தினான்.

''என்ன... என்ன?'' என்று தங்கள் பெரும் உடல்களைத் தூக்க மாட்டாமல் தூக்கிக்கொண்டு செண்பகமும் களகலிங்கமும் ஓடிவந்தனர்.

காரை 'ஸ்டார்ட்' செய்துவிட்டு சன்னல் வழியாகத் தலையை வெளியே நீட்டினான் ஆனந்தன். ''கனகு ஒதுங்கி விடு. இல்லாவிட்டால் - போலீசுக்கு நீ புதியவன் அல்ல; அடுத்தும் ஓர் அறிமுகம் நடந்துவிடும்'' என்றான் நிதானமாக.

பேயறைந்தாற்போல அவர்கள் இருவரும் திகைத்து நிற்க, ஆனந்தன் சிரித்துக்கொண்டே காரை ஓட்டலானான்.

சற்று நேரம் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வந்தாள் உமா?

''பயமா? அவர்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்து விட்டு வந்தேனே, இலேசில் தெளியாது'' என்றான் ஆனந்தன்.



ஒருவாறு திருப்தியுடன் சற்று சாய்ந்து கொண்டு ''என்னை ரெயில் நிலையத்தில் இறக்கி விட்டுவிடுங்கள்'' என்றாள் உமா.

அவன் எதிர்பாராத பதிலாக ''அதற்கு உன்னை அங்கேயே விட்டு விட்டு வந்திருக்கலாம்'' என்று அவன் கூறவும், உமா ஒரேயடியாகத் திகைத்துப் போனாள் மிரட்சியுடன் முன்னே பார்த்தாள். அவன் முகத்தில் எவ்வித பாவமும் இன்றிச் சாலையைப் பார்த்தபடி காரை ஓட்டினான்.

மெல்லக் கூட்டிக்கொண்டே தைரியத்துடன், ''இப்போது எங்கே போகிறோம்?'' என்று கேட்டாள்.

''போனதும் தெரிந்து கொள்வாய்'' என்று சுருக்கமாக பதில் வந்தது.

''வந்து...''

''சற்று நேரம் பேசாமல் இருக்கிறாயா?''

அதற்குமேல் உமா பேசத் துணியவில்லை. நெஞ்சில் அச்சம் பெருக, அவன் முகத்தைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

அவனது உணர்ச்சியற்ற பாவம் மாறி ஒற்றைப் புருவம் லேசாகச் சுளிக்கக் கண்டாள். பிறகு அந்தச் சுளிப்பு மாறி உதடுகளில் ஓர் உதாசீனப் புன்னகை பரவியது. உலகத்துக்கே சவால் விடுவது போல அந்தச் சிரிப்பும் விழிகளின் பளபளப்பும் உமாவின் நெஞ்சில் திகிலை ஊட்டின. இது எதில்போய் முடியும்? வாணலிக்குத் தப்பி நெருப்பிலா?

இது எதில் போய் முடியும் என்பதைப் பற்றி ஆனந்தனுக்கு அக்கறை இல்லை. ஆனால் தான் செய்ய உத்தேசித்திருக்கும் காரியம் மற்றவர்களை எப்படி பாதிக்கும் என்பதை நினைக்கையில் அவனுக்குச் சிரிப்பு வந்தது.

மாலினி என்ன செய்யக்கூடும்? அலறி ரகளை செய்வாளா? செய்யக் கூடியவள்தான். செய்யட்டும் பார்த்துச் சிரிக்கலாம்.

ஆனால், அவள் அவ்வளவு முட்டாள் அல்ல, வேறு வகையான முயற்சி செய்வாள் அம்மா மூலம்....

அம்மாவும் என்ன செய்யக்கூடும்? அவன் போக்கில் அவர் அதிகம் தலையிடுவது இல்லை. தலையீட்டுக்கு மதிப்பு இராது என்று எண்ணமோ? எதுவானாலும் பார்க்கலாம்.

அதோடு இவள் - இந்த ரஷியன் காமிரா...

அடிக்கண்ணால் வேசாகப்பாராதது போல உமாவைப் பார்த்தான். கண்ணில் அச்சத்தை அடக்க முயன்றபடி அவள் இருப்பதைக் காணக் கொஞ்சம் பாவமாகக்கூட இருந்தது. ஆனால், ஆனந்தனை ஏய்ப்பது அத்தனை எளிதல்லவே.

☆ ★ ☆

ஓர் அரைமணி நேரம் சென்ற பின்னர் ஒரு பெரிய வீட்டின் முன் அலட்சியமாகக் காரை நிறுத்தினான் ஆனந்தன்.

மறு ஒலி கொடுக்கும் முன் வேலையாள் ஒருவன் ஓடி வந்து கேட்டைத் திறந்தான்.

கார் உள்ளே சென்று போர்டிகோவில் நிற்கவும், கூடவே ஓடிவந்து காரின் கதவை மரியாதையுடன் திறந்தான்.

''இறங்கு, உமா'' எனப் பணித்தான் ஆனந்தன்.

வேலையாளின் முகத்தில் ஓடிய திகைப்பைக் கண்டதும் உமா முகம் கன்றினாள். உதடுகளை அழுந்த மூடியபடி இறங்கி ஆனந்தன் பின்னே வீட்டினுள் சென்றாள்.

ஒரு பழைய வீட்டை வாங்கித் தன் ரசனைக்கேற்ப ஆனந்தன் புதுப்பித்திருந்தான். வீட்டு வேலைகள் முடிவடைந்து விட்டன. காம்பவுண்டின் அலங்காரமும் தோட்டமும் பாக்கி, வீட்டை வாங்கிய நோக்கமும் இப்போது அதைப் பயன்படுத்தப்போகும் விதத்தையும் நினைக்கையில் அவன் கண்கள் பளபளத்தன.



உள்ளே கூடத்தில் உமாவை அமரச் சொல்லிவிட்டு, ''சம்பந்தன்'' என அழைத்தபடி வெளியே போனான் ஆனந்தன்.

அந்த வேலையாளிடம் அவன் பேசும் குரல் உமாவுக்குத் தெளிவற்றுக் கேட்டது.

எங்கோ டெலிபோன் டயலைச் சுற்றும் ஒலியும், மீண்டும் ஆனந்தன் குரலும் கேட்டன.

பிறகு மறுபடியும் உமாவிடம் வந்தான் அவன்.

அவனைப் பார்த்ததும் தன் பெரிய விழிகளில் குழப்பத்துடன் அவசரமாக எழுந்தாள் உமா. குட்டைக் காலுள்ள சோபா காலில் தட்டிவிட ''ம்ம்...'' என்ற முனகலுடன் குனிந்தாள்.

''என்ன?'' என்று அருகில் வந்தான் ஆனந்தன்.

''ஒன்றுமில்லையே காலில் வேசாக அடிபட்டிருந்தது. அதில் சோபா தட்டிவிட்டது'' என்று மெல்ல நிமிர்ந்தாள் அவள்.

''எங்கே பார்க்கலாம்'' என்று குனிந்தான் அவன்.

''இல்லை இல்லை. இப்போது ஒன்றுமில்லை,'' என்று பதட்டத்துடன் விலகினாள் உமா.

''சரி சரி உட்கார்'' என்று தானும் ஒரு மோடாவை இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்தான் ஆனந்தன்.

ஒரு புறமாகச் சற்று சாய்ந்து உட்கார்ந்தபடி காலால் சேலையில் வேசாக வருடிக் கொண்டாள் உமா.

''அதிகம் வலிக்கிறதா?''

''ஒகூம் இல்லையே'' என்று நிமிர்ந்தவள், அவன் பார்வையின் கூர்மையில் குழம்பினாள்.

''ரெயில் நிலையத்தில் விடச் சொன்னாயே, எங்கே போவதாக உத்தேசம்?''

எங்கே செல்வது? போக்கிடம்தான் ஏது? அருள் சுரக்கும் ஓர் அன்பு முகம் உமாவின் நினைவுக்கு வந்தது. ஆனால், அங்கெல்லாம் செல்லும் தகுதி வேண்டாமா? இப்போது உமா... சே உமாவின் உடல் கூசிப் போயிற்று.

''நீ வேறு எங்கும் போக வேண்டாம். இங்கேயே இரு'' என்றான் ஆனந்தன் முடிவாக.

இங்கே என்றால்? வலைக்குத் தப்பிப் புலிக் குகையில் தஞ்சமடைவது போலவா? ஆனால் வேறே எங்கே போவது? மீண்டும் அங்கே... திரும்பவும் உமாவின் உடல் கூசிச் சிலிர்த்தது.

அதற்குள் வாயிலில் ஒரு கார் வந்து நிற்கும் ஓசை கேட்கவும் அவன் எழுந்து சென்றான்.

ஏறக்குறைய உமாவின் வயதுள்ள ஓர் இளம் பெண்ணுடன் திரும்பி வந்தான்.

''மிஸ் லூயிஸ் இவள்தான் உமா. உமா, இவள் பெயர் ஜென்னிஃபர் லூயிஸ் நம் அலுவலகத்தில் வேலை செய்கிறாள். இன்று உனக்கு உதவி செய்ய வந்திருக்கிறாள். மிஸ் லூயிஸ், எங்கள் வீடு பார்த்திருக்கிறாய் அல்லவா? அதே போல இங்கும் எல்லாம் செய்துவிடு. என்னென்ன தேவையோ எல்லாம் ஆர்டர் செய்து தருவி. உமா ஏதாவது நினைத்தால் மட்டும் மாற்றிக்கொள்ளட்டும். முதலில் உமாவுக்கு உடைகள் வாங்க வேண்டும். நான் போய்க் காரும் டிரைவரிடம் பணமும் அனுப்புகின்றேன்.''



ஆனந்தன் பேசி முடிக்கும்வரை காத்திருந்து விட்டு ''அய்யா என அழைத்தான் சம்பந்தம். சற்று முன்பாகவே ஒரு பெண்ணுடன் வந்து விட்டிருந்தான் அவன். 'இதோ இதுதானுங்க என் பெண்சாதி' என்றான் வெட்கத்துடன். கூடவே ''வந்துங்க அதும்பேரு செந்திரு'' என்று அவசரமாகச் சேர்த்தான்.

''செந்திருவா? மிகவும் நல்ல பெயராக இருக்கிறது'' என்று புன்னகை செய்தான் அவன்.

அவள் வளைந்து நெளிந்தாள்.

''இதோ பார் செந்திரு இவர்கள்தான் இந்த வீட்டு அம்மா. இவர்கள் மனம் கோணாதபடி இவர்களுக்கு வேண்டியது எல்லாம் செய்ய வேண்டும். வீட்டில் எல்லாப் பொறுப்பும் உன்னதுதான்'' என்று தன் வசியப் புன்னகையை மீண்டும் சிந்தினான்.

''சரிங்கய்யா'' என்றாள் அவள் மிகுந்த பணிவுடன்.

''நல்லது. இப்போது இந்த அம்மாவுக்கு டிபன் காபிக்கு ஏற்பாடு பண்ணு. இந்தா வேண்டியதை வாங்கிக் கொள்'' என்று கொஞ்சம் பணம் கொடுத்து அனுப்பினான். பிறகு உமாவிடம் திரும்பி ''உமா இப்போது நான் போகிறேன். மிஸ் லூயிசும் செந்திருவும் உன் தேவைகளை கவனிப்பார்கள். எனவே நிம்மதியா இரு. வரட்டுமா'' என்று விடைபெற்றான்.

''சம்பந்தம் இந்த அம்மாவை...'' என்று ஏதோ சொல்லியபடி அவனுடன் வெளியே சென்றான்.

உமா சற்று நேரம் பிரமை பிடித்தவள் போல் நின்றாள். என்ன நிலையில் அவர் தன்னையே நிறுத்திக் கொண்டாள்?

மெல்லத் தன் உணர்வு வந்து திரும்புகையில் அந்த ஜென்னிஃபர் தன்னை குறுகுறு என்று பார்க்கக் கண்டாள்.

இவளது கணிப்பு என்னவாக இருக்கும்? உமாவின் கன்னங்க ளில் குப்பெனச் சூடு ஏறிற்று. தலை குனிந்து தயக்கத்துடன் மெல்ல 'மிஸ் லூயிஸ்' என அழைத்தாள்.

''ம்ம்? என்ன கேட்டீர்கள்?'' என்று தூக்கத்திலிருந்து விழித்தவள் போல அவள் கேட்டாள்.

''ஒன்றும் இல்லை மிஸ் லூயிஸ் உட்காருங்கள்!''

''ஊகூம்'' என்று புன்னகையுடன் உமாவைத் தடுத்தாள் அவள். ''மிஸ் லூயிசில்லை வெறும் ஜென்னிதான். எல்லோ ருமே என்னை ஜென்னி என்று அழைத்துத்தான் எனக்குப் பழக்கம். அதாவது பாஸ் தவிர'' என்று சிரித்தாள் அவள்.

உமாவின் உள்ளத்தில் கதகதப்பான இனிய உணர்வு ஒன்று பரவியது. சில காலமாகப் பனிக்கட்டியின் வலி தரும் குளிரை மட்டும் அனுபவித்திருந்தவர்களுக்கு இந்த உணர்வு, இதமாக இருந்தது. 'ஜென்னி' என்று இரு கரங்களையும் நீட்டினாள்.

உமாவின் வெண் கரங்களை ஆர்வத்துடன் பற்றிக் கொண்டே ஜென்னி வியப்புடன் ''நீங்கள் எவ்வளவு அழ காக இருக்கிறீர்கள்'' என்றாள்.

உமாவின் முகம் வெளிறியது. சமாளித்தவளாக ''என்ன ஜென்னி எனக்கு மட்டும் மரியாதையா?'' என்று குற்றம் சாட்டினாள்.

''இனி இல்லை உமா'' என்றவள் பிறகு நேரம் போவது தெரியாமல் ஏதேதோ கதை அளந்தாள். காஷியர் மூக்குக் கண்ணாடியைத் தூக்கிக்கொண்டு உர்ரென்று பார்ப்பது, ஸ்டெனோ நிர்மலாவும் அவள் டெஸ்பாச்சிங் கிளார்க்குடன் குழைவதும், சரியாக பஸ் நேரத்தில் ஜோடி சேரும் மணி வேல்... ஜென்னியின் வாய் மூடவே இல்லை. உமா வியப்பு டன் கேட்டுக்கொண்டிருந்தாள். அவளும் தான் ஒருகாலத்தில்



வேலைக்குப் போனாள் வந்தாள். இதுமாதிரி எதையுமே காணவில்லையே.

தன் வியப்பை வாய் திறந்து சொல்லியும் விட்டாள். இப்போது ஜென்னி வியந்தாள். ''நீ வேலைக்குப் போனாயா எங்கே?''

''லால்ஜி கம் பிளாஸ்டிக்.''

''அங்கேதான் இன்னமுமா?'' என்று யோசனையின்றிக் கேட்டுவிட்டு நாக்கைக் கடித்தாள் ஜென்னி.

உமாவின் முகம் வாடியது.

சட்டென ஜென்னி கேட்டாள். ''உமா நீ பாஸ் மேல் காதல் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி விட்டாயா?''

''அப்படியிருந்தால்கூட எவ்வளவு நன்றாகயிருக்கும்?''

''ஜென்னி'' என்று தன் அகன்ற விழிகளால் அவளைப் பார்த்தாள் உமா.

மெல்ல மெல்ல அந்த விழிகளில் நீர் நிறைவதை கண்டதும் ஜென்னிக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது.

''கஷ்டமாயிருந்தால் சொல்ல வேண்டாம் உமா. அதெல்லாம் தெரியாமலே எனக்கு உன்னைப் பிடிக்கிறது'' என்று தோழியின் கண்ணீரைத் துடைத்தாள்.

கண்ணீர் பெருகியதை அப்போதுதான் உணர்ந்தவளாகச் சிறு வெட்கத்துடன் முறுவலித்தாள் உமா.

செந்திரு உள்ளே வந்தாள். ''அய்யா கார் டிரைவரு இந்த கடுதாசி கொடுத்தாக'' என்று ஓர் உறையை உமாவிடம் கொடுத்துவிட்டுப் போனாள்.

கடிதம் ஜென்னிக்கு என்று கண்டு அவளிடம் கொடுத் தாள் உமா.

உறையினுள் இருபது நூறு ரூபாய் நோட்டுகளும் ஒரு கடிதமும் இருந்தன.

''உமா கட்டிய சேலையுடன் வந்தாள். மாற்றுடைகள் மற்றும் தேவைப்படும் எல்லாமே வாங்கிக்கொள்ள உதவி செய். சிக்கனம் தேவையில்லை'' என்று ஆனந்தன் எழுதியிருந்தான்.

துள்ளிக்கொண்டு கிளம்பினாள் ஜென்னி. ''இரண்டாயிரம்! இரண்டு ஆயிரம் ரூபாய்! வா உமா கடைக்குப் போகலாம். வா வா... என்ன உமா?''

திடுக்கிட்டு எழுந்தாள் உமா ''என்ன சொன்னாய்? போகலாம் என்றா? போகலாமே... ஆனால் ஜென்னி நீயே போய் வாங்கி வந்துவிடேன்.''

''ஏன் உமா?'' என்று ஜென்னி திகைத்தாள்.

''ஜென்னி நான்... எனக்கு'' எனுமுன் உமாவின் கண்கள் கலங்கிச் சிவந்தன. ''வேண்டாமே ஜென்னி நீ மட்டும் போயேன்'' என்றாள் இறைஞ்சுவது போல.

ஜென்னிக்கு ஒரே ஆச்சரியம். ஆயினும் உமாவை வற்புறுத்த மனம் இல்லாமல் அவளது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டாள்.

''சரிதான் உமா. நானே போகிறேன். ஆனால் இதற்கெல்லாம் கலங்க வேண்டுமா? பிடிக்கவில்லை என்றால் பளிச் சென்று ஒரே வார்த்தையில் முடித்துவிட வேண்டியதுதானே'' என்றாள் அலட்சியமாக.

''அது எவ்வளவு எளிதல்லவே'' என்றாள் உமா உணர்ச்சியற்று.

உமா எதையோ உட்கருத்தாகக் கூறுவது போல ஜென்னிக்கு தோன்றியது. அதைக் கேட்கப் போய் அவள் மீண்டும்



அழுதுவிடக் கூடாதே என்று அஞ்சிப் பேச்சை வேறுபுறம் திருப்பினாள். ''உனக்கு என்ன நிறம் பிடிக்கும்?''

''எந்த நிறமானால் என்ன ஜென்னி?''

''எந்த நிறமும் உனக்கு அழகாகத்தான் இருக்கும். ஆனாலும் உனக்கு மிகவும் பிடித்தமான நிறம் என்று ஏதாவது இருக்கும் இல்லையா?''

உமாவின் பார்வை சன்னல் வழியே வெளியே சென்றது. ''வானத்தின் நிர்மலமான நீலநிறம் என்றால் எனக்குப் பிரியம் அதிகம்'' என்றாள் ஒரு பெருமூச்சுடன்.

''அங்கேயும் இதே வானம்தான் சுதந்திரமான வானம்'' நடுங்கிய உதட்டைப் பற்களால் அழுத்திக் கொண்டாள் உமா.

ஜென்னி புரியாமல் விழித்தாள்.

இவள் — இந்த உமா எப்படிப்பட்டவள்; வழி தப்பிப் போன குழந்தைபோல இவள் மிரள்வதும் கலங்குவதும் இவள் இருக்கும் இந்த இடத்துக்குப் பொருந்தவில்லையே.

ஆனந்தன் எவ்வளவோ வம்புகளின் நாயகனாக இருந்த போதிலும் குலமகளிடம் அவன் கைநீட்டியதாக எந்தக் கதையுமே கூறவில்லை.

ஆனாலும் அவன் இவளை இங்கே ஏன் அழைத்து வரவேண்டும்? இந்த இரண்டாயிரம் ரூபாயை இவளுக்காக ஏன் செலவிட வேண்டும்?

தூய்மையான பாசம், இரக்கம் என்றெல்லாம் எண்ணிக் கொள்ளும் அளவுக்கு ஜென்னி பாப்பா அல்ல. ஆனால், உமாவைத் தவறாக எண்ணவும் அவளுக்கு மனம் இல்லை.

ஜென்னிக்கு தன்னிடமே கோபம் வந்தது. உமாவின் பின்னணியைப் பற்றி அவளுக்கு என்ன? ஆனந்தன் அவளு

டைய முதலாளி. அவனுடைய குடும்பம் நடுத்தெருவில் நில்லாதபடி கைமாறு கருதாமல் காத்தவன். ''இந்தப் பெண் ணுக்கு உதவு'' என்பது அவனது கட்டளை. செய்து விட்டுப் போவது ஜென்னியின் கடமை. அவ்வளவுதானே, இதில் ''நதி மூலம் ரிஷி மூலம்'' ஏன் நோக்க வேண்டும்? இந்தப் பெண் பத்தினியாக இருந்தால் என்ன? அன்றி பத்துப் பேருக்கு முந்தானை விரித்தவளாக...

சே. சே. சே. உதட்டைக் கடித்துக்கொண்டு ஜென்னி எழுந்தான்.

''நான் வரட்டுமா உமா? உன் சைஸ் என்ன? முப்பத்தி நாலு சரியாக இருக்குமா? பாவாடை அளவு என்ன?''

''முப்பத்தெட்டு'' என்றாள் சன்னமான குரலில்.

''லாடின் பிடிக்குமா? டஃபேடாவா?''

''அய்யோ வேண்டாம் ஜென்னி சாதாரணமாகப் பருத் தித் துணி போதும். இரண்டே இரண்டு செட் வாங்கு. அதற்கு மேல் எதுவும் வாங்காதே.''

ஜென்னி வாயைப் பிளந்தான், ''இரண்டாயிரம் இருக்கி றது உமா. உனக்கு மட்டும்தான். சிக்கனம் வேண்டாம் என்று பாஸ்...''

''இல்லை ஜென்னி. நான் சொன்னதுபோல வாங்கு போதும். மீதியை அவரிடம் திருப்பிக் கொடுத்து விடு'' என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள் உமா.

''அது சரிதான்... ஆனால் பேஸ்ட், சோப் ஏதும் வேண் டாமா? அல்லது கரிப்பொடியில் பல் துலக்கி, செங்கல்லால் உடம்பு தேய்த்துக் கொள்வாயா?''

உமா சிரித்து விட்டாள். ''அதெல்லாம் வாங்கு. ஆனால் மற்றது நான் சொன்னது போல வாங்கு'' என்று முறுவல் செய்தாள்.



சிரித்துக்கொண்டே சென்ற ஜென்னி ஒருமணி நேரத்தில் திரும்பி வந்தான்.

உமா சொன்னபடியே வாங்கியிருந்தாலும் எல்லாமே உயர்ந்த ரகமாக வாங்கியிருந்தான் ஜென்னி.

உமாவுக்காகச் சில கதை புத்தகங்களும் வாங்கியிருந் தான். உமாவின் நன்றியைப் பெற்றுக் கொண்டு பறந்தான்.

உமா குளித்து உடை மாற்றிக்கொண்டு வரவும் செந்திரு சிற்றுண்டியுடன் காத்திருந்தாள். ''அவசரத்துக்கு உப்புமா தாம்மா முடிஞ்சுது. நாளைக்கு ஊறப்போட்டுத் தரேன்'' என்று சமாதானம் கூறினாள்.

அவளுக்கு திருப்தியாக இருந்தது. ''அட வாசனை பிரமாதமாக இருக்கிறதே'' என்றபடி உண்ணத் தொடங்கி னாள் உமா. பல நாட்களுக்குப் பின்னராகக் குறுக்கீடற்ற உணவாக இருந்தபோதும் அவளால் சுவைத்து உண்ண முடியவில்லை. உண்ணும் ஒவ்வொரு கவளமும் விலங்காக மாறி அவளைப் பிணைப்பதுபோல உணர்ந்தாள். செந்திரு வின் திருப்திக்காக வலுக்கட்டாயமாகச் சிறிது உண்டுவிட்டு எழுந்தாள்.

''என்னாங்கம்மா, கொறிக்கிறீங்களே'' என்று குறைபட் டாள் செந்திரு.

''உன் உபசாரமே வயிறு நிறைந்து போயிற்று'' என்று முறுவலித்துவிட்டு ''உன் புருஷனுக்கும் வைத்துக் கொடுத்து, நீயும் சாப்பிடு செந்திரு. சாப்பிட்ட பிறகு சொல்'' என்று அனுப்பினாள்.

கணவனுக்கு உணவு படைக்கையில் ''இந்தம்மா குணசாலியாகத் தெரியுதே மச்சான்'' என்றாள் செந்திரு.

அவள் உணவருந்திவிட்டு வந்ததும் மதிய சமையலைப் பற்றி உமாவிடம் கேட்டாள். ''நீங்க எது வேணுமோ சொல்லுங்க அம்மா செய்யறேன்.''

''நானும் வருகிறேன் இருவருமாகச் செய்யலாம்'' என்று கிளம்பினாள் உமா.

''அய்யோம்மா'' என்று செந்திரு பதறிப் போனாள். ''அதெல்லாம் எங்க வேலையம்மா. நீங்க ஏன் கஷ்டப்படணும்?''

''கஷ்டமா? பெண்களுக்கு இதெல்லாம் ஒரு கஷ்டமா செந்திரு? இல்லவே இல்லை. உண்மையான கஷ்டங்கள் வேறே இருக்கின்றன. ஆனால் அந்தக் கஷ்டங்கள் பெண்ணாகப் பிறந்த யாருக்குமே வரக்கூடாது.''

''என்னம்மா சொல்றீங்க?'' என்று விழித்தாள் வேலைக்காரி.

''ம்? ஒன்றும் இல்லை. சமையல் செய்வது என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும்'' என்று நடந்தாள் உமா.

உமாவின் எளிய சமையல் விரைவிலே முடிந்துவிட இருவருமாக வீட்டை சுத்தம் செய்தனர்.

அதற்குள் ஒரு பெரிய 'வானி'ல் சாமான்களுடன் ஜென்னி வந்தாள். டிரஸ்சிங் டேபிள், சிறு மேசைகள், கட்டில்...

''இதெல்லாம் ஏன் ஜென்னி?'' என்றாள் உமா தயக்கத்துடன்.

'உஷ்' என்று அவளை அடக்கிவிட்டு சாமான்களுடன் வந்தவர்களை விட்டே அவைகளை ஆங்காங்கே அடுக்கச் சொன்னாள் ஜென்னி.



''உனக்கு மாடியில் வலப்பக்க ஓரமாக உள்ள இளம் பச்சை வண்ண அறையைத் தயார் பண்ணச் சொன்னார் பாஸ். அடுத்த அறை அவருக்கு...'' என்று மாடிக்குப் போனாள் ஜென்னி.

சற்று நின்றுவிட்டு தானும் சென்றாள் உமா.

பெரிய அறை. ஒரு புறமாக டிரஸ்சிங் டேபிள், கடைசல் கால்களுடன் சிறு மேசை. குஷன் வைத்த நாற்காலி. பெரிய கட்டில், பத்துப் பேர் படுத்துப் புரளலாமே?

பேச்சின்றித் திரும்பிக் கீழே இறங்கி வந்தாள் உமா.

இப்போது இந்த வீட்டை விட்டு வெளியேறினால் அவளை யார் தடுக்கக்கூடும்?

தன்னையறியாமலேயே போர்டிகோவில் இறங்கினாள்.

எங்கிருந்தோ சம்பந்தம் ஓடிவந்தான். செந்திருவுக்குக் குரல் கொடுத்துவிட்டு ''வெளியே எங்காணும் போவணுமாம்மா? நானும் செந்திருவும் துணை வாரோம். எதுக்கும் அய்யாவுக்கு போன் பண்ணிச் சொல்லிவிட்டுப் போவலாம்'' என்றான் வழியை மரியாதையுடன் மறைத்தபடி.

இந்த சம்பந்தமும் செந்திருவும் அவளுக்குக் காவலர்களோ? அப்படியும் இருக்க முடியுமா? ஆனால் முடியாதது என்று உலகில் ஏதாவது இருக்கிறதா? அதாவது நெஞ்சில் திடமும் வலுவும் உள்ளவர்களுக்கு?

இந்த உமாவுக்குத்தான் எதுவும் இயலாதது ஆகி விட்டது. எல்லாமே பயமாகிவிட்டது. இங்கே இருக்கவும் அச்சம். துணிந்து வெளியேறவும் பயம். நெஞ்சின் படபடப்பை மறைத்தபடி மெல்ல உள்ளே திரும்பிச் சென்றாள்.

மாலையில் சுமார் ஆறு மணிக்கு வெளியே கார் ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து ஆனந்தனின் குரல் கேட்டது.

உமா நின்ற இடத்திலேயே பாறையாய் உறைந்தாள்.

# 4

அந்தி சாய்ந்தால் ஊருக்கெல்லாம்தான் இருட்டுமா? உமாவுக்கும் ஒளி விளக்கின் வெளிச்சத்தில்கூட எல்லாம் இருண்டாற்போலத் தோன்றியது. சிலை போல நின்றாள்.

பல அட்டைப் பெட்டிகளைச் சுமந்தபடி சம்பந்தம் ஆனந்தனின் பின்னே வருவதும், ஆனந்தனின் விழி அசைவில் அவைகளை சோபாவில் கிடத்திவிட்டுச் செல்வதும் வெறித்த விழிகளில் பட்டன. ஆனால் கருத்தில் பதியாது.

ஆனந்தன் அவள் எதிரே வந்து சற்று நேரம் பேசாது நின்றான். பிறகு விரலால் அவள் விழி எதிரே ஒரு சொடக்குப் போட்டு விட்டுக் குறுஞ்சிரிப்புடன், ''உன் வீட்டுக்கு வந்தால் ஒரு புன்னகையோ, வா என்ற வரவேற்போ கிடையாதா, உமா?'' என்றான் கேலியாக.

வாடையின் அச்சம் சற்று அகன்றதோ. சற்று நிமிர்ந்து மெல்ல, ''வாருங்கள். உட்காருங்கள். வந்து...'' என்று தடுமாறினாள்.

''வந்து?''

''வந்து காபி சாப்பிடுகிறீர்களா?''

''டிபன் என்ன, உமா?'' என்றான் அவன் வெகு அக்கறையாக.

சற்றுத் திகைத்துவிட்டு, ''செய்யவில்லையே, காபி தான்'' என்று சொல்லி வருகையிலேயே அவன் முகத்தில் ஜொலித்த கோபத்தைக் கண்டு நிறுத்திவிட்டாள் உமா.



''செய்யவில்லை? ஏன் செய்யவில்லை? செய்யவில்லை என்றால் நீ எதை உண்டாய்? செந்திரு'' என்று அதட்டி அழைத்தான் அவன்.

அச்சத்துடன் ஓடோடி வந்து ஒடுங்கி நின்றாள் வேலைக்காரி.

''அம்மாவுக்குச் சாப்பாடு கவனித்துச் செய் என்றால் டிபன்கூட இல்லாமல் நீ அவளைப் பட்டினி போட்டாயா?'' என்றான் கடுமையாக.

''அவள் செய்வதாகத்தான் இருந்தாள். நான்தான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன்'' என்று அவசரமாகக் குறுக்கிட்டாள் உமா.

''மிச்சம் பிடித்தாயாக்கும்? அனாவசியம், இந்தச் செலவில் நான் பிச்சைக்காரன் ஆகிவிட மாட்டேன்'' என்றான் அவன் குத்தலாக.

இதற்கு பதில் சொல்லத் தெரியாமல் உமா பேசாது நின்றாள்.

சற்று நேரம் அமைதி நிலவியது.

ஆனந்தன் மீண்டும் செந்திருவுடன் திரும்பினான். ''இதோபார் செந்திரு. இந்த அம்மா சொன்னார்கள் என்று சமையலில் சிக்கனம் பார்க்க வேண்டாம். எந்த வேளையானாலும் சரி நான் வந்தால் சாப்பிடக் கூடியதாக இந்த வீட்டில் உணவு இருக்கு வேண்டும். தெரிகிறதா?''

''சரிங்கய்யா'' என்றாள் செந்திரு நடுக்கத்துடன்.

வினாடிக்குள் ஆனந்தன் முகத்தில் கடுமை மறைந்தது. ''செந்திரு, அம்மா மெலிவாக இருப்பது தெரிகிறதா?''

''ஆமாங்கய்யா.''

''இது மாற வேண்டும். அதாவது முருங்கைக்காய் மாதிரி இருக்கும் இந்த அம்மா, பூசணிக்காய் மாதிரி ஆக வேண்டும். அதற்கு முழுப் பொறுப்பும் நீதான் புரிந்ததா?'' என்றான் லேசான சிரிப்புடன்.

செந்திருவும் முகம் மலர்ந்தாள். ''சரிங்கய்யா.''

''நல்லது போ'' என்று அவளை அனுப்பிவிட்டு உமாவிடம் திரும்பினான் ஆனந்தன்.

என்ன சொல்லப் போகிறானோ என்று பயத்துடன் நின்றாள் உமா.

''உனக்கும்தான் உமா இந்தச் சிக்கன நடவடிக்கை ஆள் எல்லாம் தேவையில்லை. அப்புறம் இரண்டே இரண்டு நூல்சேலை என்றெல்லாம் இருக்க வேண்டாம். இந்தச் சேலைகளை எல்லாம் எடுத்துக் கட்டு. என் பார்வையில் நீ பளிச்சென்று நிற்க வேண்டும். மேலே பணம் தேவைப்பட்டாலும் கேள் தருகிறேன். அடுத்து...'' என்று அவள் அருகில் வந்தான். ''உனக்கு நகைகள்...''

''வேண்டாமே'' என்று ஒரு தவிப்புடன் விலகினாள் உமா.

கூர்மையாக அவளைப் பார்த்துவிட்டு ''ஏன் வேண்டாம்? காதிலும் கழுத்திலும் இந்தப் போலிகளை அணிந்து கொண்டு நீ நிற்பாயா? எனக்கு அது பிடிக்காது'' என்றான் அழுத்தமாக.

உதடுகளை அழுந்த மூடியபடி அவள் அசையாமல் பிடிவாதத்துடன் நின்றாள்.

அவன் தன்னையே பார்ப்பதை உணர்ந்த போதும் தளராமல் மறுப்பை முகத்தில் காட்டியபடி நின்றாள்.



சில கணங்களில் அமைதிக்குப்பின் சட்டென நகைத்தான் ஆனந்தன்.

உமா திகைத்து விழித்தாள்.

அவன் சிரிப்பை நிறுத்தி ''ஆல்ரைட் உமா. மலிவாக மிக மிக மலிவாக மெல்லியதாக ஏதாவது வாங்கிக்கொள் வைரம், முத்து, பவளம் என்று வேண்டாம். சரிதானா? இப்போது...'' என்று டையைத் தளர்த்தி ஒரு சோபாவில் சாய்ந்து சிகரெட்டை எடுத்தபடி ''எனக்கு ஒரு கப் காபி தருகிறாயா?'' என வினவினான்.

திரும்பவும் திகைத்துவிட்டு உள்ளே விரைந்தாள் உமா.

மீண்டும் அவள் திரும்புகையில் அவளுடைய கைகளில் லேசான நுரையுடன் கூடிய காபி மணத்தது.

காபியை வாங்கிக் கொண்டு ''உட்கார், ஆமாம் உனக்கு?'' என்று கேட்டான் ஆனந்தன்.

''அப்போதே ஆயிற்று'' என்று எதிரே அமர்ந்தாள் உமா.

''எனக்காக காத்திராமலா?'' என்று வெகு ஆச்சரியமாகப் புருவங்களை உயர்த்தினான் அவன்.

''காத்திருக்க வேண்டியவள்'' என்று கூறாமல் கூறுகிறானா? திணறிப்போய்த் தயங்கியவாறே மெல்ல அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள் உமா.

அவன் முகத்தில் ஒரு குறும்பான முறுவலை மட்டும் காணவும் அவள் புதுமுகம் மெல்ல மெல்ல இயல்பாயிற்று.

அவளது முகமாற்றங்களைக் கவனியாதவன் போல ஏதேதோ பேசினான் அவன். ஜென்னியைப் பற்றிச் சொன்னான். ''அவளை இங்கே அடிக்கடி வந்து போகச் சொல்லியிருக்கிறேன், கலகலப்பான பெண், சிரிக்காமல் பேசவே

வராது அவளுக்கு. ஆனால் ஒன்று. இவள் எல்லாம் பேசாமல் திருமணம் செய்துகொண்டு, குதூகலமான ஒரு குடும்பத்தை உருவாக்கலாம். அலுவலகத்தில் வந்து வேலை செய்கிறேன் என்று அடுத்தவர்கள் வேலையையும் அரட்டையால் கெடுக்காமல் இருக்கலாம்.''

''பிரியமாகப் பழகுகிறாள்'' என்றாள் உமா முகமலர்ந்து.

''நல்ல குணமும்கூட, அவளுடைய அண்ணன் ராபர்ட்ஸ் என்னோடு படித்தவன். மடையன் ஒரு காதல் தோல்வியில் சட்டென மனம் உடைந்து வாழ்க்கையை முடித்துக் கொண்டான் கோழை!''

''கோழை என்று எப்படிச் சொல்லுவது? தன் வாழ்வைத் தானே முடித்துக்கொள்வது என்றால் அதற்கே எவ்வளவு துணிவு வேண்டும். அம்மாடி'' என்று உடல் சிலிர்த்தாள் அவள்.

''ஆமாம். மெச்சிக்கொள்ள வேண்டியதுதான். பிரச்சினைகளை எதிர் நோக்கத்தான் துணிவு வேண்டும். துன்பத்தைச் சுமந்து வாழத்தான் தைரியம் வேண்டும். இது ஓடிமறையும் பேடித்தனம்.''

''அப்படிப் பிரச்சினைகள் உங்களுக்கு நேர்ந்திருந்தால் இப்படிப் பேசமாட்டீர்கள். தலைவலி தனக்கு வரும்போது அல்லவா தெரியும்.''

சட்டென பார்வை கூர்மை பெற ''ஆகா. உலகமகா அனுபவசாலி பேசுகிறாயாக்கும். எங்கே உன் அனுபவங்களைத்தான் சொல்லேன் தெரிந்து கொள்கிறேன்'' என்று சிரித்துக்கொண்டே கேட்டான் ஆனந்தன்.

உமா அவன் சிரிப்பையோ கூரிய பார்வையையோ கவனிக்கவில்லை. கால் மீது சுருண்டு கிடந்த சேலையை நன்கு இழுத்து விட்டாள்.



அவன் உச்சுக் கொட்டினான். ''என்னவோ அவன் போய்விட்டான். வீட்டில் கஷ்டம் உதவுங்கள் என்று வந்தாள். சரிதான் என்று அவனுக்காக இந்தக் கிலு கிலுப்பையை வேலைக்குச் சேர்த்தேன்'' என்று முடித்தான் ஆனந்தன்.

''கிலுகிலுப்பையா?'' உமாவின் முகத்தில் வியப்பைக் கண்டதும் ''ஏன் பெயர் பொருத்தமாக இல்லையா?'' என்று கேட்டான் அவன்.

''நிரம்பப் பொருத்தமாக இருக்கிறதே என்று பார்த்தேன்'' என்று புன்னகை செய்தாள் உமா.

ஆனந்தன் சிரித்துக் கொண்டே எழுந்தான். ''இரவு உணவுக்கு என்ன வைத்திருக்கிறாய் உமா?''

திடுக்கிட்டு எழுந்தாள் உமா — இரவு உணவு! அப்ப யானால்...? நேற்று எவ்வளவு ஆயிரமோ அப்புறம் இர் துணிமணிகள் — இதற்கெல்லாம் அவன் கொடுத்த வில அதன் பெருமானாம்? விக்கித்துப் போய், அவன் அருகில் வருவதைப் பார்த்துச் செயலற்று நின்றாள் உ

ஆனந்தன் குரல் தாழ்ந்தது. ''நேற்று என்னை ' வாய் தானே, உமா? நல்ல ரஷியன் காமிரா'' என்று சிரித்தபடி அவள் கன்னத்தை நிமிண்டினான் அவ

உமாவின் அகன்ற விழிகள் மேலும் அகல முகத்தில் அச்சத்துடன் நிலைத்தன.

து
ல்
தி
வல்

# 5

உமாவின் முகத்தில் அச்சம் நிறைந்திருந்தது. ஆனால் ஆனந்தன் அதைக் காணாதவன் போலப் பேசினான்.

''அடேயப்பா! எனக்குச் சாப்பாடு போட வேண்டுமே என்றா இவ்வளவு கவலை? வேண்டாம் தாயே வேண்டாம். நான் என் அம்மா வீட்டில் சாப்பிட்டுக் கொள்கிறேன். இங்கே செந்திருவும் சம்பந்தமும் கீழே படுத்துக் கொள்வார்கள். வெளியே ''சிங்'' அதுதான் நம் நாய். சுற்றும், உனக்குத் துணை போதும் அல்லவா? பயமற்றுத் தூங்கு'' என்றபடியே டையை மீண்டும் சரியாகக் கட்டினான்.

''வரட்டுமா, உமா? முடிந்தால் நாளை வருகிறேன்'' என்று கிளம்பினான்.

மந்திரக்கோலை ஆட்டினாற்போல உமாவின் முகத்தில் அச்சம் மறைந்தது முகம் மலர்ந்தது. முறுவலுடன் விடை கொடுத்தாள்.

அன்று உறங்குமுன் உமாவுக்கு ஏதேதோ சிந்தனைகள் என்னென்னவோ நினைவுகள்.

எளிமையிலும் இனிமையாகக் கழிந்த இளமைப் பருவம். அதன்பின் சென்ற சில மாதங்களில் நடந்த நிகழ்ச்சிகள் சில மாதங்கள் தானா? எத்தனையோ ஆண்டுகள் போல முடிவுற்றுத் தோன்றினவே?



ஆனால் நினைவுகள் அதிகம் ஓடவில்லை. அச்சமும் அருவருப்பும் சேர்ந்து விலக்கி வைத்திருந்த உறக்கம் அன்று தடையற்று வந்தது. போராடிக் களைத்த உடல் அயர அடித்துப் போட்டாற்போல உறங்கி விட்டாள்.

மறுநாள் காலையில் எழுந்து பார்க்கும்போது சற்று நேரம் உமாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. புரிந்தபின் நேற்றைய நிம்மதி மறைவதை உணர்ந்தாள். பல் துலக்கிக் குளித்துவிட்டு அமர்ந்து யோசிக்கலானாள்.

முன் தினம் திரும்பிச் சென்று விட்ட போதிலும் ஆனந்தன் தன்னை இந்த வீட்டுக்கு அழைத்து வந்ததன் நோக்கத்தை உமாவால் அனுமானிக்க முடிந்தது.

அருவெறுப்பாக இருந்தாலும் அந்த வார்த்தை ஆசை நாயகிதான் கிட்டத்தட்ட வேசியின் நிலை.

அந்த நிலையில் உமா வாழ்வதா?

எத்தனையோ உயர்ந்த கோட்பாடுகளைக் கற்றுக் கொண்ட உமா, இந்த நிலைக்கு இறங்குவதா?

ஒரு நாளும் இல்லை.

நிச்சயமாக இல்லை.

உமா உறுதியுடன் நிமிர்ந்தாள்.

இந்த சம்பந்தத்தை மீறிக் கொண்டு செல்ல வேண்டியது தான். ஆனந்தன் வாங்கித் தந்த எதுவும் வேண்டாம்.

ஆனால் அவன் இவளுக்காகக் கனகலிங்கம் வீட்டில் கொடுத்த ஆயிரம்? அதை எப்படியாவது உழைத்து சம்பாதித்துத் திருப்பிவிட வேண்டியதுதான்.

இங்கே பஸ் எந்தப்பக்கம் வரக்கூடும்? மாடி ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள் உமா.

எட்டிப் பார்த்தவள் அப்படியே முகம் வெளுத்துச் சோர்ந்து போனாள்.

அங்கே கேட்டைத் திறந்தபடி செண்பகமும் கனகலிங்கமும் நின்றார்கள்.

முகம் எல்லாம் வியர்வை ஆறாகப் பெருக, சற்று மறைவாக நின்றபடி வெளியே கவனித்தாள்.

கடப்பாறையைக் கையில் பிடித்தபடி சம்பந்தம் அவர்களை மறுத்து ஏதோ சொல்லிக் கொண்டு இருந்தான். உள்ளேவிட மறுத்தானோ?

செண்பகம் சம்பந்தத்தைப் பிடித்துத் தள்ளுவதைக் கண்டதும் உமாவின் இதயம் ஒரு கணம் நின்றது. ஓடியே போய் அறைக்கதவை உள்ளே தாழிட்டுவிட்டு மீண்டும் வந்து நின்று கவனித்தாள்.

அதற்குள் சம்பந்தத்தின் குரல் ஒலியில் ஒரு பெரிய நாய் ஓடி வந்தது.

நாயைக் கண்டதும் செண்பகம் தம்பதிகள் வாயிலை நோக்கி மீண்டும் ஓடக்கண்டாள்.

செண்பகம் ஏதோ உரக்கக் கூவுவது தெளிவற்றுக் கேட்டது.

உமா சோர்ந்து போய்த் தலையைப் பிடித்துக்கொண்டு படுக்கையில் உட்கார்ந்தாள்.

மீண்டும் சிந்தனை அலை.

கிட்டத்தட்ட வேசி போல வாழ்வதா? அல்லது வேசியாகவே வாழ்வதா?



ஆனந்தன் அனேகமாக நாள்தோறும் அங்கே வந்தான். பெரும்பாலும் மாலையில் அலுவலகம் முடிந்து செல்லும் போது இங்கே வந்துவிட்டு போவான். ஏதேனும் நிகழ்ச்சிகள் இருந்து வரமுடியாது போகுமானால் டெலிபோன் செய்வான்.

இங்கே வரும்போது, 'உண்டாயா, உறங்கினாயா', என்று பொதுப்படையான விசாரிப்புகள் இருக்கும். சிரிக்க, ரசிக்க என்று சில நிகழ்ச்சிகளைப் பற்றி கூறுவான். பிறகு உமாவின் முகம் மலர்ந்து இருக்கையிலேயே கிளம்பி விடுவான்.

ஆனால் எப்படியும் அவன் தினமும் தன்னை உணர்த்திக் கொண்டே இருந்தான். அவளிடம் முதலில் இருந்த இறுக்கம் மறைந்து உமாவும் ஆனந்தனிடம் இயல்பாகப் பேசிச் சிரிக்கலானாள். அவன் ஒரு நாள்கூட அங்கேயே தங்கிவிட முயற்சிக்கவில்லை என்பதும் அவளது இந்த நெகிழ்வுக்குக் காரணமாக இருந்தது.

சில சமயங்களில் — வெகு சில சமயங்களில் உமா சங்கடப்பட்டு விடுவதும் உண்டுதான்.

ஒரு நாள் அவன் அளித்த சிற்றுண்டியைப் பாராட்டி அவள் கரங்களைப்பற்றி அழுத்தி விட்டான். உமா சட்டெனக் குலுங்கிப் போனாள்.

மற்றொரு நாள் ஏதோ கிண்டலாகச் சொல்லிவிட்டு அவள் சற்றுக் குறும்பாக நகைத்தாள். அவன் முன்னே சாய்ந்து அவளுடைய இதழ்களில் லேசாகச் சுண்டிவிட்டு எழுந்தான். உமாவின் முகம் குப்பென்று சிவந்து வியர்த்ததை அவன் கண்டு கொண்டதாகத் தெரியவே இல்லை.

அன்று அவன் சென்ற பிறகு உமா யோசித்தாள். ஒரு வேளை பணக்கார வாலிபனான ஆனந்தன் பழகும் வட்டாரத்

தில் ஆணும் பெண்ணும் சாதாரணமாக தொட்டுப் பேசுவது இயல்புதானோ? அவளுக்குள்ள பயத்தில் தான் ஏதேதோ தப்பும் தவறுமாகத் தோன்றுகின்றனவோ? அல்லது நம் ஆதரவில் வாழ்கிறவள்தானே என்று அவன் தான் அதிக உரிமை எடுத்துக் கொள்கிறானோ? கவனமின்றிச் சில சமயங் களில் சூடு அதிகம் பட்டுவிட்ட போதிலும் நெருப்பில் குளிர் காய்வதுபோல உமாவுக்கு சுகமாகத்தான் இருந்தது.

''நெருப்பில் குளிர் காய்ந்தவன் தீப்பிடித்துச் செத்தான்!'' என்று செந்திருவின். குரல் உரக்கக் கேட்கவும் உமாவுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

பதட்டத்தை மறைக்க முயன்றவாறே, ''என்ன செந் திரு?'' என்று விசாரித்தாள்.

''பேப்பரிலே பாருங்கம்மா, குளிராயிருக்குதுன்னு தீப் போட்டு தீக் காய்ஞ்சுக்கிட்டிருந்தானாம் ஒருத்தன். ரொம்ப கிட்டக்கக் குனிஞ்சிருக்கான். நெருப்பு குபுக்குனு அவன் மேலே தாவிட்டுதாம். ஆளே அவுட்டாம்மா. இன்னைக்கு தீக்கேசே ரெண்டும்மா. மச்சான் சொல்லிச்சா அதாண் படிச்சுப் பார்த்தேன்'' என்று அன்றைய தினத்தந்தியைக் காட்டினாள் செந்திரு.

தன் சிந்தனையின் போக்கிற்கும் இதற்கும்... இது உமா வுக்கு எச்சரிக்கையா? உமா திகைத்தாள்.

அடுத்த நியூசைக் கேளுங்கம்மா, 'கற்பைக் காப்பாற்ற தீக்குளித்தாள்' வூட்டிலே தனியா இருந்த ஒருத்திகிட்ட மூணு ரவுடிப்பசங்க ரகளை பண்ணி இருக்காணுங்க. தப்புறதுக்காக அவள் தம்மேலே மண்ணெண்ணெயை ஊத்தி தீ வைச்சுக் கிட்டாளாம். செத்துப்போனா, பாவம், ''ஆனா பத்தினித் தெய்வம் பாத்தீங்களாம்மா?'' என்றாள் செந்திரு.



''ஆமாம், ஆமாம், அவள் நிச்சயம் பத்தினித்தெய்வம் தான், உடம்பெல்லாம் நெருப்பு எரிவது என்றால்...'' மேலே பேச முடியாமல் உமா கண்ணீருடன் எழுந்து சென்றாள்.

அன்று இரவு உமா ஒரு முடிவுக்கு வந்தாள்.

☆ ★ ☆

மறுநாள் ஆனந்தன் வந்ததும் அவனுக்கக் காபி பலகாரம் கொடுத்து உபசரித்தபின் உமா யோசனையில் ஆழ்ந்தாள். தன் தீர்மானத்தை என்னென்ன வார்த்தைகளால் அவனிடம் சொல்வது?

அவளைப் பார்த்த ஆனந்தனின் கண்கள் கூர்மை பெற் றன. உதட்டில் புன்முறுவலுடன் ''என்ன உமா?'' என்றான்.

திடுக்கிட்டவளாக 'என்ன?' என்றாள் உமா.

கையை நீட்டி அவள் தலையைத் தொட்டு ''இந்தத் தலைக்குள் என்ன இருந்து குழப்புகிறது?'' என வினவினான்.

சற்று விலகி 'ஒன்றுமில்லை' என்றாள் உமா சுருக்கமாக.

ஆனால் அவன் குபீரெனச் சிரிக்கவும் இவள் ஒன்றும் புரியாமல் ''ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்றாள்.

''அதுவா? தலைக்குள் ஒன்றும் இல்லை என்று மறைக் காமல் சொல்லி விட்டாயே என்றுதான்'' என்று மறுபடியும் நகைத்தான் ஆனந்தன்.

''ஓ!'' என்று முகம் சிவந்தாள் உமா. பிறகு சமாளித்துக் கொண்டு ''நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. குழம்பு வதற்கு ஒன்றுமில்லை என்றேன்; அவ்வளவுதான்'' என்றாள்.

''ஆமாம், அதற்குக்கூட ஒன்றுமே இல்லைதான்'' என்று அவன் மீண்டும் சிரித்தான்.

உமாவுக்கு சிரிப்பு வந்தது.

சற்று நேரம் பொறுத்து மென்குரலில் ''என்ன உமா, விஷயம்? மீண்டும் ஒன்றுமில்லை என்று சொல்லக் கூடாது'' என்றான் ஆனந்தன்.

அவன் பார்வை புரியாவிட்டாலும் அந்தக் குரல் தந்த தைரியத்தில், ''எனக்கு ஒரு வேலை பார்த்துக் கொடுங்கள்'' என்று கேட்டு விட்டாள் உமா.

ஆனந்தனின் புன்னகை மறைந்தது. ''உனக்கு என்ன வேலை செய்யத் தெரியும்?'' என்று கேட்டான் ஏளனமாக.

கனகலிங்கத்தின் வீட்டுப் பெண்ணுக்கு என்ன வேலை தெரிய முடியும் என்ற கேள்வி அவனது பேச்சில் மறைந்திருப்பதை உமா புரிந்து கொண்டாள். முகம் சிவந்தது. ஆனாலும் விடாமல் ''டைப் ரைட்டிங், ஷார்ட்ஹாண்ட் தெரியும்'' என்றாள்.

''அடேயப்பா!'' என்றவன் முகம் சட்டெனக் கடுமையாயிற்று. ''இங்கே உனக்கு என்ன பணத்தட்டுப்பாடு?'' என்றான் சுருக்கென்று.

''நான் அப்படிச் சொல்லவில்லையே'' என்றாள் உமா கண்கலங்க.

''பின்னே எதற்காக வேலை?'' என்று அவன் மீண்டும் கடுமையாகவே கேட்டான்.

இதற்கு என்ன பதில் சொல்வது? ஓசிச் சாப்பாடு பிடிக்கவில்லை என்று சொல்வதா? அப்படிச் சொன்னதும் பின்னே விலையைக் கொடுத்துவிடு என்று அவன் கேட்டால் அப்புறம்? அவளால் முடியுமா? முடியாதே.



ஒரு காலத்தில் வேசியின் நிலைக்கு ஆசை நாயகி என்ற பதவி மேல் தான் என்று எண்ணியதும் உண்டுதான். ஆனால் தற்செயலாக அவன் விரல் படுவதைக்கூடத் தாங்க முடியவில்லையே, ''கடவுளே என்னால் முடியாது'' என்று மனத்திற்குள் முனகிக்கொண்டாள் உமா.

'கேட்கிறேனே' என்று விடாப்பிடியாக அவன் கேட்கும் குரல் கேட்டது.

''வந்து... வந்து எனக்குப் பொழுது போகவில்லை'' என்று உண்மையை மறைத்து மற்றொன்றை முணு முணுத்தாள் உமா.

அவளுடைய குனிந்த முகத்தைச் சற்று பார்த்து விட்டுப் புன்னகை செய்தான் ஆனந்தன். ''பைத்தியம். எத்தனை பேர் வேலை செய்யாமல் சோம்பலாயிருக்க விரும்புகிறார்கள். ''வேண்டுமானால் என் அலுவலகத்துக்கு வந்து பார். பாதி பேர் அப்படித்தான். நீயானால் பொழுதைப் போக்க வேலை வேண்டும் என்கிறாய்'' என்று சிரித்தான். குரலைத் தணித்து ''அதோ உமா. உனக்குப் பொழுது போக நீ நினைத்தால் வழியா இல்லை'' என்றான்.

உமா பதில் பேசவும் இல்லை; குனிந்த தலையை நிமிர்த்தவும் இல்லை.

உதட்டைக் கடித்துக் கொண்டு எழுந்தான் அவன். ''வேண்டுமானால் அந்தக் கிறுகிறுப்பையை அனுப்புகிறேன். அங்கே வேலையைக் கெடுப்பதை விடுத்து இங்கேயேனும் உதவட்டும்.''

உமாவும் பேசாமல் எழுந்து நின்றாள்.

வருகிறேன் என்று கிளம்பியவன் மீண்டும் உமாவிடம் திரும்பி வந்தான். ஒரு விரலால் பட்டும் படாமலும் அவள்

முகத்தை நிமிர்த்தினான். ''கோபமா உமா?'' என்றான் கொஞ்சம் குரலில்.

உமா சட்டென நகர்ந்து ''கோபம் கொள்ளக் காரணம் இல்லையே'' என்றாள் வறட்சியாக.

ஆனந்தனின் புருவங்கள் நெரிந்தன. சட்டெனத் திரும்பிச் சென்றான்.

வாயில் அருகில் நின்று ''உன் செலவுக்குத் தேவையான செல்வம் என்னிடம் இருக்கிறது உமா. உனக்கு வேறு வருவாய் தேவையில்லை'' என்று அழுத்தமாகக் கூறிவிட்டுப் போய் விட்டான்.

சில நிமிடங்களில் அவனது கார் வெளியே செல்லும் ஓசை கேட்டது.

அவன் சென்ற வழியே வெறித்த வண்ணம் உமா கொஞ்ச நேரம் நின்று கொண்டிருந்தாள். தன் எண்ணத்தைப் புரிந்து கொண்டு அதைத்தான் அவன் மறுத்து விட்டானோ? அதோடு... கடவுளே! உமா எப்படி மறந்தாள்.

இந்த வீட்டுக்கு வெளியே கனகலிங்கமும் செண்பகமும் இருப்பார்களே, இந்த வீட்டுக்கு வெளியே சென்றால் அவளைப் பருந்துபோலக் கொண்டு போய் விடமாட்டார்களா? அம்மா! எத்தகைய ஆபத்திலிருந்து தப்பினாள்.

ஆனால் இப்போது மீண்டும் ஒரு வழியும் இல்லாது போயிற்றே உமாவுக்கு அழுகை வந்தது.

☆ ★ ☆

அடுத்த நாள் வந்தபோது ஆனந்தன் எதுவும் நிகழ்ந்திராதது போலப் பேசினான். முந்தின நாள் நிகழ்ச்சிகள் வெகுகத்



தமாகத் துடைக்கப்பட்டு விட்டாற்போலத் தோன்றியது. அவன் சிரிக்கச் சிரிக்கப் பேசியதில் உமா ஒருவாறு மனம் தேறினாள்.

அன்றையப் பேச்சின் விளைவு ஒன்றே ஒன்று. காலை வேளைகளில் ஜென்னி அடிக்கடி வரலானாள். வந்து வெகு நேரம் அரட்டை அடித்துவிட்டுப் போவாள்.

ஜென்னிக்கு இருபத்தோராவது பிறந்த நாள் வந்து கொண்டிருந்தது. நல்லதோர் உடையைத் தேர்ந்து எடுப்பதற்காக உமாவைத் தன்னுடன் கடைவீதிக்கு வருமாறு வேண்டினாள் அவள். ஆனால் உமாதான் வெளியே என்றாலே நடுங்கிக் கொண்டு இருந்தாளே. ஜென்னி எவ்வளவோ வற்புறுத்தியும் உமா மறுத்து விட்டாள். ''இரு இரு. பாஸிடம் சொல்லுகிறேன்?'' என்று சொன்ன ஜென்னி, ஆனந்தனிடம் சொல்லியும் விட்டாள் போலும்.

மாலையில் வந்ததும் ''ஜென்னியுடன் ஏன் ஷாப்பிங் போகவில்லை உமா? எப்போது வேண்டுமானாலும் கார் தருவதாகத்தான் நான் முன்பே சொல்லியிருக்கிறேனே'' என்றான் ஆனந்தன்.

''இல்லை வேண்டாம்'' என்றாள் உமா மெல்லிய குரலில்.

அதற்குள் அவள் கண்களில் அச்சத்தைக் கண்டு விட்டானோ? ''என் காரில் டிரைவர் துணையுடன் நீ செல்கையில் யாரும் உன்னை எதுவும் செய்ய முடியாது உமா? உன்னை நெருங்கியதாக எனக்குத் தெரிந்தால் மாமியார் வீட்டுக்கே சென்றுவிட வேண்டியிருக்கும் என்று கனகலிங்கத்தை எச்சரித்து இருக்கிறேன்'' என்றான்.

விழிகள் வியப்பால் விரிய, ''எப்போது'' என்றாள் உமா.

''அன்று நீ இங்கு வந்த மறுநாள் இருவரும் இந்த வீட்டிற்கே விஜயம் செய்தார்களாமே அதன் பிறகு — ஆனால் ஒன்று உமா டிரைவர் துணையின்றி எங்கும் போய்விடாதே ஜாக்கிரதை'' என்று எச்சரித்தான் ஆனந்தன்.

அதாவது ''என் பாதுகாப்பை விட்டு விலக முயன்றால் உனக்கு ஆபத்து'' என்று கூறுகிறானா?

அதன்பின் உமா கொஞ்சம் கொஞ்சம் ஜென்னியுடன் வெளியே சென்று வந்தாள். ஆனால் பலம் தான் சைபர். ஜென்னிக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. தப்பித் தவறிப் பிடிக்கும் உடையின் விலையோ எக்கச்சக்கமாக இருந்தது. தானும் கொஞ்சம் உதவலாமே என்று உமாவுக்குத் தோன்றியது. ஆனால் ஆனந்தன் பணத்தை சொந்தமாக எடுத்துக் கொடுக்கவும் மனமில்லை. தப்பு போல் தோன்றிற்று.

அங்கே அவனது வீட்டில் தோட்டம் சாமான் என்று செலவிடுவது என்றால் அது பரவாயில்லை. இது வேறு அல்லவா?

அன்று அண்ணாசாலையில் ஒரு துணிக் கடையின் 'ஷோ கேஸை' நோட்டம் விட்டுக் கொண்டிருந்தனர் இருவரும். அங்கே விளம்பரத்திற்காக வைக்கப்பட்டிருந்த ஓர் உடையைப் பார்த்து ஜென்னி பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள். வேறு வழி? விலை இருநூறுகளும் கூடுதலாக ஓர் ஐம்பதும் ஆயிற்றே.

ஜென்னியின் முகவாட்டத்தை பொறுக்காமல் ''போவோமா ஜென்னி?'' என்று அழைத்தாள் உமா.

அப்போது அந்தக் கடையின் உள்ளிருந்து ஒரு பெண் கவனமாக கலைத்து இங்கும் அங்கும் பறக்க விட்டிருந்த கூந்தலில் இருந்து குமிழ்வைத்த அரையடி ஹீல்ஸ் வைத்த



செருப்புவரை அதி நாகரிகமான பெண் — வெளியே வந்தாள். வந்தவள் ஜென்னியைப் பார்த்து விட்டாள். ''ஏய் ஜென்னி இங்கே வாடி உள்ளே மூன்று டிரஸ் பெட்டிகள் இருக்கின்றன. எடுத்து வந்து காரில் வை'' என்று அதிகாரமாக ஏவினாள்.

உதடுகளை இறுக மூடிக்கொண்ட போதிலும் எதிர்ப்பேச்சு இன்றி ஜென்னி அவள் இட்ட வேலையைச் செய்வதைக் கண்டதும் உமா வியப்படைந்தாள். அதற்குள் அந்த நாகரிகப் பெண்ணின் பார்வை தன்மீது பதிவதை உணர்ந்து சற்றே ஒதுங்கி நின்றாள்.

''உன் முதலாளி எப்படி இருக்கிறாரடி! ஏதேதோ புதுப் பழக்கம் எல்லாம் ஏற்பட்டு இருக்கிறதாமே, தினமும் தரிச...''

ஜென்னியின் பார்வை மிரண்டு உமாவிடம் பாய்ந்து விட்டது. தவறை உணர்ந்து அவள் அவசரமாகப் பார்வையைத் திருப்புமுன் அந்தப் பெண்ணும் அதைக் கவனித்து விட்டாள்.

''ஓகோ, இதுதான் அந்தப் புதுப்பழக்கமோ!'' என்று காலோடு தலையாக உமாவை ஏற இறங்க இகழ்ச்சியுடன் பார்த்தாள் அவள்.

முகம் சிவக்க உதட்டைக் கடித்துக் கொண்டு திரும்பினாள் உமா. 'பொது இடம் இது என்பதை இந்தப் பெண் மறந்து விட்டாள் போல் இருக்கிறதே' என்று நினைத்தாள்.

அப்படித்தான் என்பதுபோல் அவள் ஆங்காரமாகக் கத்தினாள். ''ஏன்டி இதுகளோடு சுற்றி அலையத்தான் உனக்கு ஆபீசில் சம்பளமோ உனக்கு மான ஈனமில்லை? கண்ட கழுதைகளோடுகூட ஒரு தடி கழுதையாகச் சுற்றுகி

றாயே இருக்கட்டும். இதெல்லாம் எத்தனை நாள் என்று பார்க்கிறேன்'' என்று கத்தியபடி மடமடவென்று காரில் ஏறி அமர்ந்து 'ஸ்டார்ட்' செய்தாள். மரம் மாதிரி நிற்கிறாயே கொண்டுவந்து வையடி'' என்று அதட்டினாள்.

ஜென்னி அந்தப் பெட்டிகளைக் காரினுள் வைத்ததும் வைக்காததுமாகப் பேய் வேகத்தில் காரைச் செலுத்திக் கொண்டு சென்று விட்டாள்.

உமா சிலையாக நின்றாள்.

மெல்ல அவளைத் தொட்டு 'உமா' என்று கூப்பிட்டாள் ஜென்னி.

''இந்தப் பெண் யார் ஜென்னி?'' என்று மெல்லக் கேட்டாள் உமா.

அன்றுவரை அறிந்திராத விதமாக ஜென்னியின் பேச்சுத் தடுமாறக் கண்டாள் உமா. எனவே தானாகவே ''அவளது பேச்சைப் பார்த்தால் அவர் — ஆனந்தனிடம் உரிமை உள்ளவள் போலத் தெரிகிறதே உறவா?'' என்று மேலும் கேட்டாள்.

ஜென்னி நிமிர்ந்தாள். ''உமா இவள் பெயர் மாலினி. பாலின் மாமா மகள். அவரை மணந்து கொள்ளப் போகிறவளும் கூட. முறைப்படி வெற்றிலை பாக்குகூட மாற்றி விட்டார்கள். இது... இந்தச் செய்தி உனக்கு அதிர்ச்சியாக இருந்தால் என்னை மன்னித்துக்கொள்'' என்று மடமடவென்று சொல்லி முடித்து விட்டாள்.

ஜென்னியின் சங்கடத்தைப் பார்த்து உமாவுக்குப் பரிதாபமாக இருந்தது. அவள் தோளைத் தொட்டு லேசாகப் புன்னகை செய்தாள்.



''இந்த விவரம் அதிர்ச்சியாக இல்லை ஜென்னி ஆனால்...'' என்று யோசனையோடு நிறுத்தினாள் உமா.

## 6

உமா இடையில் பேச்சை நிறுத்தவே, ''ஆனால் என்ன உமா?'' என்று வினவினாள் ஜென்னி.

''ம்ம்... ஒன்றுமில்லை, வா போகலாம். நம் வேலையை முடிக்க வேண்டாமா? இன்று எப்படியும் வாங்கி விட வேண்டும் என்றாயே'' என்று தோழியை அழைத்தாள்.

ஜென்னியின் பார்வை மீண்டும் ஆற்றாமையோடு ஷோகேஸில் பதிந்தது கடைசியாக, ''ச்சு'' ஏதாவது துணியாகவே வாங்கிவிடலாம், உமா. அம்மாவும் நானுமாகத் தைத்து விடுவோம்'' என்று முடித்தாள்.

அன்று ஆனந்தன் வீட்டுக்கு வந்தபொழுது அவனிடம் ஜென்னியின் பிறந்த நாளைப் பற்றி உமா கூறினாள். ''அவளுக்கு அந்த உடையை விட்டுக் கண்ணை எடுக்கவே முடியவில்லை. கடைசியாக வேண்டா வெறுப்பாக ஒரு ஸ்கர்ட்டுக்கும் ஸ்மோக்ட் ஜாக்கெட்டுக்குமாகத் துணிவாங்கினாள். மனதில் திருப்தியே இல்லை.''

பேச்சும் ஒருபுறம் இருக்க மனம் ஆனந்தனுக்கு அருகில் மாலினியை நிறுத்திப் பார்த்து ''எனக்கும் திருப்தியே இல்லை'' என்றதும் மாலினியிடம் அகங்காரம் தெரிந்தது. ஆனந்தனும் அழுத்தம் உள்ளவன். இரண்டும் எப்படிப் பொருந்தும். ஆனந்தன் மனைவி அவன் விருப்பப்படி வளைகிறவளாக இருந்தால் அல்லவா...

''நீ அவளுக்கு என்ன பரிசு கொடுக்கப் போகிறாய்?'' என்று ஆனந்தனின் குரல் கேட்கவும் சிந்தனைக் கோவை கலைந்து உமா விழித்தாள். ''நான்... நானா...''

''பின்னே நானா. ஜென்னியின் தோழி?'' என்று பதிலுக்குக் கிண்டலாகக் கேட்டான் அவன்.

''நான், நான்தான் என்ன கொடுப்பது? நீங்களே சொல்லுங்கள்.''

''அவளுக்கு எவ்வளவுக்குச் செய்யலாம் என்று நினைக்கிறாய் உமா?''

''எவ்வளவா?'' உமாவின் குரல் கம்மியது! ''ஒரு பெரிய காரண காரியம் இல்லாமல் என்னிடம் எவ்வளவு பிரியமாக இருக்கிறாள்! அவளுக்குச் செய்வதற்கு அளவென்று எதைச் சொல்வது?''

''அடேயப்பா! அவ்வளவு அன்பா? ஆல்ரைட் உமா. நம் அலுவலக ஊழியர்களில் யாரேனும் ஏதேனும் விசேஷம் என்று வந்தால், நூறு ரூபாய் கொடுப்பது வழக்கம். ஜென்னியின் சமூகத்தில் இருபத்தோராவது பிறந்த நாள் என்பது பெரிய விசேஷம்தான். ஆகவே அந்த நூறை நான் தருகிறேன்! அந்த உடையின் விலை என்ன? இருநூற்று ஐம்பதா? நாம் இருவருமாகச் சேர்ந்து அதை வாங்கி அவளுக்குப் பரிசளித்து விடலாம்!'' என்றான்.

உமாவின் முகம் மலர்ந்தது. ''நான்கூட அப்படித்தான் நினைத்தேன். ஆனால் அதிக விலையாக இருக்கிறதே என்றுதான் தயங்கிவிட்டேன்'' என்றாள்.

''விலையைப் பற்றிய கவலை — அது எவ்வளவாக இருந்தாலும் சரிதான் — இந்தத் தலைக்கு வேண்டாம்'' என்று சற்றே முன்புறம் சாய்ந்து உமாவின் தலையை லேசாகத் தட்டினான் அவன்.



''பிறகு ஏன் உமா ஜென்னி உன்னிடம் பிரியமாக இருப்பதாய்ச் சொன்னாயே, நான் பிரியமாக இல்லையா? எனக்கு என்ன பரிசு தரப் போகிறாய்?'' என்று அவள் கையைத் தன் கையில் எடுத்து லேசாக வருடியபடி கேட்டான். பார்வை எதிர்பார்ப்புடன் அவள் முகத்தில் பதிந்தது.

உமாவின் முகம் சட்டென மாறிப் போயிற்று. மெல்லத் தன் கையிலிருந்து அவன் கரத்தை விலக்கி விட்டு காலியான காபி கோப்பைகளை எடுத்தாள். ''உங்களுக்குப் பரிசு கொடுக்கும் சக்தி எனக்கு ஏது'' என்றவள் உடனே உள்ளே சென்று விட்டாள்.

ஆனந்தனின் நெற்றி நடுவில் ஒரு முடிச்சு விழுந்தது. தோற்றுவிட்ட சினம் தோன்றியது. 'இவள் என்னதான் எண்ணிக்கொண்டு இருக்கிறாள்' என்று ஆத்திரத்துடன் எழுந்து சன்னல் அருகே சென்று நின்றான்.

குறிப்பின்றி அலைந்த பார்வை போல் சீராகச் சமப்படுத்தப்பட்டிருந்த பாத்திகள் தென்பட்டன. புதிய சுவையுடன் வெளியே வந்து பார்த்தான். வாயிற்புறத்தில் இருந்த இதய வடிவமான செங்குளத்தில் வண்ண அல்லி மலர்கள் தலைநீட்டின. குளத்தைச் சுற்றிலும் பல அழகிய வடிவங்களில் பல் பத்தைகள் பதிக்கப்பட்டிருந்தன. கார்ப் பாதையின் இருபுறத்திலும் பல இளம் செடிகள்.

''இதெல்லாம் என்ன?'' என்றான் பின்னோடு வந்த சம்பந்தத்திடம்.

''அம்மாங்கய்யா. ஜென்னியம்மா கூடப் போய் வாங்கி வந்தாங்க. நல்லாப் பூக்குமாம். பின்னாலே கூட காய்கறித் தோட்டம் போட்டிருக்காங்க'' என்றான் அவன் பெருமையாக.

''ஆக, இனிக் காய்கறிச் செலவே கிடையாது என்று சொல்'' என்று நகைத்தான் ஆனந்தன்.

அவன் சிரிப்பில் வேலைக்காரன் குழம்பிப் போனான். ஏதோ கூடச் சேர்ந்து இளித்து வைத்தான். ஆனால் எஜமானின் உள்ளம் அவனை விடவும் குழப்பம் அடைந்திருந்தது அவனுக்குத் தெரியாது.

கனகலிங்கத்தின் வீட்டுப் பெண் விரல் ஒடிய வேலை பார்க்க விழைவதும், நகைகளை மறுப்பதும் அவனுக்குப் புரியவில்லை. அவளை எப்படித் தன் காலடியில் விழ வைப்பது என்றும் தெரியவில்லை. ரஷியன் காமிராவா?

☆ ★ ☆

மறுநாள் ஆனந்தன் வெகு விரைவாக வந்துவிட்டான். அவன் ஆழ்ந்த யோசனையில் இருப்பதாகக் கண்ணும் முகமும் காட்டின.

அவசரமாகக் காபியைக் கலந்து கொடுத்தபின் ''என்ன விஷயம்'' என்று உமா வினவினாள்.

''ம்ம்... எல்லாம் உன் விஷயம்தான்'' என்றான் ஆனந்தன் ஒரு குறுஞ் சிரிப்புடன்.

உமாவின் விழிகள் அகன்றன.

''உனக்கு 'டைப்பிங்' தெரியும் என்றாயே எந்த அளவிற்கு அது உண்மை?'' குரலில் கேலி இருந்தது.

முந்தையப் பேச்சு நினைவு வரவே உமாவின் முகம் சிவந்தது. ஆனாலும் ''மெய்யாகவே எனக்கு 'டைப்ரைட்டிங்' தெரியும்'' என்று உரைத்தாள்.

''வரிக்கு எத்தனை திருத்தம் தேவையிருக்கும்?''



''ஒரு திருத்தம்கூட...'' என்று ரோஷத்துடன் நிமிர்ந்தவள் அவன் கண்களில் குறும்பைக் கண்டதும் சிரித்து விட்டாள். ''ஏன் கேட்கிறீர்கள்? சொல்லுங்கள்.''

''என் ஸ்டெனோ நீண்ட லீவில் போகிறாள். மற்ற கடிதங்கள் குறிப்புகளைப் பற்றிக் கவலையில்லை. மற்றவர்களை வைத்து சமாளித்து விடலாம். ஆனால் ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டிய விஷயங்களை பிறரிடம் கொடுக்க எனக்கு மனம் இல்லை. இங்கே கொண்டு வந்தால் நீ...''

''செய்கிறேன்'' என்றாள் உமா ஆவலோடு. தன்னால் செய்யக்கூடிய ஒன்றைக் கேட்கிறானே என்று அவளுக்கு ஒரே ஆனந்தம்.

''நன்றி உமா'' என்றான் ஆனந்தன் புன்னகையோடு.

''என் 'டைப்ரைட்டிங்'கைப் பார்த்துவிட்டு அதன் பிறகு முடியுமானால் நன்றி சொல்லுங்கள்'' என்று சிரித்தாள் உமா.

அடுத்த நாளில் இருந்து ஆனந்தன் சீக்கிரமாகவே இங்கு வருவது வழக்கமாயிற்று. சற்றுநேர அலுவலக வேலைக்குப் பின் அரட்டை என்று பொழுது இனிமையாகக் கழிந்தது. ஆனந்தன் வரும் அந்த மாலை நேரங்களை உமா ஆவலாக எதிர்பார்க்கத் தொடங்கினாள்.

உமாவுக்கே சில சமயங்களில் ஆச்சரியமாக இருந்தது. ஆனந்தன் வரவுக்காக இவ்வளவு ஏங்குகிறோமே என்று. அவன் வந்து போகும் அந்தச் சிலமணி நேரத்திற்காக மட்டுமே நாள் முழுவதும் வாழ்வதாக உணர்ந்தாள். 'இது என்ன பைத்தியக்காரத்தனம்' என்று நினைப்பாள். கூடவே, கடவுளே இந்தச் சிறு இனிய மாலைப்பொழுதை மட்டும்

பறித்துக்கொண்டு விடாதே. இப்படியே நான் வாழ்ந்து விடுகிறேன்'' என்று வேண்டிக்கொள்வாள்.

இது கிட்டத்தட்ட ஆனந்தன் திட்டமிட்டிருந்த நிலை தான். ''ரஷியன் காமிரா'' என்று கதை சொல்லி ஏமாற்றிய அந்தப் பெண் பழுத்த மாம்பழம் போலத் தானாகத் தன் காலடியில் விழவேண்டும். அவனிடம் மயங்கி அவன் விருப்பம்போல ஆடவேண்டும் என்று நினைத்தான். நகைக ளாலும் பணத்தாலும் அவளைப் பணிய வைக்க முடியாது போனதும், அவளது வழியிலே செல்ல முடிவு செய்தான். ஸ்டெனோவுக்குத் தானாக நீண்ட லீவு கொடுத்து அனுப்பி னான். உமாவோடு கழிக்கும் பொழுதை அதிகரித்தான். தன் பேச்சால் அவளை வளைக்க முற்பட்டான். கிட்டத்தட்ட வெற்றி கொண்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனந்தன் சிரித்தால் உமாவும் சிரித்தாள். அவன் முகம் சுளித்தாள் இவள் கலங்கிப் போனாள். அவன் முகம் நோக்கி மலரும் தாமரை போல ஆனாள். ஆனாலும் அதிலும் ஒரு முரண்பாடு இருந்தது. அது ஆனந்தன் விரும்பாத முரண்பாடு.

ஆனந்தனுக்காகவே வாழ்ந்த போதிலும் உமாவால் அவனது தொடு உணர்ச்சியை ஏற்க முடியவில்லை. 'சிற் றுண்டி பிரமாதம்' என்று அவன் அவள் தோளில் லேசாகத் தட்டினால் கூட அவள் உணர்ச்சியற்று உறைந்து போனாள்.

பனிச்சிலையை அணைப்பது எப்படி? ஆனந்தன் முன் னேற வழியின்றி திகைத்தான்.

இன்னொரு விஷயமும்கூட அவன் திட்டமிட்டபடி நடக்கவில்லை. மாலினி தானாகத் திருமணத்தை நிறுத்தக் காணோம். இரு வகையிலும் அவனுக்கு எரிச்சல் உண்டா யிற்று.



வரவர ஆனந்தனிடம் அமைதி கலைந்த தோற்றம் கண்டு உமா கவலையுற்றாள், எதையோ யோசித்தபடி அவன் அடிக்கடி மவுனத்தில் ஆழ்ந்தான். அடிக்கடி சிகரெட்டு. பார்த்துப் பார்த்து உமா இதமாக பேசுவாள். ஜென்னியைப் பற்றி தோட்டத்தைப் பற்றி செந்திரு பற்றி ஏதோ ஒன்று பற்றிப் பேசுவாள். இனிய குரலில் மென்மையாக அவள் பேசப் பேச மெல்ல பேச்சில் ஈடுபடத் தொடங்குவான். அவன் முகத்தில் நிம்மதி பரவுவதை திருப்தியுடன் கண்டாள். அவன் கவலை தொழிலைப் பற்றியது அல்ல என்பது டைப் செய்யும் கடிதங்களில் இருந்து புரிந்தது. பின்னே?

அன்றும் அப்படித்தான். ஒரு கடிதத்தை 'டிக்டேட்' செய்யுமுன் மூன்று சிகரெட்டுகள் முடிந்து போயின. நாலா வது சிகரெட்டை எடுத்து உதட்டில் பொருத்திக் கொண்டு அவன் லைட்டருக்காகத் தடவினான்.

பென்சிலை வைத்துவிட்டு உமா எழுந்தாள் ''வேண்டா மே'' என்று கொஞ்சுதலாகக் கையேந்தினாள்.

வாயிலிருந்த சிகரெட்டைக் கொளுத்தப் போனவன் அதை நிறுத்தி உமாவின் முகத்தைப் பார்த்தான். ''ஏன் உமா அதிகமான சிகரெட்டுப் பிடித்து புற்றுநோய் வந்து நான் செத்து விடுவேன் என்று பயப்படுகிறாயா?'' என்றான் கிண்டலாக. சட்டெனக் குரலைத் தாழ்த்தினான். ''அப்படி நான் செத்துப் போனால்...''

''ஐயோ, என்ன பேச்சு இது'' என்று பதறினாள் உமா.

''சொல்லு உமா நான்...'' என்று அவன் அதே பேச்சைத் தொடரவும் சட்டெனத் திரும்பி உள்ளே செல்ல முயன்றாள்.

அவள் கைப்பற்றி நிறுத்தி ஒருவிதமான சிரிப்புடன் அவன் தொடர்ந்தான். ''நான் செத்தால் நீ கண்ணீர் விடுவாயா உமா? அல்லது... ஒருவேளை இது ஒரு விடுதலை என்று...''

சட்டென அவள் கையை உதறிவிட்டு உள்ளே விரைந்தாள் உமா.

அவள் விழிகளில் கண்ணீர் பளபளத்துச் சிந்துவதை கண்டான் ஆனந்தன்.

அவன் மனதில் ஒரு மகிழ்ச்சி உண்டாயிற்று. கூடவே அவளைப் புண்படுத்தி விட்டோமே என்ற சிறு வருத்தமும் தோன்றியது. மெய்யாகவே தான் ஒரு பெண்ணிடம் கேட்க இது எவ்வளவு முட்டாள் தனமான கேள்வி! அவள் எப்படிப் பட்டவளாக இருந்தாலுமே.

சற்று நேரத்தில் அவள் அமைதியான தோற்றத்துடன் திரும்பி வந்து அமர்ந்தாள். ஆனாலும் அவளுடைய சிவந்திருந்த கண்களையோ கழுவியிருந்த வெளுத்த முகத்தையோ ஆனந்தன் கவனிக்கத் தவறவில்லை.

அவளை வருத்தி விட்டேனே என்ற கழிவிரக்கம் மீண்டும் தோன்றிய போதிலும் உள்ளூர ஓர் இனிமை வெடித்து பூஞ்சிதறலாகச் சிதறுவதை அவனால் தடுக்க முடியவில்லை. 'நாளை இதை ஈடு செய்து விடுகிறேன்' என்று மனதினுள் உறுதி செய்து கொண்டபின் மனச்சாட்சி ஒருவாறு சமாதானம் அடைந்தது.

அவளைச் சிரிக்க வைத்துவிட வேண்டும் என்ற முடிவுடன் ஏதேதோ கதைகள் கூறலானான். ஒரு டைப்பிஸ்டிடம் ''கோடவன் டெலிவரி' என்பது எப்படி 'கவுன்' டெலிவரியாயிற்று என்ற கதை; புதிதாக ஆங்கிலம் பயின்ற ஒருவன் மணி என்ன என்பதற்காக 'பெல்' என்ன என்று கேட்ட கதை — இதுபோல மிகவும் சிம்பிள் ஜோக்ஸ், அவற்றின் வாயிலாக அவன் விரும்பி எதிர்பார்த்தது போலவே உமாவின் முகத்தில் புன்சிரிப்பை வரவழைத்தன. கன்னங்களில் சிறு குழியையும் கூடத்தான்.



அந்தக் கன்னக்குழியை அவன் ரசித்து கொண்டிருந்த போதுதான் உமா சுற்றுப்புறத்தைக் கவனித்தாள். கவனித்ததும், 'அடேடே' என்று பதறிக் கொண்டு எழுந்தாள்.

''என்ன மரியாதை எல்லாம் குறைகிறது'' என்று சிரிப்போடு அதட்டினான் ஆனந்தன்.

''என்ன!'' என்று திகைக்கையிலேயே விஷயம் புரிந்து அவளுக்குச் சிரிப்பு வந்தது. ''''பெரிய விட்''தான் போங்கள். இப்போது மணியைப் பாருங்கள்.''

''பெல்லையா?''

''ம்ம்...'' என்று சிரிப்பு அடக்கியபடியே ''மணி ஏழு உங்கள் தாயார் இன்னமும் பிள்ளையைக் காணவில்லையே என்று கவலையோடு காத்திருப்பார்கள் கிளம்பவில்லையா?'' என்று அவனைக் கிளப்பினாள்.

''பெல் ஏழுதானே. சரி சரி முறைக்காதே தாயே. இதோ போய்விடுகிறேன்'' என்று ஒரு விரலை நீட்டி அவளுடைய கன்னத்துக் குழியைத் தொட்டான்.

கண்களில் சிரிப்பு மறைய அவள் உறைவதைக் கண்டும் காணாதவன் போல் ''குட்நைட்'' என்று சொல்லிச் சென்று விட்டான்.

☆ ★ ☆

மறுநாள் அவன் வருகையில் கூடவே ஓர் அழகிய அட்டைப் பெட்டியும் வந்தது. அதனுள்ளே முத்தும் பச்சை நிறக் கற்களும் பதித்த கழுத்து மாலை ஒன்றும் இருந்தது. பொருத்தமாகக் காதணிகளும்கூட பழக்கமற்ற உமாவிற்குக் கூட அதன் மதிப்புப் புரிந்தது.

நகையைப் பார்த்ததுமே முகத்தில் அறை வாங்கிய குழந்தை போல அவள் நிமிர்ந்தாள்.

''நன்றாக இருக்கிறதா உமா?''

''ஆமாம்'' என்றாள் அவள் உணர்ச்சியற்று.

''உமா நேற்று உன் கண்களில் நீர்முத்துக்களை உதிர வைத்தேன், மாற்றாக இன்று நல்முத்துக்களை உன் கழுத்தில் சூட்ட எடுத்து வந்தேன் திரும்பு'' என்று உணர்ச்சி பொங்க வசனம் பேசியபடி அவள் அருகே நெருங்கினான் ஆனந்தன்.

''எனக்கு வேண்டாம்'' என்று பின்னே நகர்ந்தாள் உமா.

''உமா'' என்றான் அவன் அதட்டலாக.

''என்னை மன்னியுங்கள்'' என்று மேலும் விலகிச் செல்லலானாள்.

''நில்'' என்று ஆத்திரத்துடன் அவளைப் பற்றி தன்புறமாகத் திருப்பினான் அவன்.

உமாவின் பார்வை சற்றும் தளராமல் அவனது பார்வையைத் தாங்கி நின்றது.

ஆனந்தனது பிடி இளகி அவன் கை தொய்ந்தது.

உமாவைவிட்டு அகன்று சன்னல் அருகே சென்று சற்று நேரம் வெளியே பார்த்தான்.

உணர்ச்சிகள் சற்று சமனமான பின் திரும்பி வந்தான்.

''ஏன் உமா உன்னை விலைக்கு வாங்க முயற்சிப்பதாக நினைக்கிறாயா?'' நிதானமாகக் கேட்டான்.

''எந்தப் பொருளுக்கும் இரண்டு முறை விலை கொடுப்பீர்களா?'' என்றாள் உமா மெல்லிய குரலில்.



''உமா!''

மறந்து விட்டீர்களா? பெரியம்மாவிடம் கொடுத்தீர்களே?

''ஆக அந்த விலைக்காகத்தான் நீ இங்கே இருக்கிறாயா?'' அவன் சட்டென மூண்ட சினத்துடன் கேட்டான்.

உமா தயங்கிவிட்டுத் தலைகுனிந்தாள்.

''பதில் சொல் உமா,'' என்றான் அவன் கோபமாகவே.

''இல்லை'' என்று தலை நிமிராமலே சொன்னாள் உமா. 'ஆனால்... ஆனால்' நகைப் பெட்டியைக் காட்டிச் சொன்னாள்; ''இதை ஏற்க வேண்டும் என்றால் எனக்கு மனதில் வலிக்கிறது. தயவு செய்து என்னை வற்புறுத்தாதீர்கள்.''

''ஆகட்டும், ஆகட்டும்! திருப்பி அனுப்பிவிடுகிறேன்'' உள்ளூர மூண்ட சிறு எரிச்சலை மறைத்துச் சிரித்தான். ''உன்னைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை உமா'' என்று உண்மையைச் சொன்னான், ஆனந்தன். ஆனால் மெய்யாகவே அவன் இந்த முறை அவளை மயக்குவதற்காக நகையை வாங்கவில்லை.

உமாவின் முகம் பளிச்சிட்டது. புன்னகையுடன் ''புரிந்து கொள்ள முயற்சி செய்யாதீர்கள். அவ்வளவுதானே அடடே ஊகூம் அச்சச்சோ. நீங்கள் வந்து எவ்வளவு நேரம் ஆயிற்று காபிகூடத் தரவில்லையே உட்காருங்கள் இதோ வருகிறேன்'' என்று மின்னலாய் மறைந்தாள்.

டிரேயில் காபி டிபனுடன் விரைந்து வந்தாள்.

'ஒன்றும் வேண்டாம்' என்று விறைப்பாக மறுக்க எண்ணியிருந்தான் ஆனந்தன். ஆனால் அவள் மலர்ந்த முகத்து

டன் தட்டில் மிக்சரை வைத்து நீட்டியபோது தன்னையறியாமல் புன்னகையுடன் வாங்கிக்கொண்டான்.

''என்ன சிரிக்கிறீர்கள்?'' என்று வினவினாள் உமா.

''உன் இஷ்டம் போல் என்னை ஆட்டி வைக்கிறாயே என்று நினைத்தேன்.''

''இல்லையே ஆட்டும் விசை எப்போதும் உங்களிடம் தான் இருக்கிறது'' என உரைத்தாள் உமா.

''ம்ம்...?'' சந்தேகப்படுகிறவன் போல அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தான் ஆனந்தன்.

உமாவின் கன்னங்கள் சிவப்பதைக் கண்டான்.

சிரித்துக்கொண்டே, ''இனி வேலையைப் பார்ப்போமா?'' என்று காலி கோப்பையை நீட்டினான்.

''இதோ வந்து விட்டேன்'' என்று காலிக்கோப்பை, தட்டுகளை உள்ளே கொண்டு வைத்துவிட்டு, பென்சில், பேப்பருடன் வந்தாள் அவள்.

அடுத்து ஒரு மணி நேரம் வேலையில் கழிந்தது.

கடைசியாகக் கடிதங்களைச் சரிபார்த்துக் கையெழுத்திட்டு உறைகளில் வைத்து முடித்தானபின் கைகளை உயர்த்திச் சோம்பல் முறித்தான் ஆனந்தன்.

''எவ்வளவு நீளமான வலிய கரங்கள்!'' வெட்கமுற்று சட்டெனப் பார்வையைத் தாழ்த்தினாள் உமா. வெட்கம் கெட்டு ஏதேதோ எண்ணத் தொடங்கி விட்டாளே?

''மிகவும் நேரமாகிப் போயிற்றே. உங்கள் அம்மா இரவு உணவுடன் உங்களுக்காகக் காத்திருப்பார்கள்'' என்று அவனைக் கிளப்ப முயன்றாள்.



''விரட்டுகிறாயே உமா உன் வீட்டில் எனக்கு ஒருவேளைச் சாப்பாடு போடக்கூடாதா?'' என்றான் கேலிப் புன்னகையுடன்.

உமாவின் பேச்சு நின்றுவிட்டது.

அவன் விடுவதாக இல்லை. ''என்ன உமா சாப்பாடு கிடையாதா? எனக்கு மிக மிகப் பசிக்கிறதே'' என்றான் சிரிப்பு மாறாமல்.

உங்களுக்கு உணவு அளிப்பது என் பாக்கியம் இ
தயாராக எடுத்து வைத்துவிட்டு வருகிறேன்'' என்றா

☆ ★ ☆

அவன் மேசைமுன் அமர்ந்ததும் ... தி
உணவின் கடைசிக் கட்டத்தில் '' ... ''
என்றான் ஆனந்தன். ... கண்டு
... தந்த

ஊறுகாய் ஜாடியை ... முத்துக்
நடுங்கின. சமாளித்
தட்டில் ஊறுகா

பட ... ம் படபட
நின்ற

... திகிறாய்? ''நான்
அ ... ன்று பட்டென்று
கள். தய ... ருகிறாயே. இங்கே
பிடித்து தன் ... ஸ்கர்ட் ரொம்பவும்
அவன் சென்ற ... கட்டால், 'நீ அதற்குள்

அவன் ஏன் ... இருபத்தோரு வயதில்
ஒருவேளை... ஒரு ... விட்டேனாம். தப்பை

தான் அவன் அவ்வளவு நேரம் தங்கினானோ? நகை வேறு கொணர்ந்தானே. ஒவ்வொன்றையும் இணைத்துப் பார்க்கையில் உமா கலங்கிப் போனாள்.

என்ன ஆனாலும் சரி. இனி ஆனந்தன் இவ்வளவு அதிகநேரம் இங்கே தங்காது பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தாள்.

அந்தத் தீர்மானம் இரண்டே நாட்களில் ஆடிக்காற்றில் சிக்கிய இலவம் பஞ்சாகப் பறக்கும் என்று அவளுக்கு எப்படித் தெரியும்.

## 7

அன்றுதான் ஜென்னியின் பிறந்தநாள்.

''கட்டாயம் வரவேண்டும்'' என்று உமாவை வற்புறுத்தி வாக்குறுதி வாங்கியிருந்தாள் ஜென்னி.

அவளது வீட்டிற்குச் செல்வதற்குக் கார் அனுப்பினான் ஆனந்தன்.

அடுத்த வீடுகளுக்குச் சென்று பழக்கம் இல்லாததால் உமா வெகு தயக்கத்துடன்தான் கிளம்பினாள்.

உமாவைப் பார்த்ததும் ஜென்னிக்கு ஒரே குதூகலம் கூடவே பரிசுப் பொருளைப் பார்த்ததும் மூன்றடி உயரம் துள்ளினாள். ''என் தோழி உமா'' என்று வந்திருந்த விருந்தினருக்குப் பெருமையுடன் அறிமுகம் செய்து வைத்தாள்.

உமாவின் புன்னகையில் மயங்கி பலரும் அவள் அருகில் வந்து அமர்ந்து பேசத் தொடங்கினார்கள். ''நீங்கள் எங்கே



இருக்கிறீர்கள்?'' என்று விசாரித்தாள் ஒருத்தி. ''ஏன் இங்கே தான் இருக்கிறாள். பார்த்தால் தெரியவில்லை?'' என்று சிரித்தாற் போலவே பதில் கொடுத்தாள் ஜென்னி. கிளுகிளு வென்று சிரிப்பு குலுங்கியது.

பிறகு உமாவாகவே ''இவள் பொல்லாத குறும்புக் காரி... நான் இந்திரா நகரில் வசிக்கிறேன்'' என்று பதில் கூறினாள்.

''உங்களவர்... உங்கப்பா என்ன செய்யறார்?'' என்று வினவினாள் மற்றொருத்தி.

''அப்பா... அப்பா இல்லையே'' என்று தடுமாறினாள் உமா.

''அச்சோ பாவம். பின்னே உறவுக்காரர் வீட்டில் இருக்கிறாயா? பெரியப்பாவா சித்தப்பவா? அல்லது மாமாவா?''

மறந்த குழந்தை போல உமா விழிப்பதைக் கண்டு ஜென்னி உதவிக்கு வந்தாள். ''உமா என் அம்மா தந்த பரிசைப் பார்க்கவில்லையே வா'' என்று அவளை இழுத்துக் கொண்டு போனாள்.

அறையினுள் சென்று கதவைச் சாத்தியதும் படபட வென்று பேசினாள்.

''நீ என்ன உமா, இப்படி விக்கி விழுங்குகிறாய்? ''நான் யாராத்துலே இருந்தா நோக்கென்னடி? என்று பட்டென்று ஒன்று போடுவதுதானே? பயந்து நடுங்குகிறாயே. இங்கே பார் உமா, அம்மா, எனக்குத் தந்த ஸ்கர்ட் ரொம்பவும் குட்டையாக இருக்கிறது அல்லவா? கேட்டால், 'நீ அதற்குள் வளர்ந்து விட்டாய்' என்றகிறார்கள். இருபத்தோரு வயதில் ஒரே மாதத்தில் அப்படி வளர்ந்து விட்டேனாம். தப்பை

ஒத்துக் கொள்ளாமல் சாதிப்பதைப் பாரேன்'' என்று கிளுக்கிச் சிரித்தாள்.

அதே மூச்சில், ''உமா நீ கொடுத்த பரிசை இப்போது அணியப் போகிறேன்'' என்று மடமடவென்று பழைய உடையைக் களையலானாள்.

உமாவுக்குக் கூச்சமாகிவிட்டது. ''நீ மாற்றிவிட்டு வா ஜென்னி. நான் வெளியே நிற்கிறேன்'' என்று வெளியே சென்று மெல்ல கதவைச் சாத்தினாள்.

அது மூன்றே அறைகளை உடைய சிறிய வீடு. ஜென்னியின் அறைக் கதவு மூடியிருந்தபோது கேளாத பேச்சு இப்போது காதில் விழுந்தது.

''அவளை போல் இதையெல்லாம் கேட்கிறாயே பெண்ணே, அவள் ஜென்னியோட முதலாளியோட... இது... என்னவோ, எங்கள் தலைவிதி. வயிற்றுப்பாட்டை நினைத்து அதன் சகவாசத்தைச் சகித்துக் கொண்டு போகிறோம்.''

ஜென்னியின் தாயார் பகிரங்க இரகசியமாகப் பேசினாள்.

உமாவின் உடலுக்குள் எங்கெல்லாமோ வலி வெடித்தது. நெஞ்சை அடைத்தது. ஆனாலும் அவளது பேச்சுக்கு மேலாகச் சொல்ல உமாவுக்கு என்ன தகுதி இருக்கிறது?

உதட்டைக் கடித்துக் கொண்டு சற்றுநேரம் நின்றாள்.

முகத்தில் சூடும் சிவப்பும் இறங்கிவிட்ட உணர்வு வந்ததும் மெல்ல நடந்தாள். ''நான் வருகிறேன் அம்மா'' என்று மெல்லிய புன்னகையுடன் விடை பெற்றாள்.



''நல்லாயிருக்கிறது, சாப்பிடாமலா போவீர்கள்?'' என்று வாய் கொள்ளாச் சிரிப்புடன் தடுத்தாள் ஜென்னியுடைய தாய் மேரி.

வினாடிக்குள் மனிதர்கள் இப்படி மாறுவார்களா? உமா அவளை வெறித்துப் பார்த்தாள்.

மேரியின் சிரிப்பு மறைந்து சங்கடத்துடன் நெளிந்தாள்.

உமா மீண்டும் வாயிலை நோக்கித் திரும்பும்போது ஜென்னியே வந்துவிட்டாள். ''ஹாய் உமா, எங்கே போகிறாய்? பார். டிரஸ் நன்றாக இருக்கிறதா?'' என்று ஒருமுறை வட்டம் சுழன்றாள்.

''மிகவும் நன்றாக இருக்கிறது'' என்றாள் உமா ஓர் உதட்டளவுப் புன்னகையுடன். ''இப்போது நான் வரட்டுமா?''

''ஆங். கிளம்புவதா! சாப்பிட வா...''

''தயவு செய்து ஜென்னி, என்னை வற்புறுத்தாதே'' என்று கூறிவிட்டுத் திரும்பிச் சென்றுவிட்டாள் உமா.

☆ ★ ☆

வீடு திரும்பியதும் சென்ற இடத்தில் உண்டு விட்டதாகச் சொல்லிச் செந்திருவைச் சாப்பிடச் சொன்னாள் உமா.

மாடிக்குப் போய் டிரஸ்சிங் டேபிள் முன் அமர்ந்தாள்.

கை மெல்ல வலக்காலை நீவிற்று.

கண்கள் கண்ணாடியுள் தெரிந்த பிம்பத்தில் பதிந்தன.

'வேதனை தரும் வெறுக்கத்தக்க அழகு' என்று ஆணின் கேலிக் குரல் கேட்டது.

மேரியின் குரல் தொடர்ந்தது.

எதிர்பார்த்த வார்த்தைதான். ஆனால் நேரிடையாகக் கேட்கும்போது நாராசமாக அல்லவா இருந்தது.

வேதனை தாளாமல் கைகளில் முகம் புதைத்து, விம்மி அழத் தொடங்கினாள் உமா.

மறுநாள் வெகு காலையிலேயே ஜென்னி வந்து விட்டாள். வந்ததும் வராததுமாக உமாவின் கரங்களைப் பற்றிக் கொண்டாள்.

''அம்மாவை மன்னித்துவிடு உமா. அவளுக்கு வம்பில் பிரியம் அதிகம். அப்பாவும் அண்ணாவும் போன பிறகு அது ஒன்றே அவளுக்கு ஆனந்தமான பொழுது போக்காகிவிட்டது. நீ திடீரென்று வந்ததுமே எனக்குப் புரிந்துவிட்டது. பிறகு அம்மாவிடம் விசாரித்தேன். உமா தயவு செய்து எனக்காக அவர்களை மன்னித்துவிடு உமா,'' என்றாள் மடமடவென்று.

''பரவாயில்லை ஜென்னி'' என்று மெதுவாகச் சொன்னாள் உமா.

சற்று நேரம் பேச்சின்றித் தலை கவிழ்ந்து அமர்ந்திருந்தாள் ஜென்னி. பின்னர் திடீரென்று நிமிர்ந்து கேட்டாள்.

''உமா உன்னிடம் ஒன்று கேட்கட்டுமா? இது என்ன வாழ்க்கை உமா? உன்னைப் பார்த்தால்... உனக்கும் இதற்கும் பொருத்தமே இல்லையே. உன் பெற்றோர் எங்கே உமா? எப்படி நீ இங்கே வந்து சேர்ந்தாய்? இது எப்படி...?''

மடியில் கோத்திருந்த கைகளைச் சற்று நேரம் பார்த்தாள் உமா. ஜென்னியை நேர்பார்வையாக பார்த்தாள்.



''இந்தக் கேள்விகளுக்கு நான் பதில் தரவில்லையானால் உன் நட்பு எனக்கு இல்லை என்று ஆகிவிடுமா ஜென்னி?'' நிதானமாகக் கேட்டாள்.

ஒரு கணம் விழித்தாள் ஜென்னி. சட்டென உமாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு ''எப்போதும் நான் உன் சினேகிதிதான் உமா. அதில் மாற்றம் இல்லை. ஆனால் நீ என்னை இன்னமும் நம்பவில்லையா?'' என்று சிறு வருத்தத்துடன் கேட்டாள்.

உமா தலையசைத்தாள். ''நம்பிக்கை நம்பிக்கையின்மை என்று எதுவும் இதில் வரவில்லை ஜென்னி. ஆனால் என் பழைய வாழ்வு மடிந்து மண்ணாகிப் போய்விட வேண்டிய ஒன்று. அதைப் பற்றிப் பேசி அதற்கு உயிரூட்ட எனக்கு மனமில்லை.''

தலைகால் புரியாமல் ஜென்னி திணறினாள். சற்று யோசித்தாள். பிறகு ''நீ சின்ன வயசில் மிகவும் கஷ்டப் பட்டாயா உமா?'' என்று உருகிப் போனாள்.

சின்ன வயதில் கஷ்டமா, எளிமையானதாக இருந்தாலும் எவ்வளவு இனிய இளம் பிராயம்! எண்ணும் போதே உமாவின் முகத்தில் இளம் புன்னகை படர்ந்து முகம் மலர்ந்தது.

ஆனால் உடனே முகம் இருண்டு வாடியது. ''ஜென்னி தயவு செய்து அதைப்பற்றிப் பேசாமல் இரேன்'' என்றாள் வேதனையுடன்.

''சரிதான் உமா விட்டுவிடு'' என்று சற்று நேரம் பேசாமல் உட்கார்ந்திருந்தாள் ஜென்னி. பிறகு ''பழசைப் பற்றிப் பேசவில்லை உமா. ஆனால் இதை உன்னிடம் சொல்லித்தான் ஆகவேண்டும்... அங்கே மாலினி விஷயமாக ஒன்றும்

சரியில்லையாம். பாஸ் அவளிடம் முகம் கொடுத்துப் பேசுவதுகூட இல்லையாம். முன்பெல்லாம் சொன்னார்கள் — இந்த வீடு கட்டி முடிந்தவுடன் அவர்களது திருமணம் என்பதாக ஆனால்...''

உமா திடுக்குற்று நிமிர்ந்தாள். ''இந்த வீடு மாலினிக்காகக் கட்டியதா? பின்னே... பின்னே ஏன்... ஜென்னி உனக்கு நிச்சயமாகத் தெரியுமா?''

''அப்படித்தான் சொல்லிக் கொண்டார்கள் உமா. பாஸின் அம்மாவோடு எல்லோருமாக ஒரே வீட்டில் ஒன்றாக வசிப்பது மாலினிக்கு பிடிக்கவில்லை என்று இந்த வீட்டை வாங்கிப் புதுப்பித்து புதுக் குடித்தனம் போடப் போவதாகச் சொன்னார்கள் உமா.''

''கடவுளே! பின்னே ஆனந்தன் ஏன் இப்படிச் செய்ய வேண்டும்? எவ்வளவு தவறான காரியம்? ஜென்னி நீ கூட என்னிடம் சொன்னதில்லையே ஜென்னி'' என்றாள் உமா ஆற்றாமையுடன்.

''உன்னிடம் தான் ஒன்றும் சொல்ல முடியவில்லையே.''

''உன்னால் கூடவா?'' என்றாள் உமா, மெல்லிய புன்னகையுடன்.

மெய்தான் உமா, உன் முகத்தை பார்த்துவிட்டால் பல விஷயங்களைப் பேசவே முடிவதில்லை. அநேகம் உன்னிடம் பேசத் தரம் குறைந்தவை ஆகிவிடும். சிலதைச் சொன்னால், உன் முகம் வாடிவிடுமோ என்ற பயம்.''

''அதெல்லாம் பாராதே ஜென்னி, இதைச் சொல். இந்த வீடு ஆனந்தனது மணவாழ்வுக்காகவே கட்டியதுதானா? மெய்யாகவேதானா?



''உமா எனக்கு நிச்சயமாகத் தெரியாது என்றேனே. ஆனால் அப்படித்தான் சொன்னார்கள். அது கிடக்கட்டும். இப்போது நான் சொல்ல வந்ததே வேறே மாலினியுடைய அண்ணா வெளிநாடு போவதற்காக இன்று இரவு சவேராவில் விருந்து நடக்கிறது. அதற்குக் கூட பாஸ் போகவில்லையானால், நன்றாயிராது. எப்படியாவது அவரை அனுப்பினாயானால் நல்லது.''

''இரவுதானே...'' அதற்குள் சட்டென முகம் வெளுத்தாள் உமா.

இரவில் அவன் இங்கே தங்குவதாகவா ஜென்னி நினைக்கிறாள்! எல்லோரும் அப்படி நினைக்கலாம்தான் ஆனால் ஜென்னி கூடவா?

அடிபட்ட மானின் தோற்றம் உமாவிடம் வந்ததை ஜென்னி கண்டாள். காரணத்தைத் தவறாகப் புரிந்து கொண்டு கண்டதையும் பேசினோமே என்று தன்னையே நொந்து கொண்டாள். ''நான் சொன்னதை மறந்து விடு உமா...'' என்று ஏதோ உளறியடித்துவிட்டுக் கிளம்பிச் சென்றாள்.

☆ ★ ☆

ஜென்னி சென்ற பிறகு உமா சற்று நேரம் எதை எதையோ யோசித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

''அம்மா சமையல்'' என்று செந்திரு வந்தபின்தான் எழுந்தாள்.

அரை கவனத்துடன் சமையலில் ஈடுபட்டு இருந்தபோது சம்பந்தம் ஓடிவந்தான். ''அம்மாம்மா அம்மா அம்மா. ஐயாம் மாம்மா?'' என்று உளறியடித்தான்.

''என்னப்பா?'' என்றாள் உமா வியந்து.

''அம்மாம்மா அங்கே'' முன் கூடத்தை கைநீட்டிக் காட்டினான். நீட்டிய கை தந்தியடித்தது.

''யார்?'' என்று கேள்வியுடனே கூடத்தை நோக்கிச் சென்றாள் உமா.

அங்கே ஒரு மாது கன கம்பீரமாக சோபாவில் அமர்ந்திருந்தார்.

நடுத்தர வயதிருக்கும்.

உடலில் முகத்தில் உட்கார்ந்திருந்த விதத்தில் எல்லாவற்றிலுமே ஒரு நிமிர்வு தெரிந்தது.

கீற்றான வெண்ணீருடன் அகன்ற நெற்றியும் கூர் விழிகளும் அந்த மூக்கும் - அந்தப் பெண்மணியை உமாவுக்கு யாரும் அறிமுகம் செய்விக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை.

உடல் புல்லரிக்க வேகமாக முன்னே வந்து பணிந்து எழுந்தாள்.

''இதோ வருகிறேன் அம்மா'' என்று சிட்டாக உள்ளே பறந்தாள்.

சமையல் அறையில் மிரண்டு நின்ற செந்திருவையோ அவளுடைய கணவனையோ அவள் கவனிக்கவே இல்லை. மடமடவென்று பாலைச் சூடுபண்ணி, மணக்க மணக்க காப்பியைக் கலந்து எடுத்து வந்தாள்.

அந்த அம்மாவின் எதிரே டீப்பாயில் காபிக் கோப்பையை வைத்து ''அருந்துங்கள் அம்மா'' என்று வேண்டினாள்.



''என்ன கொண்டு வந்தாய்!''

''கா...பி...'' குரல் பேதத்தை உணர்ந்து தயக்கத்துடனேயே விடையிறுந்தாள் உமா.

''ஏன்? என் மகனுக்குக் கொடுத்த மயக்க மருந்தில் மிச்சம் மீதி ஒன்றும் இல்லையா?''

''அம்மா!''

''இதை நான் தொடுவேன் என்று நினைத்தா கொண்டு வந்தாய்? என்ன தைரியம் உனக்கு?''

சுளீர், சுளீர் என்று சொற்கள் சாட்டையாய் விழுந்தன.

வேதனை மிகுதியில் விக்கித்து நின்றாள் உமா.

ஆனால் அவள் செய்ததும் முட்டாள் தனம்தானே?

ஆனந்தனுடைய தாய் அவளை எப்படி அன்பாக அரவணைப்பாள்?

வேதனையில் குறுகிய உடல் நிமிர மெல்ல, ''நான்... நீங்கள் நினைப்பது போலத் தவறியவள் இல்லை அம்மா'' என்றாள் உமா.

''தவறு செய்தவள் இல்லையா? இந்த வாழ்க்கை தவறு இல்லையென்றால் வேறு எதுதான் தவறு!'' ஆனந்தனின் அழுத்தமான குரலில் அவனுடைய அன்னை பேசுகையில் உமாவுக்கு நெஞ்சை அடைத்தது. இந்தத் தாயை நல்லதொரு சூழ்நிலையில் சந்திக்கும் பாக்கியத்தை இறைவன் ஏன் தனக்குத் தரவில்லை என்று வருந்தினாள்.

ஆனந்தனுடைய தாயார் அருள்மொழி தெளிவாகவும் வேகமாகவும் அதே நேரம் உணர்ச்சிகளை வெளிக்காட்டாமலும் பேசிக் கொண்டே போனார்.

உமாவைப் பற்றி அவருக்கு அக்கறையில்லை. ஆனால் ஆனந்தன்? குலத்திற்கு ஒரே தளிர். அவனை அவள் கெடுக்கலாமா? இப்போதெல்லாம் அவன் ஆளே மாறிப் போனானாமே. குணம் கெடுகிறது. குடும்ப மானம் கண்ணுக்குக் கண்ணான மானம் விண்ணுக்கே போய் விட்டது. ஏதாவது பேசலாம் என்றால் தாயிடம் நின்று நிமிர்ந்து பேசுவதுகூட இல்லையாம், எல்லாம் ஓர் ஒப்புக்கொள்ள முடியாத நடத்தையுடைய ஒரு பெண்ணால் அவளது போதனைகளால்.

பொறுமையாக நின்றாள் உமா. கடைசியாக நிதானமாகவே பதில் கூறினாள். ''உங்கள் பிள்ளையிடம் உங்களுக்கு நம்பிக்கை இல்லாது போகலாம். ஆனால் நான் நம்பத் தகுந்தவள்தான் அம்மா, என் பேச்சை நம்புங்கள் நீங்கள் நினைப்பது போல எதுவுமே இல்லை.''

''இல்லாமல் எப்படியடி பெண்ணே? நிச்சயித்த பெண்ணை மணக்கக் கசக்கிறதே; அது உன்னால்தானே'' என்று குற்றம் சாட்டினார் அருள்மொழி.

உமாவுக்கு ஜென்னி சொன்னது நினைவு வந்தது. இன்றைய விருந்துக்கு ஆனந்தன் செல்லவில்லையானால் அது முறிவை வெகு திட்டமாகக் கூறுவதுபோல ஆகும் அதைத் தடுக்கத்தான் இந்தத் தாயும் வந்தார் போலும்.

கூடவே அன்று துணிக்கடையில் மாலினியைப் பார்த்த நினைவும் வந்தது. அகந்தையும் பிடிவாத உதடுகளும் எடுத்தெறிந்த பேச்சும்...

மீண்டும் உமா நிமிர்ந்தாள், ''நிச்சயம் செய்த அந்தப் பெண்ணை மணந்தால் அவர் மகிழ்ச்சியாக இருப்பாரா அம்மா? நன்றாக யோசித்துச் சொல்லுங்கள். மேலே என்ன செய்யலாம் என்று பார்ப்போம்.''



சற்று அதிகப் பிரசங்கித்தனம் என்று அவளுக்கே தோன்றிய போதும் உமா தன் மனதில் தோன்றியதைச் சொல்லிவிட்டாள்.

இப்போது அருள்மொழி விக்கித்துப் போனார். குழப்பத்துடன் எழுந்தார். ''நீ என்ன சொல்லுகிறாய்?''

உமா பேசவில்லை. அவள் சொன்னது தெரிந்துதானே அவர் குழப்பம் கொண்டார். பிறகென்ன பேசுவது?

அருள்மொழி குனிந்து சிறு மேசைமேல் இருந்த கைப் பையை எடுத்தார். ''மகிழ்ச்சி... அவனுக்கு மகிழ்ச்சியைத் தருவாளா?'' என்று முணுமுணுத்தபடியே விடைபெறாமலே வெளியே சென்று விட்டார்.

☆ ★ ☆

ஏடு படிந்த காப்பியைப் பார்த்தபடி உமா மீண்டும் யோசனையில் ஆழ்ந்தாள்.

அருள்மொழியின் பயம் அவளுக்குப் புரிந்தது. கை மீறிவிட்ட மகனைக் கட்டுப்படுத்த ஒரு பெண் வேண்டும். மனத்திண்மை உள்ளவளாக அவள் இருந்ததால்தான் ஆனந்தனை விடாப்பிடியாகப் பற்றித் திருப்புவாள். பிடிவாதம் உள்ள மாலினி அதற்கு ஏற்றவள் என்று நினைத்தாரோ?

அவள் சகோதரனுடைய மகளும்கூட, ஏறக்குறைய இருந்தாலும் காலப்போக்கில் சரியாகிவிடும் என்று கணக்கிட்டு இருப்பார். ஆனால், அது சரிதானா? இல்லை என்று உமா நினைத்தாள். ஏன் அருள்மொழிக்கே அந்த சந்தேகம் இருப்பது தெரிகிறது.

ஆனந்தனுக்கு ஒரு மனைவி வேண்டும்தான். ஆனால் அவள் ஆனந்தனிடம் அன்பும் ஆசையும் கொண்டவளாக இருக்கவேண்டும். அவனது விருப்பங்களுக்கு ஏற்ப

வளைந்து கொடுத்து இன்முகத்தோடு அவனுக்குத் தன்னை முழுவதுமாக ஈந்து மகிழ்பவளாக இருக்க வேண்டும்.

மாலினி நிச்சயமாக அப்படிப்பட்டவள் அல்ல. தனது விருப்பங்களுக்கு ஏற்ப மற்றவர்களை வளைப்பவளாகத் தான் அவள் தோன்றுகிறாள். நிச்சயமாக ஆனந்தனுக்கு ஏற்றவள் அல்ல, அல்ல ஆயிரம் முறையானாலும் அல்லதான்.

பின்னே வேறு யார் இருக்கிறார்கள்?

ஆனந்தன் நினைத்தால் ஆயிரம் பேர் கிடைப்பார்கள் என்று உமா நினைத்தாள்.

ஆயிரம் பேரைப்பற்றி என்ன? இங்கேயே நீ இல்லையா என்று உள் மனம் கேட்டது.

உமா அதிர்ந்து போனாள்.

நினைப்பது அவளுடைய சொந்த மனம் தானா அல்லது உள்ளே புகுந்து கொண்ட ஏதேனும் சைத்தானா?

இருந்திருந்து ஆனந்தனுக்கு அவளா பொருத்தம்! சே; கேவலம்!

வேண்டாம்! எண்ணங்களே, ஜாக்கிரதை! ஆனந்தனை படுகுழியில் தள்ளத் திட்டமிட வேண்டாம். அவன் பல்கிப் பெருகிப் பார் போற்ற வாழ வேண்டியவன். உமா வெறும்... வெறும்... உமாவோடு சேர்த்துப் பார்த்தால் அவளைக் காட்டிலும் மாலினி ஆயிரம் மடங்கு ஆனந்தனுக்குத் தகுந்தவளே.

காரணமற்று உமாவுக்குக் கண்ணீர் வந்தது. தன்னிடம் இருந்தே தப்ப முயலுபவளாக உமா வேலைகளில் மும்முரமாக மூழ்கினாள்.

☆ ★ ☆



அன்று மாலையில் வர இயலாது என்று ஆனந்தன் டெலிபோனில் சொன்னான். உமாவின் நெஞ்சில் சூனியம் பரவிற்று.

ஜென்னியின் வீட்டுக்குச் சென்றதால் முன் தினமும் அவள் ஆனந்தனைப் பார்க்கவில்லை. இன்றும் பார்க்க முடியாது என்றால் அவளால் தாளமுடியவில்லை.

ஆனால் அந்த ஆவல் ஆனந்தத்துக்கு இருந்தால் அவனை யாரால் தடுக்கமுடியும்? ஓ... இன்று மாலினி வீட்டாரின் சவேரா விருந்து ஆயிற்றே. ஆக ஆனந்தன் அங்கே போகிறான் சரிதான், ச...ரி...தான்.

மாலை நெருங்க நெருங்க உமாவின் நெஞ்சில் சொல்லொணாத் தவிப்பு மூண்டது. இந்தத் தவிப்பு தவறு என்பதும் புரிந்தது. ஆனால் அதனால் வேதனை மட்டும் பட்டு விடவில்லை.

மனதை மாற்றப் பூவேலை செய்து பார்த்தாள். ஊசியால் விரலைக் குத்தி அதையும் புண்ணாக்கிக் கொண்டதுதான் மிச்சமாயிற்று.

கதைப் புத்தகத்தைக் கண்டாலே பிடிக்கவில்லை.

கடைசியாக ''வா, செந்திரு'' என்று தோட்ட வேலையில் இறங்கி விட்டாள். வியர்வை கொட்டக் கொட்டக் களைக்கொத்தியால் மண்ணைப் புரட்டுவதும் வரப்புகளைச் சீர் செய்வதுமாக உடல் உழைப்பில் ஈடுபட்டாள்.

இருட்டத் தொடங்கியபின்தான் அதுவும் வேண்டா வெறுப்பாகவே வேலையை முடித்தபோது அவளது உள் ஆடைகளெல்லாம் நனைந்து விட்டிருந்தன.

நனைந்திருந்த ஜாக்கெட்டைப் பார்த்து லேசாக முகத்தைச் சுளித்துவிட்டு ''நான் குளிக்கப் போகிறேன் செந்திரு''

என்று தன் குளியலறைக்குள் புகுந்தாள் உமா. வெகுநேரம் வெந்நீர்த் தொட்டியுள் அமிழ்ந்து கிடந்தாள்.

இங்கு வந்த புதிதில் இளம்பச்சை நிறத்தில் பளபளத்த இந்தத் தொட்டியைப் பார்த்து மலைத்தது நினைவு வந்தது. ஆனால் இந்த வசதிகளுக்கெல்லாம் உடல் எவ்வளவு சிக்கிரத்தில் பழகி விடுகிறது. இனி இவை இல்லாமல் அவளால் இருக்க முடியுமா?

ஏன் முடியாது? இடையில் நிகழ்ந்துவிட்ட சில மாதங்களை மட்டும் அழித்துவிட முடியுமானால் ஒரு குடிசையில் ஒரு வேளைக் கஞ்சியுடன் ஆனந்தனது முகத்தைப் பார்த்துக் கொண்டே உமா ஆனந்தமாக வாழ்ந்து விடுவாளே.

அந்த இனிய வாழ்வின் கற்பனையில் சற்று நேரம் ஆழ்ந்தாள். பிறகு மனமின்றி நிகழ்காலத்துக்கு வந்தாள். தொட்டியை விட்டு வெளியேறி ஷவரின் பூஞ்சிதறலில் சற்று நேரம் நின்றுவிட்டுப் பிறகும் அரை மனமாகவே குளியலை முடித்தாள்.

மேலாகக் கூந்தலை வாரிவிட்டுக் கொண்டு சின்னதாக ஒரு செஞ்சாந்து திலகத்துடன் திருப்தியடைந்தவளாகக் கண்ணாடியை விட்டு அகன்றாள்.

அடர்ந்த ஈரக் கூந்தலை விரலால் ஆற்றவிட்டபடி அவள் மாடிப்படிகளில் இறங்கி வந்தபோது எதிர்பாரா வண்ணமாக ஆனந்தன் எதிரே ஏறிக்கொண்டு இருந்தான்.

தன்னையறியாமல் உமாவின் கண்களும் முகமும் ஒருங்கே மலர்ந்து ஒளிபெற்று மின்னின. ''வந்து விட்டீர்களா?'' என்று ஆர்வத்துடன் கேட்டுவிட்டு வேகமாகப் படியிறங்கினாள்.

அவள் இறங்கி வந்து சேரும்வரை ஆனந்தன் அசையாமல் நின்றான். பிறகு கையை நீட்டி அவளது கூந்தலைத்



தொட்டான். அதன் பட்டான மென்மையைப் பிரிய முடியாதென போன்று விரல்கள் அவள் கூந்தலினுள் அளைந்தன.

உமாவின் உடலில் அலையாய்ச் சிலிர்ப்பு ஊடுருவியது!

# 8

கூந்தலை அளைந்த ஆனந்தனின் விரல்கள் உமாவின் செவி மடலைத் தொட்டன.

''விரிந்த கூந்தலுக்கு இடையில் உன் முகம் பவுர்ணமி நிலவு போல இருக்... உமா, இன்று முழு நிலவு. வருகிறாயா கடற்கரைக்குப் போய்விட்டு வரலாம்.''

தன் படபடப்பை வெளிக்காட்டாமல் அவன் கையை விலக்கிப் பின்னடைந்தாள் உமா.

புரிந்தவன் போலத் தோளைக்குலுக்கினான் ஆனந்தன். ''வா உமா?'' என்றான் விடாமல்.

''இந்த நேரத்திலா?''

''நேரத்திற்கு என்னவாம்?'' மணிக்கட்டை திருப்பிப் பார்த்துவிட்டுத் தொடர்ந்தான். ''மணி எட்டுக்கூட ஆகவில்லை போய்விட்டு ஒன்பதாகுமுன் வந்து விடலாம்.''

பழைய தீர்மானத்தின் ஞாபகம் வந்து உமா தடுத்துப் பார்த்தாள். ''ஒன்பதா? அதற்குப் பிறகு எப்போது போய் சாப்பிடுவீர்கள். வேளை தப்பிச் சாப்பிட்டால் உடம்புக்கு ஆகாது.''

''பரலோகத்தில் இருக்கிற என் பாட்டியம்மாகூட இவ்வளவு கவலைப்பட்டு உருகமாட்டார்கள். நீயும் கவலைப்பட

வேண்டாம் வா'' என்று அவளுடைய கரத்தை அழுந்தப்பற்றி அவளை நடத்திச் சென்றான் ஆனந்தன்.

வாய் பேசிய கேலி உதட்டோடு சரி என்பதைக் கையின் அழுத்தத்தில் உமா உணர்ந்தாள்.

''கையை விடுங்கள். தலையைப் பின்னிக் கொண்டு பிறகு வருகிறேன். இப்படிக் காளியம்மன் போலவா வருவது?'' என்று கையை விலக்கிக் கொள்ள உமா முயற்சி செய்தாள்.

ஆனந்தன் விடவில்லை. ''இதுவே உனக்கு நன்றாக இருக்கிறது சும்மா வா'' என்று கைப்பிடியாகக் கொண்டு அவளைக் காரில் ஏற்றினான். பின்னோடு தானும் ஏறிக் காரைச் செலுத்தலானான்.

அவன் அழுந்தப் பற்றியதால், கையில் லேசாகக் கன்றியிருந்த இடத்தை வருடியபடி ''வேகம் அதிகமாயிருக்கிறதே'' என்று சூழ்நிலையை லேசாக்க எண்ணி கேலியாகக் கேட்டாள் உமா.

சற்று திரும்பி அவளைப் பார்த்துவிட்டு ''பின்னே என்னவாம்? நாம் இருவரும் சந்தித்து இன்றுடன் ஒரு மாதம் ஆகிறது. அதற்காகவே அவ்வளவு வேலைகளையும் போட்டு விட்டு ஓடிவந்தேன். உன்னைப் பார்த்ததும் பவுர்ணமிக் கடலின் அழகை ரசித்தபடி கொண்டாடலாமே என்று தோன்றியது; கூப்பிட்டால் பொல்லாத பிகு பண்ணுகிறாயே'' என்றான் ஆனந்தன்.

உமாவுக்கு ஒரு மாதிரியாகி விட்டது. அவனுக்கு ஆவல் இல்லை என்று நினைத்தாளே. சே, சமாளித்தபடி ''பவுர்ணமியன்று கடற்கரை அழகாக இருக்குமா?'' என்று விசாரித்தாள்.

''அழகாக... இருக்குமாவா? நீ பார்த்தது இல்லை?''



''இல்லையே.''

''மெய்யாகவா?'' என்று வியப்புடன் அவளைத் திரும்பிப் பார்த்துவிட்டு, மேலே காரோட்டினான் அவன்.

''நல்ல கருநீல வானத்தில் பாலிற் செய்த வெள்ளித் தகடுபோல நிலவு தகதகக்கும். அதன் ஒளிபட்டுக் கடல் முழுவதிலும் சின்னச் சின்ன வெள்ளி முகடுகளாகக் கடல் நீர் ஆர்ப்பரிக்க... ஆகா! உமா அதை நேரில் பார்த்தால்தான் அந்த அழகு புரியும் அதாவது...'' என்று இடக் கையை நீட்டிச் சுட்டு விரலால் உமாவின் இதழ் வடிவை அளந்து, ''நீ சிரிக்கும் அழகு நேரில் பார்த்தால் மட்டும் புரிவது போல...'' என்று முடித்தான்.

உமா தலையைத் திருப்பி வெளியே பார்வையைச் செலுத்தலானாள்.

☆ ★ ☆

இருவருமாகக் கடற்கரையை அடைந்தபோது கூட்டம் வெகுவாகக் குறைந்திருந்தது. ஆங்காங்கே சில ஜோடிகள் மட்டும்.

ஆனால் உமாவின் கவனம் அவர்களிடம் இல்லை. அவள் கண்கள் பவுர்ணமிக் கடலின் அழகை ரசனைமிக்க தாகத்துடன் அள்ளிப் பருகின. பரந்து விரிந்த பொன் மணல் பரப்பு — அடுத்து வெண்ணுரையுடன் சுருண்டு விழும் அலைகடல், நடுவே எண்ணில் அடங்காது அங்கும் இங்கும் அலையும் வெள்ளிப் பாளங்கள், எவ்வளவு அழகு!

''வா, இன்னமும் கடல் ஓரமாகச் சென்று பார்க்கலாம்'' என்று கைகோர்த்து அவளை அழைத்துச் சென்றான், அவன்.

முதல் தடவையாகத் தன் கரத்தை விலக்கிக் கொள்ளாமல் அவனுடன் இணைந்து நடந்தாள் உமா.

ஏதோ பாடலை முணுமுணுத்துக்கொண்டே நடந்தான் ஆனந்தன்.

''அது என்ன பாட்டு?''

''உட்கார். பாடிக்காட்டுகிறேன்'' என்று தனது ஆழ்ந்த அழுத்தமான குரலைச் சின்னதாக்கிப் பாடினான் அவன். ''மங்கியதோர் நிலவினிலே கனவில் இது கண்டேன்...''

உமாவின் உடல் அன்று இரண்டாம் முறையாகச் சிலிர்த்தது.

''இளவயது மங்கை. பொங்கி வரும் பெருநிலவு போன்ற ஒளி முகமும். புன்னகையின் புது ஒளியும் போற்றவரும் தோற்றம்... உமா...'' ஆனந்தனின் விரல்கள் உமாவின் செவிமடல்களை செவியோர முடிச் சுருள்களை வருடின. ''உமா நீ 'அபிமான்' சினிமா பார்த்தாயா?''

பதில் பேச முடியாமல் 'இல்லை' என்பது போலத் தலையசைத்தாள் உமா.

''அதில் காலையில் குளித்து விரிந்த கூந்தலுடன் தன்னை எழுப்பும் மனைவியைக் கதாநாயகன் இப்படி...''

சட்டெனத் தலையைத் திருப்பிக்கொண்டு வினாடிக்குள் எழுந்துவிட்டாள் உமா, ''வாருங்கள் போகலாம்.''

''உட்கார் உமா'' என்று அதட்டினான் ஆனந்தன்.

''இல்லை, நேரமாயிற்று. அதோடு உங்களுக்கும் வேறு முக்கியமான வேலை இருப்பதை அடியோடு மறந்து விட்டீர்கள் போலத் தெரிகிறது'' அவனைப் பாராமலே பேசினாள் உமா.

''அதென்ன வேலை — நானே மறந்துபோகும் அளவுக்கு முக்கியமான என் வேலை!'' என்று எரிச்சலும் பரிகாச



முமாகக் கேட்டுக் கொண்டே ஆனந்தன் தானும் எழுந்து ஒட்டியிருந்த மணலைத் தட்டினான்.

பதில் சொல்லாமல் மடமடவென்று காரை நோக்கி நடந்தாள் உமா.

கால் புதையப் புதைய கருங்கூந்தல் கடல் அலைகளாக நிலவு ஒளியில் பளபளக்க உமா செல்வதைப் பார்த்தபடியே ஆனந்தன் பின் தொடர்ந்தான். இமை தட்டாது பார்க்க பார்க்க முதலில் சிறு சினம் தோன்றலாயிற்று.

காரில் ஏறிய பிறகும் கிளம்பாமல் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு ''அது என்ன வேலை உமா?'' என்று நிதானமாகக் கேட்டான் அவன்.

அவனது குரல் விளைவித்த லேசான நடுக்கத்தை மறைத்து ''சவேரா விருந்து'' என்று தெளிவாகவே சொன்னாள் உமா.

''ஓகோ!'' தலையை லேசாகச் சாய்த்து அவளைப் பார்த்தான் அவன்.

அவள் முகம் நேராகச் சாலையை நோக்கியிருந்தது. அவன் முகம் இறுகியது. சிகரெட்டை வெளியே வீசி விட்டுக் காரை எடுத்தான்.

வீட்டை அடையும் வரையிலும் இருவருமே பேசவில்லை.

வீடு வந்ததும் காரில் இருந்து இறங்கிக் கொண்ட உமா. அவனும் இறங்கி காரைப் பூட்டுவதைக் கண்டு திகைத்தாள்.

''இன்று இங்கேதான் சாப்பிடப் போகிறேன்'' என்று அழுத்தத்துடன் உள்ளே நடந்தான் ஆனந்தன்.

உமாவுக்கு உள்ளூரக் குளிர் பிறந்தது. காட்டிக் கொள்ளாமல் உள்ளே சென்று சமையல் வேலையைக் கவனித்தாள்.

☆ ★ ☆

உண்டு முடித்த பிறகும் கிளம்பாமல் சோபாவில் அலட்சியமாகச் சாய்ந்து கிடந்தான் ஆனந்தன்.

உமாவைக் கண்டதும் இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, ''நீயும் சாப்பிட்டு விட்டு வா'' எனப் பணித்தான்.

அவனது கோபத்தைக் கிளறிவிட்டு விட்டோம் என்று உமா புரிந்து கொண்டாள். ஆனால் அவளால் வேறு எப்படித்தான் நடந்து கொள்ள முடியும்?

உடலெல்லாம் பதறியது. வெகு சிரமப்பட்டுத் தன்னை நிதானப்படுத்திக் கொண்டாள். அரையும் குறையுமாக 'உண்டேன்' என்று சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

இன்னமும் அவன் அதே அலட்சிய பாவனையில்தான் கிடந்தான்.

மெல்ல ''நேரமாகவில்லையா?'' என்று கேட்டாள்.

''எதற்கு?'' புகை வளையமிட்டது.

''வீட்டிற்குப் போக.''

''இதுவும் வீடுதான்.''

''உங்க அம்மா தேடுவார்கள்...''

''பல் முளைக்காத பாப்பா தொலைந்து போய் விட்டது என்றா?''

''....''



''இருந்தாலும் இரவு வீட்டுக்கு வரமாட்டேன் என்று இப்போதுதான் டெலிபோன் செய்தேன்'' என்றான் லேசான கேலிக் குரலில்.

திரும்பவும் உமா பேசாதிருந்தாள்.

''ஏன் உன் வீட்டில் எனக்கு உறங்குவதற்குக் கொஞ்சம் இடம் தரமாட்டாயா உமாதேவி?'' என்றான் அதே குரலில்.

''......''

''என்ன உமா இடம் தரமாட்டாயா?''

''இது உங்கள் வீடு. இங்கே தங்குவதற்கு நீங்கள் என்னைக் கேட்பானேன்?'' என்று குரலில் அமைதியைக் காட்டி உமா பதிலிறுத்தாள்.

பொறுமை இழந்தவன் போல சிகரெட்டை ஆஷ்டிரேயில் போட்டுவிட்டு ஆனந்தன் எழுந்து நிமிர்ந்து நின்றான்.

அவனது நெடிய உருவம் அறையை மறைத்துத் தன்னை விழுங்க வருவது போல உமா உணர்ந்தாள்.

அவன் நிதானமாக சொல்லப் போனால் அளவுக்கு அதிகமான நிதானத்துடன் பேசினான்.

''ஆம். இது என் வீடுதான் உமா. இப்போது நான் மாடிக்குப் போகிறேன். என் அறைக்கு நீ வந்து சேர உனக்கு அவகாசம் பதினைந்து நிமிடம்.

மாடிப்படி ஏறுமுன் நின்று திரும்பி, ''எனக்குப் பால் சூடாக இருக்க வேண்டும்'' என்றான்.

பிறகு நிதானமாகப் படியேறிச் சென்று அவனது அறைக்குள் — அன்று வரையிலும் எப்போதாவது முகம் கழுவ மட்டும் அவன் பயன்படுத்திய அறைக்குள் சென்று மறைந்தான்.

அவனை வெறித்துப் பார்த்தவாறு உமா பாறையாய் உறைந்து நின்றாள்.

ஆனால் சரியாகப் பதினைந்து நிமிடத்தில் ஆனந்தனின் அறைக்கதவு தட்டப்பட்டது.

''எஸ்'' என்று கதவைத் திறந்தான் ஆனந்தன்.

உமாதான்!

''பால் கேட்டீர்களே, இங்கே கொண்டுவா செந்திரு'' என்று செந்திரு ஒரு தட்டில் வைத்துக்கொண்டிருந்த பால் தம்ளரை வாங்கினாள்.

அருகில் இருந்த சிறு மேசை மேல் வைத்து மூடினாள்.

''ஆறிவிடப் போகிறது. சீக்கிரமாகக் குடித்து விடுங்கள். குட்நைட்.''

இனிமையாகக் கூறிவிட்டு வெளியே வந்து காலித் தட்டைச் செந்திருவிடம் கொடுத்தாள்.

''நீ போ செந்திரு'' என்று அவளை அனுப்பிவிட்டு தன் அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டாள்.

ஆனந்தனுக்கு ஆத்திரம் பொங்கியது.

ஜாலக்காரி! எவ்வளவு இலகுவாக ஏமாற்றுகிறாள்!

அன்றானால் ''ரஷியன் காமிரா'' என்றாள். இன்று... ஆத்திரத்துடன் அந்தப் பாலை எடுத்து பேஸினுள் கொட்டினான்.

மனம் ஆற மறுத்தது.

இப்போது அடுத்த அறைக் கதவைத் தட்டித் திறக்கச் சொல்லி உள்ளே சென்றால்...

திறக்க மறுத்தால் கதவையே உடைத்தாலும் அவளால் என்ன செய்ய முடியும்?



ஆனால் அதற்காகவா அவன் இத்தனை நாள் காத்திருந்தான்.

அப்படி அவளைக் கட்டாயப்படுத்த அவனுக்கு மனம் வரவில்லை இந்த சினமும் குறையவில்லை.

சினம் தணியாமலே மறு கதவைத் திறந்து வரண்டாவில் சென்று நின்றான்.

குளிர்ந்த தென்றல் அவன் முகத்தில் மோதி, அவனது மனக்கொதிப்பை ஆற்ற முயன்று தோற்றது.

சலிப்புடன் அறைக்குள் திரும்பினான்.

அப்போது...

செந்திருவை அனுப்பிவிட்டுக் கதவை மூடிக்கொண்ட உமாவும் உடனே உறங்கிவிடவில்லை. அன்று அவள் மனமும் கிளர்ச்சியுற்றிருந்தது. அவள் ஒன்றும் மரக்கட்டை அல்லவே!

ஏதேதோ நிகழ்ச்சிகள் நினைவுக்கு வந்தன, என்னென்னவோ தோற்றங்கள் படையெடுத்தன.

''ரஷியன் காமிரா''வை நம்பித் தூங்கிய ஆனந்தன்...

காரை ஸ்டார்ட் செய்தபடி இளம் புன்னகையுடன் வருகிறாயா என்று அழைத்த ஆனந்தன்.

முழுநிலாக் கால கடல் அழகை ரசனையுடன் வர்ணித்த ஆனந்தன்.

''அபிமான்'' படத்தைச் சொல்லிக் குனிந்த ஆனந்தன்.

ஆனந்தன்... ஆனந்தன்... ஆனந்தன்...

ஆயிரம் உருவங்களோடு அவன் அவளுடன் போரிட்டான்! ''கடவுளே!'' என்று கையால் கண்களை இறுகப் பொத்தினாள் உமா.

உடனே செவியோரத்தில் நின்று ''மங்கியதோர் நிலவி னிலே!'' பாடினான் ஆனந்தன்.

உமா திணறிப் போனாள்.

தான் என்ன நினைக்கிறோம் என்ன எதிர்பார்க்கிறோம் என்று உமாவுக்கே புரியவில்லை.

ஆனந்தன் தன்னிடம் எதிர்பார்ப்பது என்ன என்பது இப்போது அவளுக்கு நன்கு புரிந்தது.

''இல்லை, இல்லை'' என்று இதுவரை தன்னை ஏமாற் றிக் கொண்டதெல்லாம் வீண் என்பது புரிந்தது.

கனகலிங்கத்தின் வீட்டுப் பெண்ணிடம் அவன் இதைத் தான் அறிய முடியும். அவளது தகுதி அவ்வளவு தான்.

ஆனால் இந்த மாதிரி எப்படி வாழ்வது? இதை அவ ளால் ஏற்க முடியவில்லையே.

மனச்சாட்சியின் கழுத்தைக் கொஞ்சம் அழுத்தி விட் டால்...

தன் மானத்தை கொஞ்சம் கைகழுவி விட்டால்?

உமா சடக்கென்று எழுந்தாள்.

இதென்ன எண்ணங்கள்?

ஆனந்தனிடம் இருந்து தன்னைக் காத்துக் கொள்வது போக உமா தன்னிடம் இருந்தே தன்னைக் காக்க வேண்டும் போல் இருக்கிறதே!

அமைதியற்று முன்னும் பின்னும் அலைந்தாள்.

அந்த 'குளுகுளு' அறையில் மூச்சு முட்டியது.

பின்புறக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள்.

குளிர்காற்று முகத்தில் மோதியது.



ஆனால் அதுவும் கடற்கரைக் காற்றையா நினைவுபடுத்த வேண்டும்?

தன் உடம்பையே சுமக்க இயலாதவள் போன்று உமா கைபிடிச் சுவரில் தொய்ந்து சரிந்தாள்.

கண்ணில் வெற்றிக்குறியுடன் பின்புறமாக ஒருவன் சத்த மின்றித் தன்னை அணுகுவதை அவள் அறியவே இல்லை.

நெருப்பெனக் கொதித்த இருகரங்கள் தோளில் அழுந்தி யபோதுதான் உமாவுக்குச் சற்று உணர்வு உண்டாயிற்று.

திகைப்புடன் விலக முயன்றாள்.

விடாமல் அவளைத் தன்புறமாகத் திருப்பி நெஞ்சோடு இறுக அணைத்தான் ஆனந்தன்.

''உமா... உமா, என் உமா...''

வெல்வெட்டின் மிருதுவுடன் அவள் காது அருகே குழைந்து அவளை வசப்படுத்தியது ''மங்கியதோர் நிலவினி லே'' பாடிய அந்த மாயக் குரல்.

''ஆ... ஆனந்த்...''

அவளது அணைப்பு மேலும் இறுகியது.

சூடான உதடுகள் மென் கூந்தலில் படிந்து சரிந்து கழுத்துச் சரிவில் புதைந்தன.

''வேண்டாம் ஆனந்த்...''

அவனுக்கும் தனக்குமே அணைபோட முயன்றாள் உமா.

ஆனால் காட்டாற்று வெள்ளத்தை கையால் தடுக்க முடியுமா?

உணர்ச்சி கரைபுரண்டு ஓடிய அந்த நேரத்தில் உமாவின் பலவீனமான குரல் அவன் காதுகளில் மட்டுமல்ல அவனுடைய செவிகளுக்கும்கூட எட்டவில்லை.

ஒரு சிறு சிரிப்புடன் குனிந்து அவளைக் கைகளில் தூக்கிக் கொண்டு அவளது அறைக்குள் வந்தான் ஆனந்தன்.

மீண்டும் ஒரு பலவீனமான குரல் அவனுடைய தோள் வளைவில் முணுமுணுத்தது. ''வேண்டாமே ஆனந்தன்.''

''வேண்டுமே உமா,'' என்றான் ஆனந்தன் சரசமாக.

கட்டிலை நெருங்கும்போதே உமாவின் கன்னத்தில் அவன் உதடுகள் பொறுமையற்றுப் புதைந்தன.

கை இடையில் அழுந்தியது.

உமாவின் உடல் மூன்றாம் முறையாக அன்று சிலிர்த்தது.

ஆனால் இப்போது தன் உணர்வு பெற்றுச் சிலிர்த்தது. சட்டெனத் திமிறிய வேகத்தில் அதைச் சற்றும் எதிர்பாராத ஆனந்தன் கட்டிலில் சாய்ந்தான்.

விடுபட்ட அம்புபோல் உமா கதவை நோக்கிப் பாய்ந்தாள்.

''நில் உமா.''

ஆனந்தன் ஆத்திரத்துடன் கூவினான்.

செவியற்றவள்போல் உமா விரைந்தாள்.

''என் மேல் ஆணை உமா. நில்.''

உமா திடுக்கிட்டுத் திகைத்து நின்றாள்.

ஆணை!

அந்த வார்த்தையை மீறி அவளால் செல்ல முடியவில்லைதான். ''பிரேக்'' போட்டது போல நின்று விட்டாள்.



ஆனால் கடல் மடை கண்ணில் திறந்து விம்மி விசித்து விக்கி அழலானாள்.

கோபத்துடன் அவளது அருகே வந்தான் ஆனந்தன், ''இப்போது என்ன அழுகை?'' என்றான் சினத்துடன்.

''என்னை... என்னை என்னவாக எண்ணிக் கொண்டீர்கள்? வேசி என்று தானே,'' மேலும் பொங்கிப் பொருமி அழுதாள் உமா.

''உமா'' அதட்டினான் அவன்.

''அப்படித்தான். நீங்கள் அப்படியேதான் எண்ணி விட்டீர்கள்,'' என்று குமுறினாள் உமா.

''சட் முட்டாள்,'' என்று ஆத்திரத்துடன் கதவைத் திறந்து கொண்டு வெளியேறினான் ஆனந்தன்.

சற்று நேரத்தில் பேரோசையுடன் வேகமாக அவனது கார் வெளியே செல்வது கேட்டது.

## 9

நெடுநேரம் அழுதுவிட்டு அப்படியே உறங்கி விட்டாள் உமா.

காலை விழித்தபோது சற்று நேரம் ஒன்றும் புரியவில்லை.

ஏடாகூடமான நிலையில் தூங்கியதால் மரத்துப் போன உறுப்புகளின் வலிதான் முதலில் தெரிந்தது.

அதைத் தொடர்ந்து முன்தினம் நினைவில் நெஞ்சில் பிறந்த வலி தெரிந்தது.

இந்த மாதிரி இன்னொரு சோதனை நேர்ந்தால் எப்படி மீள்வது?

அதிலும் அவனது அணைப்பை அவளுடைய உடலின் ஒவ்வோர் அணுவும் விரும்புகையில்?

தன்னையே ஏய்த்துக் கொள்ளவில்லை உமா. அவளது வாழ்வில் ஆனந்தனுக்கு மட்டுமேதான் இடம் உண்டு. தேவதாசின் சந்திரமுகி போல அவனுக்குப் பணிவிடை செய்யும் பேறு கிட்டினால் அதுவே போதும்.

ஆனால் அவன் கேட்பது அதுவல்லவே. மனதின் மானம் அழியுமட்டும் அவன் விரும்புவதை அவளால் எப்படி அளிக்க முடியும்?

அவனைப் பார்க்க வேண்டும்; அவனுடன் பேச வேண்டும்; அவனோடு சிரிக்க வேண்டும்; ஆனால் அவன் விரும்புவதைத் தர இயலாது என்ற நிலை எத்தனை நாள் இருக்கும்.

மறுக்கின்ற மனத்திண்மை அவளுக்கு எவ்வளவு நாள் இருக்கும்?

கேள்விகள் புற்றீசல்போல எழுந்தனவே தவிர ஒரு பதில்கூடத் தெரியவில்லை.

வேதனை மிகுந்த குழப்பத்துடன் மெல்ல எழுந்தாள்.

'ஸ்லோ மோஷன் பிக்சர்' போல அசைந்தாள், குளித்தாள் ஆடை மாற்றினாள்.

வெகு நேரம் கழித்து அவள் மெல்லக் கீழே இறங்கி வந்தபோது காத்திருந்தவள் போலச் செந்திரு ஓடி வந்தாள்.

''அம்மா அய்யா போன் பண்ணாங்க.''

''அய்யா?''

''ஆமாம்மா. யாரோ வெளிநாட்டுக்காரங்க வாராங்களாம். அவங்ககூட எங்கிட்டோ போறாங்களாம். சாயங்கா



லம் வந்ததும் எந்நேரமானாலும் வாரதாச் சொன்னாங்கம்மா. அப்பவே பண்ணீட்டாங்க. ஆனா எப்பன்னாலும் நீங்களா முளிச்சு வந்தப்புறம்தான் சொல்லணும் எழுப்பக் கூடாதுன்னாங்கம்மா.''

அவள் சொல்லச் சொல்ல ''ஸ்லோமோஷன் பிக்சர்'' சுறுசுறுப்புப் பெற்றது. மூளையும் வேலை செய்தது. ''எந்நேரமானாலும் வருகிறாராமே?''

மீண்டும் மேலே சென்று தனியே அமர்ந்து சிந்தித்தாள் உமா.

இது முடியாது. இந்தப் போராட்டம் அவளால் முடியாது. போராட அவளுக்குத் தெம்பும் இல்லை. சரணடையும் தைரியமும் இல்லை. தோல்வியை ஒப்புக் கொள்வதை விட உயிரைவிட்டு விடுவதுகூட மேல்தான். ஆனால் அதற்கேனும் உமாவிடம் துணிவு இருக்குமா?

பெருகிவந்த கண்ணீரைச் சுண்டி எறிந்தாள். இரண்டு வழி செல்லவும் துணிவு இல்லை. இனி இரண்டையும் விடுத்துக் கோழை போல ஒளிந்து மறைந்து வாழ்வது மட்டும்தான் மிகுந்துள்ளது.

ஆனால் ஓடி ஒளியவும் இடம் வேண்டுமே!

யார்...? அருள் பொழியும் ஓர் அன்னையின் முகம் கண்ணில் தோன்றியது.

'அம்மா' என்று அவளுடைய கால்களில் விழுந்தால் உதைத்து விரட்டுவாரா? அங்குள்ள விதி முறைகளுக்கு மாறுதான். அவருக்கும் இடும்பைதான். பெரியன்னையின் வீட்டுக்கு வந்த பின்னர் தான் எழுதிய கடிதங்களுக்கு அவர் பதில் எழுதாததும் நினைவு வந்தது.

ஒரு வேளை பதில் எழுதினாரோ? வந்ததும் பெரிய தாய் தராமல் மறைத்தாளோ? அல்லது உமாவின் கடிதங்

கூடத் தபால்பெட்டியை அடையவில்லையோ? இருக்க லாம். அவர்கள் இருவரும் எதையும் செய்யக் கூடியவர்கள் தான் பாவிகள்!

எப்படியானாலும் 'உன் அடைக்கலம், தாயே' என்று கெஞ்சினால் அன்னை நிச்சயம் அபயம் அளிப்பார் என்று உறுதி கொண்டாள் உமா.

சின்ன மேசைமேல் ஒரு தாளில் இரண்டே வரிகள் எழுதி மடித்து வைத்தாள்.

அலமாரியைத் திறந்து கொஞ்சம் பணம் வெகுவாக அத்தியாவசியத் தேவைக்கு மட்டுமாக எடுத்துக் கொண்டாள்.

துணிமணி எதுவும் எடுக்கவில்லை. எடுத்தால் செந்திரு வுக்கும் சம்பந்தத்திற்கும் சந்தேகம் வரும்.

அவர்களிடம் என்ன சொல்லுவது என்று யோசித்தப டியே மீண்டும் கீழே இறங்கி வந்தாள்.

உமா எதிர்பார்த்தது போலவே சம்பந்தம் ஓடி வந்தான். ''என்னங்கம்மா?''

''ஒன்றுமில்லையே'' என்று வெளிக்கேட்டை நோக்கி நடந்தாள் உமா.

அவன் பின்னோடு வந்தான். ''வெளியே போவணுமா அம்மா? தனியாகப் போகப் படாதுங்க. நானும் துணைக்கு வாரேன்.''

ஒரு முடிவுக்கு வந்தவளாக உமா அவனைப் பார்த்து அழகாக முறுவலித்தாள். ''அய்யாவோடு ஒரு பந்தயம் போட்டிருக்கிறேன் சம்பந்தம். என்னால் தனியாக மாம்பலத் துக்குப் போய்விட்டு வரமுடியாது என்றார். முடியும் என்று காட்டி வெல்ல வேண்டும். நீ கூடவந்து கெடுக்காதே'' என்று வலுக்கட்டாயமாக உதடுகளைப் பிரித்து, பல்வரிசையைக் காட்டினாள்.



அவனும் முப்பத்திரண்டு பற்களையும் காட்டினான். ''ஜாக்கிரதை அம்மா காலம் கெட்டுக்கிடக்குது. மாம்பலத் துக்கு அஞ்சாம் நம்பர்லே ஏறுங்கம்மா'' என்று சொல்லிக் கொடுத்தான்.

பெருமூச்சை உள்ளடக்கியவாறு அந்த வீட்டை விட்டு உமா வெளியேறினாள்.

தாயின் கதகதப்பான இறக்கை அணைப்பை இழந்த குஞ்சுபோல அவளது எலும்பு வரையிலும் ஒரு குளிர் தாக்கியது.

## 10

சம்பந்தம் கூறியது போலவே பஸ்ஸில் ஏறி மாம்பலத்துக்கு வந்து சேர்ந்தாள் உமா.

அங்கே சென்டிரல் ரெயில்வே ஸ்டேஷனுக்குச் செல்லக் கூடிய பஸ் எது என்று அவள் தயங்கித் தயங்கிக் கேட்டது, வேறு சிலரின் கவனத்தையும் கவர்ந்தது.

அதன் விளைவாக அவள் பஸ்சில் ஏறிச் சென்றபோது அந்த பஸ்சை இரு கார்கள் பின் தொடர்ந்து சென்றன.

மூர்மார்க்கெட்டில் பஸ்சில் இருந்து இறங்கி ரெயில் நிலையத்தை நோக்கி நடந்தாள் உமா.

ஆனந்தனிடம் இருந்து விலகி விலகிப் போய்க்கொண்டு இருக்கிறோம் என்ற ஒரே நினைவுடன் வேதனையோடு சென்று கொண்டிருந்தவர்களுக்குத் தன் அருகில் ஒரு காரின் வேகம் குறைந்து கதவு திறந்த போதும் அதில் கவனம் இல்லை.

ஒரு கொழுத்த கரம் பழக்கப்பட்ட லாகவத்துடன் அவளைப் பற்றி இழுத்ததும் நிலைகுலைந்து காரின் உள்ளே விழுந்தாள்.

''யார்?'' என்று திறந்த அவள் வாயில் ஒரு கை அழுத்தமாகப் பதிந்தது.

முன்னே ஓட்டுநர் இருக்கையில் இருந்தவர் பின்புறம் சாய்ந்து, காரின் கதவை மூடிவிட்டு வெகு வேகமாகக் காரைச் செலுத்தினார்.

வினாடிக்குள் நிகழ்ந்துவிட்ட இந்தச் சம்பவம் யாருடைய கவனத்தையும் கவரவில்லை. அதாவது அந்தக் காரின் பின்னேயே தன் காரைச் செலுத்தி வந்தவளைத் தவிர.

அவளும் முழுமையும் காணவில்லை. காரின் கதவு திறந்து மூடிய சத்தத்தை மட்டும் கேட்டாள். அடுத்து அவள் பின் தொடர்ந்து வந்த உமாவைக் காணவில்லை.

உமா அந்தக் காரினுள்தான் ஏறியிருக்க வேண்டும் என்று யூகித்து அதைப்பின் தொடர்ந்தாள் அவள்.

வளைவில் திரும்பி முன் கார் வரும்போது அந்தக் காரை ஓட்டியவரைக் கண்டதும் அவள் முகம் வியந்து விரிந்தது.

இலகுவாக ஊகிக்கக் கூடியபடி முதல் காரை ஓட்டி வந்தது கனகலிங்கம்தான்.

உமாவை உள்ளே இழுத்தது செண்பகத்தம்மாளேதான்.

பெரியன்னையின் முகத்தைக் கண்டதும் உமாவுக்குத் திகிலடித்துப் போயிற்று. திமிறிக் கொண்டு எழ முயன்றாள்.

ஆனால் அந்த இரும்புக் கரங்களின் வலிமையை ஏற்கனவே அறிந்தவள் ஆதலால், நம்பிக்கையின்றிதான் முயற்சி செய்தாள். அவளது முயற்சி பலிக்கவும் இல்லை தான்.



சற்று நேரத்தில் கனகலிங்கத்தின் வீட்டில் தன் விதியை நொந்து கொண்டு உமா தலைகுனிந்து நின்றாள்.

செண்பகத்தின் பார்வை ஒரு குறுகுறுப்புடன் உமாவை ஆராய்ந்தது.

உமா கூசிக் குறுகிப் போனாள்.

''அப்படிப் பார்க்காதே பெரியம்மா'' என்று வேறு புறமாகத் திரும்பி நின்றாள்.

''ஆமாம், ஏண்டி அவன் உன்னை விரட்டி விட்டான் குழந்தை கிழந்தை உண்டாகி விட்டாயா?''

முகம் சூடுபெற்று சிவக்க, ''அவர் என்னை விரட்டவில்லை'' என்றாள் உமா.

''பின்னே உனக்கே அவன் ஒருத்தன் கிட்டே மட்டும் இருந்து அலுத்துப் போயிடுச்சா?'' என்று ஒரு திருப்தியுடன் வினவினாள் செண்பகம்.

''கடவுளே!'' என்று துடித்துப் போய் பல்லை இறுகக் கடித்துக் கொண்டு நின்றாள் உமா.

''என்னமோ கடவுள் புண்ணியம் போ. இன்றைக்கு எங்கள் கையில் சிக்கினது நல்லாச்சுது, ஏனுங்க இன்றைக்கு அந்த அடையாறு சிங்கை அழைத்து வாருங்க. உமாக்கண்ணு இனிமேலே முரண்டு பிடிக்காது. ஆனந்துகிட்ட இருந்தது அடுத்தவனுக்கும் சம்மதிக்கும்.''

''மாட்டேன் பெரியம்மா'' என்று தவித்துப் போய் குறுக்கிட்டாள் உமா.

''என்னா...டீ'' என்று நீட்டி முழங்கினள் பெரிய தாயார். உங்கம்மாவை விட்டமாதிரி உன்னையும் தாரைவார்ப் பேன்னா நினைத்தே?''

இந்த வாழ்வுக்கு இணங்க மறுத்து துணையாக ஒருவனைப் பற்றிக் கொண்டு இங்கிருந்து தப்பி ஓடி, நல்ல வாழ்வு வாழ்ந்தவள் தாய் என்பது உமா யூகித்து அறிந்து கொண்ட கதைதான். ஆனால் அவளுக்கு நல்ல துணை கிடைத்தது. இந்த துர்பாக்கியம் பிடித்த மகளுக்கு அது கிட்டவில்லையே.

பிறகு உமா தனக்குப் பழக்கப்பட்ட சில சித்திரவதைகளை அனுபவித்தாள். ''மரியாதையாகச் சம்மதிச்சுடு. இல் லேண்ணா உண்டு இல்லைன்னு ஆக்கிடுவேன்'' என்று உறுமினாள் செண்பகம்.

''ஆக்கி விடு'' என்றாள் உமா வெறுப்புடன்.

வேதனையும் வெறுப்பும் மிதமிஞ்சிவிட அவளுக்குக் கண்ணீர் கூட வரவில்லை. கொடூர விதி தன்னை மீண்டும் இந்த நரகத்தில் கொணர்ந்து தள்ளிவிட்டதே என்று ஆத்திரம் தான் மிகுந்தது.

கை ஓயுமட்டும் அடித்தாள் செண்பகம்; ஆனால் உமா அசைவதாகவே இல்லை.

''விட்டு விடுவேன் என்றாடி நினைத்தாய்? உன்னை பணிய வைக்கும் வழி எனக்கல்ல தெரியும். இவளைப் பார்த்துக்குங்க, இதோ வாரேன்'' என்று உள்ளே சென்றாள்.

அவள் மீண்டும் திரும்பி வந்தபோது செண்பகத்தின் கையில் செக்கச் சிவந்த சூட்டுக்கோல் இருந்தது.

உமா அந்தச் சூட்டுக்கோலை வெறித்துப் பார்த்தாள். அதன் தொடர்பான நினைவுகள் எழுந்தன. சட்டென விம்மி அழுதாள்.

செண்பகத்தம்மாள் பயங்கரமாக — இளித்தாள்.

''நினைவு இருக்குதில்ல? பின்னே சரின்னுடு.''



உமாவின் பார்வை இப்போது பெரிய தாயை வெறித்தது. ''இதற்கு பயந்து சம்மதித்தால், பெரியம்மா பிறகு என் உடல் முழுவதுமே இது படுவதுபோல எனக்கு எரியுமே,'' என்று விம்மினாள் உமா.

பிறகு திடசித்தத்துடன் நிமிர்ந்தாள்.

''வா பெரியம்மா, சுடு சுட்டுவிடு. என் முகத்திலே சுடு. இனி என்னை ஒருவன் நாடமுடியாதபடி சுடு'' என்றாள் வெறிபிடித்தவள் போல.

செண்பகத்தம்மாள் திகைத்தாள். இந்தச் சூட்டுக் கோலுக்கு பயப்படாதவர்களே கிடையாது. இப்போது அது பயனற்றுப் போவது என்றால் எப்படி?

விறைப்பை விடாமல் ''இவளை அறைக்குள்ளே போட்டுப் பூட்டுங்கள். பட்டினி போட்டால் புத்தி வரும்'' என்று கணவனுக்கு(?) உத்திரவிட்டாள்.

☆ ★ ☆

அந்த அறைக்குள் அடைப்பட்ட உமா தப்பியோட எந்த முயற்சியும் செய்யவில்லை. பயன் இராது என்பது தான் அவளுக்கு ஏற்கனவே தெரியுமே.

ஆனாலும் முன்பு இருந்த அச்சமும் திகிலும் இப்போது உமாவிடம் இல்லை. முன்பு அடிப்பாளே 'பின்'னால் குத்துவாளே வலிக்குமே என்றெல்லாம் நடுக்கம் இருந்தது. இப்போது அப்படித் தோன்றவில்லை.

''என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும்; இவள் எண்ணம் நிறைவேறப் போவது இல்லை,'' என்ற தைரியம் மனதில் உண்டாயிற்று.

உயிரே போனாலும் சரிதான் என்று திடம் தோன்றியது.

ஏதோ நினைவு வந்தது. பத்திரிகையில் வந்த செய்தி என்று செந்திரு சொன்னாளே. தீக்குளித்து மாண்டாளே, அந்தப் பெண்ணும் மனதில் யாரையேனும் எண்ணியிருப் பாளோ? அதனால்தான் தன் உடலில் தானே தீ வைத்துக் கொள்ளும் வலிமை வந்ததோ?

இப்போது உமாவுக்குப் புரிந்தது. ''ஆனந்த் உங்களை நினைத்தே நான் என்னைக் காத்துக் கொள்வேன்.''

## 11

கிட்டத்தட்ட அதே நேரத்தில் ஆனந்தனின் மேசை மீது இருந்த அவனது தனிபோன் கிணுகிணுத்தது.

கூட அமர்ந்து பேசிக் கொண்டு இருந்தவர்களிடம் ஆங்கிலத்தில் மன்னிப்புக் கேட்டு டெலிபோனை எடுத்தான் ''அலோ ஆனந்த் ஹியர்.''

''அத்தானா? ஆனந்தமான என் அத்தானே! உங்கள் ஆனந்தமான சேதியை என்னிடம் எப்போது சொல்லப் போகிறீர்கள்?'' என்று ஒரு குரல் கேலியாகக் கேட்டது.

ஆனந்தன் முகத்தில் கடுமை ஏறியது. ''என்ன விஷயம் மாலினி'' என்றான் சுருக்கமாக.

''உங்களைப் பிடித்திருந்த மோகினிப் பேயை நீங்களே விரட்டி விட்டீர்களா அத்தான்?''

''......''

''அல்லது அந்த அழகு சுந்தரி தானாக ஓடிவிட்டாளா?'' என்றான் மாலினி குத்தலாக.



''என்ன உளறுகிறாய்?''

''உளறுகிறேனா? ஆமாமாம். அந்தப் பஞ்சவர்ணக் கிளியின் கொஞ்சலைக் கேட்டுச் சொக்கிக் கிடந்தவருக்கு இந்தச் சாதாரணக் குடும்பப் பெண்ணின் பேச்சு உளறலாகத் தான் இருக்கும்,'' அவன் தன்னை மறுத்த ஆத்திரம் தீரக் குத்தினாள் மாலினி.

ஆனால் ஆனந்தன் இளைத்தவன் அல்லவே? ''சாதார ணக் குடும்பப் பெண்ணா? அது யார் மாலினி? எனக்குத் தெரிந்த வரையில் உங்கள் வீட்டில் அப்படியாருமில்லை,'' என்றான் ஏளனமாக.

''கண்ட தாசிகளுடன் சகவாசம் உள்ளவர்களுக்கு குடும் பப் பெண்களை இனம் காணத் தெரியாதுதான்,'' என்று பதிலுக்குக் கொடுத்தாள் மாலினி.

''நாவை அடக்கிப் பேசு'' என்றான் ஆனந்தன் ஆத்தி ரத்தை உள்ளடக்கி.

''பின்னே உங்கள் மோகினி என்ன பதிதாண்டாப் பத்தினியோ? அப்பேர்ப்பட்ட பத்தினிக்குக் கனகலிங்கத்தின் காரில் என்ன வேலை?''

''கனகலிங்கம்?''

''ஆ...மாம் கனகலிங்கமேதான். எந்தக் கனகலிங்கம் என்று கேட்பீர்களோ? எல்லாம் உங்களுக்குப் பழக்கமானவன் தான். மூன்று மாதங்களுக்கு முன் விபசார வழக்கில் பக்கம் பக்கமாகத் தினசரிகளில் சந்தி சிரித்தானே அதே க... ன... க... லி... ங்... கமேதான்'' என்று இராகம் பாடினாள் மாலினி.

ஒலிவாங்கிப் பட்டென்று தாங்கியில் விழுந்தது.

வலுக்கட்டாயமாக வரவழைத்த புன்னகையுடன் எதிரே இருந்த அயல் நாட்டினரிடம் மீண்டும் மன்னிப்புக் கேட்டு விட்டு, மறுபடியும் ஒலிவாங்கியை எடுத்தான்.

''எடுப்பீர்கள் என்று தெரியும் அத்தான்'' என்று மாலினியின் குரல் தொடர்ந்தது.

மீண்டும் போனை வைத்துவிட்டு மேஜை மேல் இருந்த இன்னொரு டெலிபோனை எடுத்தான். எக்ஸ்சேஞ்சில் கூப்பிட்டு நம்பர் போடச் சொன்னான். இரண்டு மூன்று தரம் அடித்த பின் யாரோ எடுத்தார்கள். ''யாரு செந்திருவா?''

''ஆமாய்யா.''

''அம்மா எங்கே?''

''அம்மா வெளியே போனாங்கய்யா. உங்களிடம் ஏதோ பந்தயம்...''

அவள் பேச்சு முடியுமுன் ஆனந்தன் டெலிபோனை வைத்துவிட்டான்.

உதட்டைக் கடித்துக் கொண்டு சுற்றிலும் பார்த்தான். ''தயவு செய்து மன்னியுங்கள், நான் வெகு அவசரமாகப் போகவேண்டும்'' என்று மானேஜரை அழைத்தான்.

''இவர்களுக்கு தேவையானதை கவனியுங்கள் லஞ்ச், எல்லாம் பணம் எடுத்துக் கொள்ளுங்கள்... இப்போது நான் வரட்டுமா? தயவு செய்து மன்னிக்க வேண்டும்'' என்று ஆங்கிலத்தில் கூறிவிட்டு மின்னல் வேகத்தில் வெளியேறினான்.

☆ ★ ☆



சில நிமிடங்களிலே ஆனந்தனுடைய கார் சீறிப் பாய்ந்து வந்தது.

சம்பந்தம் விழுந்தடித்துக்கொண்டு சென்று கதவைத் திறக்கும்முன் ஆனந்தனே கார் கதவைத் திறந்துகொண்டு இறங்கி வந்தான்.

''அம்மா...'' என்று ஏதோ அவன் மென்று விழுங்கியதைக் கேட்க ஆனந்தன் அங்கேயில்லை. அவன் புயல் வேகத்தில் மாடிக்குச் சென்றிருந்தான்.

உமாவின் அறையில் விழிகள் சுழன்றன.

மேஜை மீது ஒழுங்கான மடிப்புடன் கடிதம் இருந்தது.

ஒரே எட்டில் அதை எடுத்துப் படித்தான். அந்த இரண்டே வரிகளில் பார்வை மீண்டும் மீண்டும் பதிந்தது.

''பழைய வாழ்வுக்குத் திரும்புகிறேன். மன்னியுங்கள் உமா.''

''பழைய வாழ்வு! பழைய வாழ்வா? பாவி...''

ஒரு கணம் ஆனந்தன் தள்ளாடினான். சமாளித்துக் கொண்டு அருகில் இருந்த டிரஸ்ஸிங் டேபிளின் ஸ்டூலில் அமர்ந்தான்.

எத்தனை முறை உமா இதில் உட்கார்ந்திருப்பாள். கடைசியில்... இங்கே என்ன கிடைக்கவில்லை என்று சென்றாள்? பழைய வாழ்வு அதற்கா திரும்புகிறாள்?

ஆனந்தனின் விழிகளில் செம்மை பரவியது.

கடிதத்தைக் கசக்கி எறிந்துவிட்டு மடமடவென்று கீழே வந்தான்.

அச்சத்துடன் நின்றிருந்த செந்திருவோ அவளுடைய கணவனோ அவன் கண்ணில் பட்டாற்போலவே தெரியவில்லை.

அவன் காரை நோக்கிச் செல்லவும் சம்பந்தம் ஓடோடியும் வந்து கதவைத் திறந்தான்.

ஆனந்தன் ஏறிய கையோடு கார் சீறிப்பாய்ந்தது.

☆ ★ ☆

அன்று கனகலிங்கத்தின் வீட்டிற்கு தாடிக்காரன் ஒருவன் வந்தான்.

முழுதாக பத்து நூறு ரூபாய் நோட்டுக்களைக் கனகலிங்கத்தின் கையில் வைத்து அவன் அழுத்தவும் அவருடைய முகமும், செண்பகத்தின் முகமும் முழுவதும் பல்லாயின.

''ஒரு விஷயமாச்சே...'' என்று சேலையை இழுத்து மூடிக்கொண்டு உடலை நெளிக்க முயற்சித்தாள் செண்பகம்.

''க்யா.''

''பொண்ணு கொஞ்..சம் ஒரு மாதிரி. முரட்டுக் குதிரை மாதிரியான்னு வைங்களேன். அதுமாதிரி முரட்டுத்தனம் அதுக்குப் பிடிக்கும். அதுக்காகக் கொஞ்சம் முரண்டு பிடிக்கும்...''

''அச்சா, அச்சா, எனக்கும் அத்லே பிடிக்கும். பர்வா நகி பர்வாநகி விச்ரூம்?'' என்று வினவினான் அவன்.

அவனை அறையினுள் அனுப்பிவிட்டு இருவரும் உமாவிடம் வந்தனர். வந்தனர் என்பதைவிடக் கையிலிருந்த ஆயிரம் ரூபாய் அவர்களை உந்தித் தள்ளியது எனலாம்.



''உமா கண்ணு...'' என்று குழைந்தாள் செண்பகம்.

''முடியாது'' என்றாள் உமா திடமாக.

''மயிலே மயிலேன்னா இறகு போடுமா? வேண்டியவன் பிய்த்து எடுத்துக்கொண்டு போகிறான். இவளை இழுத்துப் போய் அவன்கிட்டத் தள்ளுங்கள்'' என்றாள் செண்பகம்.

உமாவின் கைகளைப் பிடித்துத் தரதரவென்று இழுத்து வந்தார் கனகலிங்கம்.

தாடிக்காரன் இருந்த அறைக் கதவை செண்பகம் திறக்க உமாவை உள்ளே தள்ளினார்.

அவள் சமாளித்துக் கொண்டு திரும்புமுன் தாடிக்காரனிடம் கண்ணடித்து விட்டுக் கதவைச் சாத்தி வெளிப்புறமாகத் தாழிட்டாள் அவருடைய தர்மபத்தினி.

பிறகு கனகலிங்கத்தின் சட்டைப் பையிலிருந்த ஆயிரம் ரூபாயை எடுத்து வருடியபடி சென்று விட்டாள்.

☆ ★ ☆

உமா இதை எதிர்பார்க்கவில்லை. பிடிவாதமாக மறுத்து விட்டால் போதும் என்று எண்ணியிருந்தாள். மயிலின் இறகு பிடுங்கவும் ஒருவன் இங்கே வரக்கூடும் என்று அவள் நினைக்கவில்லை.

ஆனாலும் வினாடிக்குள் தன் மலைப்பை மறைத்துக் கொண்டு ''நீங்கள் தவறான தகவலில் வந்துவிட்டீர்கள்'' என்றாள்.

அவன் பதில் பேசாமல் அவளை நெருங்கினான்.

கூடியமட்டும் நிதானமாகவே, ''நான் சொல்வதைக் கேளுங்கள் என்னைத் தப்பாக எண்ணி வந்துவிட்டீர்கள்...''

அவனுக்குக் காது கேட்பது போலவே தெரியவில்லை. அவனது நடையில் தயக்கமும் இல்லை.

உமாவின் நிதானம் பறந்தது. "நான் ஒரு போதும் இதற்குச் சம்மதிக்க..." அதற்கு மேல் வார்த்தைகள் அவளது உள்ளத்திலேயே உறைந்தன. ஏனெனில் அந்த தாடிவாலாவின் கரங்கள் மலைப்பாம்பின் வலுவுடன் அவளை வளைத்து அணைத்தது அவளுக்கு மூச்சுத்திணறடித்தது.

"சீ, என்னை விடு..." என்று முழு மூச்சுடன் அவனை விலக்கித் திமிறியவள் சட்டெனத் திகைத்து நிமிர்ந்தாள். நீங்... நீங்களா.."

தலையைப் பின்னே சாய்த்துக் கடகடவென்று நகைத்தான் ஆனந்தன்.

"கண்டுபிடித்து விட்டாயே, கெட்டிக்காரிதான், ஆனால் அவ்வளவு சாமர்த்தியம் இல்லாதவள் இந்தப் பழைய வாழ்வுக்குத் திரும்பி வருவாயா?" என்றபடி ஒரு கையால் தன் பொய்த்தாடியை எடுத்து விசிறியடித்தான்.

ஆனந்தனேதான். ஆனால் அவன் குரலில் எவ்வளவு குத்தல்! ஏளனம்!

"நீங்கள் தப்பாக நினைத்து..."

"உங்... நேற்றுவரை நடந்ததெல்லாம் தப்புதான். இதுவரையிலும் தப்பாக எண்ணி உன் ஜாலங்களை நம்பிக் கொண்டிருந்தது மெய்தான். ஆனால் இப்போது கண் திறந்து விட்டது கண்ணே. ஞானோதயம் ஆகிவிட்டது. பாவம் இந்த வாழ்வில் பழகிப் போனவளுக்கு ஒரு மாத காலம் பட்டினி கிடப்பது எப்படி சாத்தியம்?"

"ஆனந்த்..." என்று அதிர்ந்து போய்க் கூவினாள் உமா.



அவன் வெறுப்பாக நகைத்தான், "இதை வெளிப்படையாகக் காட்டியிருக்கலாம் உமா. முரட்டு அணைப்புதான் உனக்குப் பிடிக்கும் என்றால் அதையேனும் கோடி காட்டியிருக்கலாம். வீணே பசித்துக்கிடக்காமல் திருப்தியாக வாழ்ந்திருக்கலாமே" முகத்தில் காறி உமிழாத குறை.

தாங்க முடியாமல் நெஞ்சு வலித்தது உமாவுக்கு. கூடவே இன்னமும் அவன் கைச்சிறைக்குள் இருப்பதை உணர்ந்தாள். அவன் கைப்பட்ட இடம் எரிந்தது. 'விடுங்கள்' என்று தன்னை விடுவித்துக் கொண்டாள்.

மீண்டும் அவன் உரக்கச் சிரித்தான். "விடுவதா? என்னை ஒரு ஏமாளி என்று எண்ணிவிட்டாயா உமா? அன்று ஆயிரம். இன்று இதற்குள் ஆயிரம் இதன் பெறுமானம் எனக்கு வேண்டாமா? உனக்கும் பழைய வாழ்வின் சுகம் கிடைக்கும், ஏமாற்றம் இராது கண்ணே. என்னை நம்பு" என்றான் அவன் குரூரத்துடன்.

அவனுடைய கைகள் அவள் மேனியில் இன்னமும் இறுகிப் படரலாயின.

உமா துடித்தாள். "இல்லை ஆனந்தன் இல்லை. நான் பழைய வாழ்வு என்று இதைச் சொல்லவில்லை. இதற்கும் முந்திய ஒன்றை; மெய்யாக இது எனக்கு பழக்கம் இல்லை... ஆனந்தன் கொஞ்சம் பொறுங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள் இல்லையானால்... இல்லையானால், பிறகு நீங்களே வருத்தப்படுவீர்கள் ஆ...னந்த்..." என்று கதறினாள் உமா.

அவன் செவிப்புலனே அற்றுப்போன மிருகமாகியிருந்தான்.

தவிப்புடன் அவன் முகத்தைப் பார்த்த உமா திகைத்தாள், இதுவா அவளுடைய ஆனந்தனின் முகம்?

முழுமூச்சுடன் விடுபட முயன்றாள் உமா. சற்று அவன் பிடி தளரவும் உதறிவிட்டு ஓடினாள். எங்கே ஓடி விட முடியும் என்று கூட அவளுக்குத் தோன்றவில்லை; அவனை விட்டு விலகிமட்டும் ஓடினாள்.

ஆனால் அவன் ஒரே எட்டில் அவளுடைய தோளைப் பற்றிவிட்டான்.

அவள் நழுவி ஓட முயன்றபோது அவன் அழுந்தப் பற்றி இழுத்த வேகத்தில் உமாவின் ஜாக்கெட் தோள்புறம் கிழிந்தது.

திகைப்புடன் தோளைத் தொட்டுப் பார்த்தாள். உமா நின்று திரும்பி அவனை நோக்கினாள்.

முந்திய மாலையில் இருந்து அவள் ஒன்றும் சாப்பிட வில்லை. சொல்லப் போனால் பச்சைத் தண்ணீர் கூடப் பருகவில்லை. பசி, தாகம், அது போக எத்தனை அடிகள், உதைகள், ஆனந்தனை ஆதாரமாகப் பற்றிக்கொண்டு அத்தனையும் பொறுத்தாளே. இப்போது இந்த ஆனந்தனே சோதனையாகிப் போனால்...

உமாவின் கைகால் எல்லாம் சோர்ந்தன. உடல் பதறியது.

வெறிகொண்ட சிரிப்புடன் அவனுடைய கை அந்த வெற்றுத் தோளில் விழுவதை உணர்ந்தாள் உமா.

ஒருகணம் உலகம் தட்டாமாலை சுற்றியது.

''கொன்று விடுங்கள், என்னைக் கொன்று விடுங்கள். இதைவிட... என்னைக் கொன்று'' என்று பதறியவள் உணர்வு இழந்து அவன் காலடியில் சுருண்டு விழுந்தாள்.



## 12

ஆனந்தன் திடுக்குற்றுக் குனிந்தான்.

''உமா, உமா, உமா'' என்று அவளைப் பற்றிக் குலுக்கினான்.

பதில் இல்லாது போகவே லேசான பதட்டத்துடன் சுற்றிலும் பார்த்தான்.

மேசைமேல் தண்ணீர் இருந்தது கண்ணில்பட்டது.

ஒரே தாவலில் சென்று எடுத்து வந்து அவள் முகத்தில் தெளித்தான்.

ஊகூம் உமாவிடம் அசைவே இல்லை.

மயங்கிக் கிடந்த அந்த முகத்தை மண்டியிட்டுச் சற்று நேரம் பார்த்தான்.

பிறகு அவள் முகத்தை இரு கைகளிலும் ஏந்தி 'உமா' என்று மீண்டும் அழைத்தான்.

ஆனால் இப்போது உமாவுக்கு அனைத்துப் புலன்களும் வசமிழந்து போயிருந்தன.

மெல்ல அவளை இருகைகளிலும் ஏந்தித் தூக்கினான்.

பிறகு சிறு யோசனையுடன் அவளை ஒரு தோளில் போட்டுக்கொண்டு நடந்தான்.

மறு கை பாண்ட் பாக்கெட்டினுள் பதிந்தது.

அவன் எதற்கும் தயாராக வந்ததும் நல்லதுதான்.

கதவை இருமுறை தட்டியபின் வெளியே யாரோ ஓடோடி வந்து திறந்தார்கள். கனகலிங்கமேதான்.

தோளில் சுமையுடன் அவனைக் கண்டதும் அவர் மிரண்டார்.

அவரை இடித்துத் தள்ளிக் கொண்டு ஆனந்தன் வெளியே செல்லலானான்.

''ஏ... எங்கே'' என்று அவனைப் பிடித்து நிறுத்த முயன்றார் கனகலிங்கம்.

அவரை ஓர் உதறு உதறினான் ஆனந்தன்.

அவன் பாக்கெட்டில் இருந்த கைத் துப்பாக்கியும் வெளியே வந்தது.

''துப்பாக்கி...'' என்று விழித்தார் அவர்.

அரவம் கேட்டு வந்த செண்பகமும் கூடத்தான்.

''எனக்கு தெரிகிறது அல்லவா? நான்தான் ஆனந்தன். இனி உமாவின் வாழ்வில் குறுக்கிட்டால் உங்கள் இருவருக்குமே நான்தான் எமன்,'' என்றான் அழுத்தம் திருத்தமாக.

இருவரும் திகைத்து நிற்க மடமடவென்று காரிடம் சென்றான். உமாவை மிருதுவாக உள்ளே படுக்க வைத்துவிட்டுக் காரை எடுத்தான்.

☆ ★ ☆

அவ்வளவு நேரம் காத்திருந்துவிட்டு இனி மகன் வர மாட்டான் என்று முடிவு செய்தார், அருள்மொழி. மனதில் வேதனை உண்டாயிற்று.



கை நிறையப் பணமும் கண்டவர் சவகாசமும் ஆனந்தனை எங்கோ கொண்டு நிறுத்தி விட்டன? ஒரு பெருமூச்சுடன் சமையல்கார அம்மாவை வேலை முடித்துப் படுக்கச் சொல்வதற்காக எழுந்தார்.

அப்போது போர்டிகோவில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது.

மனதில் மகிழ்ச்சியுடன் மகனை வரவேற்க எழுந்தார்.

வாயிலை நோக்கித் தன் வழக்கமான நிதானத்துடன் நடந்தவர் பாதியில் துணுக்குற்று நின்றார்.

கைகளில் ஒரு பெண்ணை — உமாவை ஏந்தி வெறி கொண்டவன்போல வருபவன் ஆனந்தன் — ஆனந்தனேதான்.

தாயை வெறித்துப் பார்த்தபடி ஆனந்தன் சில வினாடிகள் அசையாமல் நின்றான்.

பிறகு ''என்னோடு வாருங்கள்'' என்று கம்மிய குரலில் கூறிவிட்டு உமாவை ஏந்தியபடி மாடி ஏறினான்.

அங்கே அருள்மொழியின் அறைக்குள் சென்று கட்டிலில் உமாவைக் கிடத்திவிட்டு நிமிர்ந்தான். ''அம்மா உங்களுக்கு ஒரு மருமகள் வருவது என்றால் அவள் இவள்தான். இவள் இல்லை என்றால் யாருமே இல்லை'' என்றான்.

அருள்மொழி ஒன்றுமே பேசவில்லை. நினைவற்றுக் கிடந்த உமாவின் நெற்றியைத் தொட்டார். பிறகு டெலிபோனிடம் சென்று டயல் செய்தார். ''மயக்கம் என்று சொல்லுங்கள் நர்ஸ், டாக்டரை உடனே வரச் சொல்லுங்கள்'' என்றார்.

மேலே மின் விசிறியைச் சுழல விட்டார்.

கைக்குட்டையை நனைத்து உமாவின் இமைகளில் மெல்லத் தடவினார்.

அந்த இதத்திலோ என்னவோ உமா கண் திறந்தாள்.

திறந்ததும் பார்வை எதிரே நின்ற ஆனந்தனிடம் நிலைத்தது.

சில கணங்கள் அசையாத பார்வையைத் தொடர்ந்து அந்த முகத்தில் அச்சமும் சொல்லொணாத வேதனையும் தவிப்பும் அடுத்தடுத்துத் தோன்றின.

உதடுகள் துடிக்க ''என்னைக் கொன்று விடுங்கள்'' என்று விம்மினாள்.

''உமா'' என்று குனிந்தான் ஆனந்தன்.

ஆனால் அதற்குள் உமாவின் இமைகள் மீண்டும் மூடிக் கொண்டன.

ஆனாலும் ஆனந்தன் உமாவின் கையைத் தன் கையில் எடுத்து ''உமா நான் உன்னை நம்புகிறேன் உமா நிச்சயமாய் நம்புகிறேன்'' என்றான்.

உமா மீண்டும் கண் திறந்தாள்.

அவனைப் பார்த்து மிரள மிரள விழித்தாள்.

''கொஞ்சம் பொறுங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். இல்லையானால் — இல்லையானால் நீங்களே வருத்தப்படுவீர்கள். ஆ...னந்த்,'' என்று கதறினாள்.

ஒரு நிலையின்றி உடலை முறுக்கி நெளிந்தாள்.

அவளுடைய கன்னங்களில் இரு பொட்டுகளெனச் சிவப்பு ஏறுவதைக் கண்டார் அருள்மொழி.



கவலையுடன் தொட்டுப் பார்த்தார்.

அவர் அஞ்சியது போலவே உமாவின முகம் நெருப்பாகக் காய்ந்தது. ''அவளுக்கு நல்ல காய்ச்சல்'' என்றார் கவலையாக.

கதவை யாரோ தட்டினார்கள். டாக்டர்தான், அவர் உள்ளே வந்ததும், ''இந்தப் பெண் உமாவைப் பாருங்கள்'' என்று அருள்மொழி கூறினார்.

''பழைய வாழ்வு என்று இதைச் சொல்லவில்லை'' என்று முனகினாள் உமா.

''ஏதோ கனவு'' என்று நாடியைப் பார்த்தார் டாக்டர்.

கனவு அல்ல; பயங்கரமான நனவின் நினைவு என்பது ஆனந்தனுக்கு அல்லவோ தெரியும். உதட்டைப் பற்களால் அழுத்தியபடி அவன் அசையாமல் நின்றான்.

''எத்தனை நாளாகக் காய்ச்சல்?'' என்று டாக்டர் கேட்டார்.

அருள்மொழி மகனைப் பார்க்க ''இப்போதுதான்'' என்றான் மகன் இறுகிய உதடுகளை லேசாகப் பிரித்து.

''இப்போதுதான் என்றால் என்ன அர்த்தம் ஜுரம் நூற்றிமூன்று இருக்கிறது.

''அவளுக்கு... மனதில் ஓர் அதிர்ச்சி டாக்டர்'' என்றான் ஆனந்தன் வேதனையுடன்.

''ரொம்பவும் உணர்ச்சி வசப்படுவாள் போலிருக்கிறது'' என்றார் டாக்டர்.

உமா புரண்டாள். மூச்சுடன் லேசான முக்கலும் முனகலுமாக அமைதியற்றுத் தவித்தாள்.

டாக்டர் அவளுக்கு ஊசி போட்டார். சில மாத்திரைகளைத் தந்தார்.

''விழிக்கும்போது இதைக் கொடுங்கள். அம்மா. தாகம் என்றால் வெந்நீரைப் பொறுக்கும் சூடாகத் தாருங்கள். குளுகோஸ் போட்டுக் கொடுங்கள். காலையில் ஹார்லிக்ஸ் கொடுங்கள்'' என்று கிளம்பினார் டாக்டர்.

''டாக்டர்'' என்று அவரைத் தடுத்து நிறுத்தினார் அருள்மொழி. ''சுரம் அதிகமானால்?''

''ஆகாது அம்மா. ஊசி போட்டிருக்கிறேன் அல்லவா?''

''இருந்தாலும் எனக்குச் சற்று அதைரியமாக இருக்கிறது டாக்டர். இது தீவிர மன அதிர்ச்சியில் வந்த நோய்.''

டாக்டர் முகவாயைத் தடவினார். மீண்டும் உமாவைப் பார்த்தார். ஏதோ தோன்றவும் நாடியைப் பரிசோதித்தார்.

பிறகு ''எதற்கும் நான் என் ஜூனியரை அனுப்புகிறேன். டாக்டர் ரவியைத் தெரியும் அல்லவா அம்மா? இரவில் அவன் இங்கேயே இருக்கட்டும்'' என்று மீண்டும் கிளம்ப முயற்சித்தார்.

''தயவு செய்து டாக்டர்'' என்று மீண்டும் அருள்மொழி இடைமறித்தார். ''நீங்களே தங்கிவிட்டால் எனக்கு திருப்தியாக இருக்கும். இங்கே நீங்கள் உறங்குவதற்கு ஓர் அறை தயார் பண்ணச் சொல்லுகிறேன். மிகமிக அவசியமானால் மட்டும் உங்களை எழுப்புகிறோம்'' என்றார் லேசான வற்புறுத்தலுடன்.

டாக்டர் சற்று யோசித்துவிட்டு ''சரிதான்'' என்றார். ''ஒரு போன் மட்டும் செய்து கொள்கிறேன்'' என்று தன் வீட்டுக்கு டெலிபோன் செய்தார்.

☆ ★ ☆



இரவில் உமா யாரையும் தூங்க விடவில்லை. மடமட வென்று நூற்று ஐந்துவரை சுரம் ஏறியது. மூக்கில் நெருப்புப் பறக்க உடலை முறுக்கிக் கொண்டு மூச்சு விடவே திணறினாள். டாக்டர் மேலும் ஏதோ ஊசி போட்டார்.

சற்றுப் பொறுத்து. ''சூடு குறைகிறது. டாக்டர்'' என்றார் அருள்மொழி. ஆனால் டாக்டரின் முகத்தில் தெளிவு இல்லை.

அவர் அஞ்சியது போலவே உமாவுக்கு ஜன்னி கண்டது, ஒரே அலட்டல். ஆனந்தன் அவளைத் தூக்கி கிடத்தக் கிடத்தப் படுக்கையிலிருந்து நழுவினாள்.

இடையே ''மாட்டேன் நான் மாட்டேன்'' என்று ஓடத் தொடங்கி விட்டாள். சட்டென ஆனந்தன் பிடித்து நிறுத்து முன் அவளாகவே ஏதோ தட்டியதுபோல விழுந்து விட்டாள்.

ஆனந்தன் தன் முழு பலத்தையும் கூட்டி அவளைப் படுக்கையில் பிடித்து வைக்க வேண்டியதாயிற்று.

சற்று முரண்டிவிட்டு உமா பிதற்றத் தொடங்கினாள். ''சே, அப்படி எல்லாம் பேசாதே பெரியம்மா, எனக்குக் கேட்கவே அருவெறுப்பாக இருக்கிறது'' என்று முகத்தைச் சுளித்தாள்.

மிரள மிரள விழித்துவிட்டு ''மாட்டவே மாட்டேன் சீ'' என்றாள். மீண்டும் திகைப்புடன் ''அடிக்கிறாயே, பெரியம்மா'' என்றாள்.

''சூடு போட்டால் போட்டுக்கொள். பரவாயில்லை. ஆனால் நான் மாட்டேன் என்றால் மாட்டேன்தான்'' என்று வெறுப்புடன் தலையைத் திருப்பினாள்.

உடனே ஒரு மரணக் கூச்சலுடன் வலக்காலைப் பிடித்துக் கொண்டு துள்ளித் துடித்தாள். ''பெரியம்மா எரிகிறதே...

ஐயோ... எரிகிறதே... அம்மா'' என்று விம்மி அழுதாள். ச... சரி...'' என்று விக்கினாள்.

அவள் காலைப் பற்றியபோது விலகிய சேலையின் கீழ் காலில் மூன்று அங்குல நீளத்தில் தழும்பு தெரிந்தது.

இந்திரா நகர் வீட்டுக்கு அழைத்துச் சென்ற தினத்தில் கீழே விழுந்து காலில் அடிப்பட்டதாக உமா சொன்னது ஆனந்தனுக்கு நினைவு வந்தது. இப்போது உண்மை விளங்க வும் நெஞ்சு பதறியது. ஆக அவள் அன்று சொன்ன கதை எல்லாமே மெய்தான். அவன் தான் நம்பவில்லை. நம்பாமல் பெரிய அநியாயம் செய்து விட்டானே.

டாக்டரிடம் திரும்பினான். ''டாக்டர் இவள் புலம்பு வதை தடுக்க ஒரு வழியும் இல்லையா?'' என்றான்.

டாக்டரின் புத்தி சாதுரியமான விழிகள் அவனை ஆழ்ந்து நோக்கின. சற்று இரக்கத்துடன் அவன் தோளில் கை வைத்துச் சொன்னார்.

''அவள் மனதிலிருந்து பிறந்த நேரம் இது. அவள் ஒரு தொடர் ச்ராகப் புலம்புவதைப் பார்த்தால் அந்த அதிர்ச்சியின் தொடர் புகள் மனதை அலைந்து வெளிவருவதாகத் தெரிகிறது. அதைத் தடுக்க வைத்தியம் கலையில் ஒன்றுமில்லை ஆனந்தா, அதாவது அவளை அடியோடு மரத்துப் போக வைப்பதைத் தவிர. அந்த வழி உகந்தது என்று நான் யோசனை கூறமாட்டேன். ஏனென்றால்...'' என்னுமுன் உமா பேசினாள்.

''அது... அது ரஷியன் காமிரா, என்று முனங்கினாள். விட்ட இடத்திலிருந்து டாக்டர் தொடர்ந்தார். ''ஏனென்றால் அவள் நெஞ்சில் அடைந்துக் கிடப்பவை வெளிவந்து விடுவ தும் நல்லதுதான். நோய் விரைவில் மறையும் வாய்ப்பும் உள்ளது'' என்று முடித்தார்.



''என்னை வேசி என்றுதானே எண்ணி விட்டீர்கள்?'' என்று விம்மத் தொடங்கினாள் உமா.

சற்றுநேர அமைதிக்குப் பின் அவள் சிரித்தாள். வேத னையோ துயரமோ ஏதோ ஒன்றில் பிறந்த அரை சிரிப்பு.

பிறகு ஒரு விம்மல். அதன்பின் ''இதற்குப் பயந்து சம்மதித்தால் பெரியம்மா. பிறகு என் உடல் முழுவதுமே பற்றி எரியுமே... சுடு. சுட்டு விடு. என் முகத்திலேயே சுடு. இனி ஒருவன் என்னை நாட முடியாதபடி சுடு'' என்று கத்தினாள்.

பிறகு அன்று ஆனந்தன் அறிந்த வார்த்தைகள். கடைசி யாக ''என்னைக் கொன்றுவிடுங்கள்'' என்று அவள் மீண்டும் கதறித் துடித்தபோது அதுவரையிலும் பல்லைக் கடித்துக் கொண்டு இறுகிப் போயிருந்த ஆனந்தன் உடைந்தான்.

''உமா?'' என்று அலறினான். ''நான்... பாவி நான்... உமா இந்தக்... கை. இந்தைக் கை'' என்று வெறி கொண்ட வன் போல இரு கைகளையும் சுவரில் மோதினான்.

''ஆனந்தா'' என்று அருள்மொழி ஒரு புறமும் டாக்டர் ஒருபுறமுமாக அவனைப் பிடித்தார்கள்.

''அம்மா நான் பாவி அம்மா, நான் பாவி அம்மா...'' என்று தாயின் கைகளைப் பற்றிக்கொண்டு கதறினான் மைந் தன்.

விழிகளில் நீர்கசிய மகனை மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டார் அருள்மொழி.

''ம்... ம்...'' என்ற முனகல் சத்தம் கேட்கவும் மூவரும் மீண்டும் உமாவிடம் திரும்பினர்.

தன் போக்கில் விசித்தபடி மறுபுறம் திரும்பினாள் அவள்.

அதன் பிறகு மெல்ல மெல்ல உமாவிடம் அலட்டல் குறைந்தது. எப்போதேனும் விசிப்பாள். 'கொன்று விடுங்கள்' என்பாள். மற்றபடி அதிகப் பிதற்றலோ உளறலோ இன்றி அடங்கினாள்.

## 13

அதிகாலைக் கதிரவன் உலாக் கிளம்பியபோது உமா நல்ல அமைதியுடன் உறங்கத் தொடங்கினாள்.

டாக்டர் விடை பெற்றுக் கிளம்பினார்.

''அவளுக்குத் துணையிரு'' என்று மகனைப் பணித்து இருத்திவிட்டு அருள்மொழி டாக்டருடன் நடந்தார்.

சற்று தூரம் சென்றபின் ''டாக்டர்...'' என அழைத்தார்.

டாக்டர் முகத்தில் சிறு முறுவலுடன் திரும்பினார். வாய் மேல் விரலை வைத்துப் பிறகு இரு காதுகளையும் பொத்திக் காட்டினார். அருள்மொழியின் முகம் நிம்மதி பெற்றது.

''ஆனால் ஒரு நர்ஸ் அருகிலிருப்பது நலம். இந்த சுரம் ஒரு வாரமேனும் இருக்கும்'' என்றார் டாக்டர்.

''ஊகூம்'' என்று தலையசைத்தார் அருள்மொழி. ''நானே அவளைப் பார்த்துக் கொள்வேன். என்னால் முடியும் டாக்டர். அறுபத்தைந்து யுத்தத்தின்போது 'நர்சிங்' பயிற்சி எடுத்தேனே'' என்றார்.

அருள்மொழியின் சமூக சேவையை குடும்ப நண்பரான டாக்டர் அறியாதது அல்ல. அந்தப் பகுதி மகளிர் மன்றத்தின் தலைவி அவர். எங்கு துயர் தெரிகிறதோ அங்கெல்லாம்



அவர் நிற்பார். அவரது சொந்தப் பணத்தின் பெரும் பகுதியை, நியாயம் என்று அவர் நம்புகிற தர்மங்களில் செலவிட்டு வந்தார். அதோடு செய்வனவற்றைத் திருந்தவும் செய்கிறவர். எனவே டாக்டர் கவலையை விட்டு ''சரிதான் அம்மா'' என்றார். அவரை அனுப்பிவிட்டு அருள்மொழி உள்ளே வந்தார்.

கட்டில் அருகே நாற்காலியில் கழிவிரக்கத்துடன் உமாவைப் பார்த்துக் கொண்டு ஆனந்தன் அசையாமல் அமர்ந்திருந்தான். அருகில் சென்று அவன் தோளைத் தொட்டு ''வாய் கொப்பளித்து விட்டு வா, காபி குடிக்கலாம்'' என்றார்.

வேண்டாம் என்று தலையசைத்து விட்டுப் பேசாமல் இருந்தான் அவன்.

''எழுந்திரு. நான்தான் அவள் அருகில் இருக்கப் போகிறேன்'' என்று மகனைக் கிளப்பினார் அவர்.

☆ ★ ☆

அன்றும் ஜுரவேகத்தில் மயங்கியே கிடந்தபோதிலும் லேசான முனகல் தவிர உமாவிடம் வேறு பிதற்றல்கள் இல்லை. மாலையில் மீண்டும் வந்து பார்த்த டாக்டருக்கு திருப்தி உண்டாயிற்று.

மருந்து நேரத்துக்கு அலாரம் வைத்துக் கொண்டு சாய்வு நாற்காலியில் சரிந்து அரை குறையாக படுத்திருந்தாள் அருள்மொழி. அலாரம் கிணுகிணுக்கவும் அவர் அசதியுடன் எழுவதை ஆனந்தன் கவனித்தான்.

''ஒரு நர்ஸ் ஏற்பாடு செய்து விடுவோம் அம்மா'' என்றான் அவன்

'வேண்டாம்' என்று ஒரே வார்த்தையில் மறுத்து விட்டு மருந்துடன் உமாவிடம் சென்றார் தாயார். ''உமா உமா

வாயைத் திற'' என்று அவளை மெல்ல அசைத்தார். அரை மயக்கத்தில் அவள் வாயைத் திறக்கவும் மருந்தை வாயில் ஊற்றி அவள் விழுங்கியதும் வாயைத் துடைத்து விட்டார்.

பிறகு மீண்டும் அலாரத்தை நான்கு மணி நேரம் தள்ளி வைத்துவிட்டுப் பழையபடி இருக்கையில் சாய்ந்தார்.

''அம்மா ஒரு நர்சு...'' என்று மறுபடியும் ஆனந்தன் தொடங்கினான்.

பொறுமை இழந்து திரும்பினார் அருள்மொழி. ''ஆனந்தா உனக்கும் அவளுக்கும் தவிர வேறு யாருக்குமே தெரியக்கூடாத விஷயங்கள் நடந்திருக்கின்றன. விதிப் பயன் நானும் அறியுமாறு நேர்ந்துவிட்டது. டாக்டர்... அவர் நமக்கு வேண்டியவர். பரவாயில்லை. இன்னுமொரு நர்ஸ் வந்து இவள் இன்னமும் பிதற்றுவதைக் கேட்டுக் கதை பரப்பினால் நன்றாயிருக்குமா? யோசி, அதைவிட இது பரவாயில்லை. நான் சமாளித்துக் கொள்வேன் கவலைப்படாதே'' என்று மீண்டும் சாய்ந்து கொண்டார்.

ஆனந்தன் சற்று நேரம் தலைகுனிந்து அமர்ந்திருந்தான். பிறகு எழுந்து வந்து தாயின் காலடியில் அமர்ந்தான்.

அசைவை உணர்ந்து மூடியிருந்த கண்களைத் திறந்து பார்த்தார் அன்னை. கையை நீட்டி மகனின் தலையைத் தொட்டு தன் மடியில் சாய்த்துக் கொண்டார்.

சற்று நேரத்தில் மடி நனைவது தெரிந்தது.

மெல்ல மகனின் முடியை வருடினார்.

அப்போது அவருடைய கண்களுக்கு ஆனந்தன் இருபத்தாறு வயது இளைஞனாக வெற்றிபெற்ற தொழில் அதிபனாகத் தெரியவில்லை. காலில் சிறாய்த்துக் கொண்டு மடியில் வந்துவிழும் பத்துவயதுச் செல்லச் சிறுவனாகத் தோன்றி



னான். வயது வந்த பின் மனதளவில் எங்கேயோ சென்று கொண்டிருந்த மகன் அன்று மீண்டும் திரும்பி வந்தாற்போல உணர்ந்தார்.

☆ ★ ☆

உமாவின் சுரம் படிப்படியாக இறங்கி வந்தது. சுரமயக்கம் இன்றி இயல்பாக உறங்கலானாள்.

முதன் முதலாக அவள் தன்னுணர்வுடன் விழித்த போது அருள் மொழியைக் கண்டாள். லேசான வியப்புடன் கூடிய புன்னகையை இதழ்களில் படரவிட முயன்றபடியே மீண்டும் உறங்கிப் போனாள்.

மீண்டும் விழிக்கையில் ஆனந்தனும் அருகே இருந்தான்.

''உமா...'' என்று அவன் சிறு தயக்கத்துடன் அழைக்கையிலேயே அவளுடைய விழிகளில் நீர் பெருகலாயிற்று.

''என்னை நீங்கள் நம்பவில்லையே...'' என்று மெல்லிய குரலில் சிரமத்துடன் பேசும்போதே அயர்வுடன் அவளது கண்ணிமைகள் மூடிக்கொண்டன.

பெரிய கண்ணீர் முத்துக்கள் மூடிய இமைகளின் வழியே வடிந்து சிதறின.

அதன்பின் ஆனந்தன் அவளது பார்வை பட அதிகம் இருப்பது இல்லை. உமாவிடம் அசைவைக் கண்டதுமே தாயை அழைத்து வந்து விட்டு பின்னணியில் ஒதுங்கினான். மற்றபடி அவனால் முடிந்த போதெல்லாம் உமாவின் தலைப்புறமாக ஒரு நாற்காலியில் அமர்ந்திருப்பான்.

அவன் இருப்பதை உமாவும் அறிந்தே இருந்தாள். அவள் விழிக்கையில் படுக்கையை விட்டு அகலும் அழுத்தமான காலடிகள் தாழ்ந்த குரலில் தாயிடம் பேசும் அவன் குரல்

அருள்மொழி அணைத்துத் தூக்குகையில் அவசரமாகத் தலையணையை மாற்றிப் போடும் அவனுடைய கைகள் காலையும் மாலையும் நெற்றியில் படிந்து விலகும் வலியகரம்... கண்கள் மூடியிருக்கும் போதும் கருத்தில் உமா அறியாளா?

தப்பித்தவறி அவனது பார்வையைச் சந்திக்க நேர்ந்துவிட்டால் மட்டும் அனிச்சைச் செயல் போல அவள் முகம் கலங்கிப் பார்வை வேகமாக விலகிப் போயிற்று.

அவளது ஒதுக்கம் ஆனந்தனுக்கு வேதனையை அளித்ததும் உண்மைதான். ஆனால் எதையும் காட்டிக் கொள்ளாமல் அத்தியாவசியமாக அலுவலகம் சென்ற பொழுது, உண்ணல் உறங்கலுக்குச் செலவிட்ட நேரம் தவிர மற்றபடி அந்த அறையிலேயே அவன் அடைகாத்தான்.

☆ ★ ☆

உமா நடமாடத் தொடங்கினாள்.

முதன் முதலாக அருள்மொழியைப் பிடித்துக்கொண்டு நடந்தபோது ஒருதரம் தடுமாறினாள். பின்னோடு காவலாக வந்த ஆனந்தன் சட்டென அவளைத் தாங்கினான். தன்னால் இயன்ற அளவு விரைவில் சுவரைப் பற்றிக்கொண்டு உமா விலகிக் கொண்டாள்.

அன்று உமா வெளியே தோட்டத்தில் உட்கார்ந்திருந்தாள். அலுவலகத்தில் இருந்து வந்த ஆனந்தன் அவளைப் பார்த்துவிட்டு தோட்டத்திற்குள் சென்றான்.

காலடிச்சத்தம் கேட்டுத் திரும்பிய உமா ஆனந்தனைக் கண்டதும் குழப்பத்துடன் எழுந்தாள்.

''உட்கார் உமா, இப்போது எப்படி இருக்கிறது?'' என்று அவள் முகத்தைப் பார்த்தபடி வினவினான் ஆனந்தன்.



தலை நிமிராமல் 'நன்றாகிவிட்டது' என்றாள் உமா.

''சரி, நிற்கவேண்டாம். உட்கார்'' என்று அவள் பழையபடி உட்கார்ந்ததும் சற்றுத் தள்ளியிருந்த அடப்பைக் கல் பெஞ்சில் அவளைப் பார்க்கும்படியாக ஆனந்தன் உட்கார்ந்தான்.

சற்றுப்பொறுத்து அங்கே காபி டிபனுடன் பணியாள் பின் தொடர வந்த அருள்மொழி இந்த இரு ஊமைக் குழந்தைகளையும் கண்டு திகைத்தார். அவரது புருவ மத்தியில் ஒரு முடிச்சு விழுந்தது.

☆ ★ ☆

மறுநாள் அருள்மொழி உமாவிடம் அவளது பழைய வாழ்வைப் பற்றிய பேச்சைத் தொடங்கினார்.

உலக அனுபவம் அற்ற உமா இயல்பாக வலையில் விழுந்தாள்.

## 14

ஆனந்தனிடம் இருந்து எவ்வளவு தூரம் விலகினாளோ அவ்வளவுக்கு அவ்வளவு அருள்மொழியிடம் உமா ஒட்டினாள்.

இருவருமாகப் பழைய கதைகளைப் பேசிக் கொள்வதும் உண்டு.

உமா ஆசிரமத்தில் சேர்ந்த விதம்பற்றி அருள்மொழி பேச்செடுத்தார். ''உன் அம்மா புத்திசாலி உமா. இறக்கப் போகிறோம் என்று தெரிந்ததும் ஆசிரமத்து அன்னையை

வரவழைத்து உனக்கு உறவினரே இல்லை அனாதை என்று சொல்லி ஆசிரமத்தில் சேர்த்திருக்கிறாளே. உன் பெரிய தாயின் குணம் தெரிந்திருந்ததால் தானே. ஆனால் தமிழ் தெரிந்த ஒரே காரணத்துக்காக நீ சென்னைக்கு வேலை மாற்றம் பெறுவாய் என்று எப்படி அப்போது ஊகிக்க முடியும்? அப்படி வந்த இடத்தில் உன் பெரியம்மா இடைவழியில் பார்த்து உன்னை இனம் கண்டு வளைத்துக் கொள்வாள் என்று எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்'' என்றார்.

''ஆனால் நான் கொஞ்சம் யோசித்திருக்கலாமே அம்மா. உடன்பிறந்த தமக்கை இருக்கையில் உறவே இல்லை என்று அம்மா ஏன் சொல்ல வேண்டும் என்று சிந்தித்திருக்கலாம். ஆனால் அலுவலகம் முடிந்து அயர்ந்து வரும்போது திடீரென்று ''கண்ணே மணியே, என் பவானியின் பெண்தானே, என்று பெரியம்மா கொஞ்சவும் உச்சி குளிர்ந்து போனேனோ? அன்று வரை யாரும் என்னிடம் அவ்வளவு ஆசையாகப் பேசியது இடையாது அல்லவா அப்போதுகூடக் கொஞ்சம் சந்தேகம் வரத்தான் செய்தது. ஓர் ஏழையை மணக்கத் தடை விதித்தால் கோபமும் வெறுப்பும் கொண்டு அம்மா ஓடிப்போனாள் என்று பெரியம்மா சொல்லவும் நானும் இருக்கலாம் என்று நம்பிவிட்டேன். அம்மாவும் பெரியம்மாவும் கைகோர்த்துக் கொண்டு சிரித்தபடி எடுத்த படத்தையும் பெரியம்மா காட்டினாள். ஆசிரம அன்னை தந்த அப்பா, அம்மா படத்தில் இருந்த அதே சிரிப்புடன் அம்மா இருந்தார்கள். அதைப் பார்த்த பிறகு எனக்கு ஐயம் பறந்து விட்டது'' என்றாள் உமா.

''பிறகு?'' என்று பேச்சை உமாவின் போக்கில் விட்டார் தாயார்.

''பிறகும் சந்தேகம் வரவில்லை. வேலை வேண்டாம் என்றார்கள் என் மகள் உழைத்துப் பிழைப்பதா என்று பெரியம்மா அழுதாள். பெரியப்பாவே அலுவலகத்திற்கு



ராஜினாமா பற்றிச் சொல்லப் போனார். என் கடிதங்களைப் போஸ்ட் செய்யப் பெரியப்பாவே போவார். பிரிய மிகுதியால் எல்லாம் தானே செய்வதாகக் காட்டிக் கொண்டார்கள். என் பழைய வாழ்வின் தொடர்புகளை வெட்டுகிறார்கள் என்று நான் எண்ணவே இல்லை. 'மா' எனக்கு மாதம் ஒரு தடவை எழுதுவார்கள். பெரியம்மா வீட்டுக்கு 'மா'வின் கடிதம் வரவில்லை. ஆனால் அந்த இரண்டாம் மாதத்திலேயே பெரியம்மாவின் பேச்சு மாறிவிட்டது. அழகு அதன் மூலம் வருமானம் என்று...'' என்று முகம் கன்றினாள் உமா.

நெஞ்சம் கடுத்தது காட்டும் பளிங்கு முகம் இந்தப் பெண்ணுக்கு என்று நினைத்தபடி ''அந்தப் பேச்சே உனக்குக் கசந்திருக்கும்'' என்றார் அருள்மொழி.

''குமட்டியது'' என்றாள் உமா. ''பாசத்தைக் கொட்டுகிறார்களே என்று மெதுவாக நான் வெட்டிப் பேசியதும் இருவரும் நிறம் மாறினார்கள். பொய்யை இலகுவாக நம்பிய எனக்கு மெய்யை நம்பக்கூடவில்லை. வாயில், புறமாகச் செல்லும் சுதந்திரம்கூட இருக்கவில்லை'' என்றாள் உமா பழைய நினைவின் வேதனையுடன்.

''சித்திரவதை செய்திருக்கிறார்கள்...''

தலையை ஆட்டினாள் உமா. கடைசியில் சூடு விழுந்ததும் தாங்காமல் சம்மதித்ததும் அன்று ஆனந்தன் வந்ததும்...

அவளது எண்ணங்கள் செல்லும் திசையை ஊகித்தவர் போல ''ஆனந்தன் இப்போது மிகவும் மாறிவிட்டான் இல்லையா?'' என்று மெல்ல விஷயத்துக்கு வந்தார் அருள்மொழி.

உமாவின் உடல் சற்று அதிர்ந்தது. உடனே பற்களால் உதட்டை அழுத்தியபடி தரையை நோக்கினாள்.

சற்று பொறுத்துப் பார்த்துவிட்டு ''என்னம்மா?'' என்று மிகவும் மிருதுவாக அருள்மொழி வினவினார்.

திடுக்கிட்டாற்போல் நிமிர்ந்து மீண்டும் தலை குனிந்து விட்டாள் உமா.

ஆனால் அருள்மொழி விடுவதாக இல்லை. ''உன்னால் வந்த மாற்றம்தான் உமா. இது போதாது. இனியும் காலம் முழுமைக்கும் அவனை காக்கும் கடமை உனக்கு...'' என்று லேசான வற்புறுத்தும் குரலில் அருள்மொழி தொடர்ந்து பேசினார்.

''அம்மா!'' என்று முகம் வெளுக்கக் கண்ணீருடன் உமா குறுக்கிட்டாள். ''என்னை அனுப்பி விடுங்கள்'' என்றாள் உதடு துடிக்க.

''எங்கேயம்மா?''

''எங்கேயாவது, எங்கேனும் ஓர் அனாதை விடுதிக்கு'' என்று முகத்தை மூடிக்கொண்டு விம்மினால் உமா.

''ஏனம்மா நான் என்ன பாவம் பண்ணினேன்?'' என்று வினவியபடி உமாவின் அருகில் வந்து அமர்ந்தார் அருள்மொழி.

''நீங்கள்... பாவமா?'' என்று திகைப்புடன் நிமிர்ந்தாள் உமா.

அவர் புன்னகை புரிந்தார். ''என்னை விட்டு ஓடத் துடிக்கிறாயே என்று கேட்டேன்.''

''இல்லை'' என்று சொல்லிவிட்டு மளமளவென்று கண்ணீர் சொரிந்தாள் உமா.

☆ ★ ☆



மெல்ல உமாவின் கூந்தலை வருடினார் அருள்மொழி. சற்று அழுகை அடங்கியதும் ''ஏனம்மா, உனக்கு ஆனந்தனை மணக்கப் பிடிக்கவில்லையா?'' என்று விசாரித்தார்.

உமா மீண்டும் உடல் குலுங்கிப் போனாள். ''வேண்டாம், அம்மா,'' என்றாள் தீனமாக.

''என்ன வேண்டாம்?'' அருள்மொழியும் விடவில்லை.

''திருமணம் வேண்டாம் அம்மா, தயவு செய்து வேண்டாம்'' என்றவள் மீண்டும் அழலானாள்.

அருள்மொழி திகைத்துப் போனார். இந்தத் திருப்பத்தை அவர் எதிர்பார்க்கவில்லை.

உமாவைக் கையில் ஏந்திக்கொண்டு ஆனந்தன் சொன்னதை நினைத்துப் பார்த்தார்.

ஆனால் இவளானால் இப்படி அழுகிறாளே. இவள் மறுத்தால் என்ன ஆவான்?

''சரி சரி அழாதே உமா, இதெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம். பலவீனமாக இருக்கிறாய் அல்லவா? அதனால் தொட்டதற்கும் அழுகை வருகிறது. முதலில் உடம்பைத் தேற்றிக்கொள்ள வேண்டும். அந்தப் புது டானிக் சுவை உனக்குப் பிடிக்கிறதா?'' என்று பேச்சை மாற்றினார்.

ஆனால் அருள்மொழி உள்ளூர திகில் அடைந்தார்.

ஆனந்தனுக்கு இன்றையப் பெண்களிடம் மதிப்பு இல்லை. அவனது தோற்றத்திலும் செல்வத்திலும் ஆசை கொண்ட பல பெண்கள் தங்களை அவனிடம் மலிவாகத் தான் ஆக்கிக் கொண்டார்கள். இளம் பெண்களைப் பற்றிப் பேசுவதென்றாலே ஆனந்தனின் கீழுதடு இகழ்ச்சியாக வளையத் தொடங்கிவிடும்.

உமா மட்டும் அதற்கு விதிவிலக்காக விளங்கினாள். மகனின் விழிகள் ஒரு மென்மையான தாகத்துடன். உமாவைத் தொடருவதை அன்னை கவனித்திருந்தார். இன்று அவனை உமா மறுத்தால் என்ன ஆகும்?

☆ ★ ☆

இரு தினங்கள் சென்ற பின்னர் மீண்டும் திருமணப் பேச்சை அருள்மொழி தொடங்கினார். அப்போது உமா கெஞ்சுதலாக ''வேண்டாமே அம்மா'' என்றாள் ஒரு தவிப்புடன்.

''ஏன்? எதற்காக?'' என்று விடாப்பிடியாக வினவினார் அருள்மொழி.

''நான்... நான் 'அந்த வீட்டில்' இருந்தவள் அம்மா'' என்று கதறினாள் உமா.

அருள்மொழி அவளை அணைத்துக்கொண்டு ''என் மகனும் அந்த வீடு சென்றவன்தானே உமா'' என்றார் அமைதியாக.

விம்மலுடன் மீண்டும் தலையசைத்தாள் உமா.

''அதுமட்டுமில்லை என் கதை தெரியும் அல்லவா?''

''தெரியுமே அவர்கள் உன்னைச் சித்திரவதை செய்து பணிய வைத்தார்கள்.''

''அதுதான் அம்மா. நான் பணிந்துவிட்டேனே. நிமிர்ந்து நின்று உயிரைவிடும் திடம் எனக்கு அன்று இல்லாமல் போய்விட்டதே. அன்று உங்கள் மகனைத் தவிர வேறு யாரேனும் வந்திருந்தா... என்னை நெருங்கியிருந்தால் நான்... நான்...'' என்று விம்மினாள்.



''உன்னைப் புதைத்த இடத்தில் இந்நேரம் புல் முளைத்து இருக்கும்'' என்றார் அருள்மொழி.

''அம்மா'' என்று அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.

''மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் நீ என்பதை இந்த இரண்டு மூன்று நாளில் நான் தெரிந்து கொண்டு விட்டேன் அம்மா'' என்றாள் அருள்மொழி.

ஏதோ நினைத்தவள்போல ஒரு மலைப்புடன் உமா நிமிர்ந்தாள். ''அம்மா நான் முதலாவதாக அந்த... அங்கே கண்ட... ஆண் அவர்தான். நீங்கள் நம்புகிறீர்கள் அல்லவா.''

''இல்லாவிட்டாலும் உன் பேரில் தப்பு இல்லையம்மா.''

உமா தீவிரமாகத் தலையசைத்தாள். ''அப்படி இல்லை அம்மா. ஆனால் நீங்கள் என்னை நம்ப...''

ஏக்கமும் பதட்டமுமாகத் தன்னை நோக்கிய அந்த இளம் முகத்தை இரு கைகளிலும் ஏந்தி நெற்றியில் முத்தமிட்டார் அருள்மொழி. ''நம்புகிறேன் உமா. ஆனால் என் வருத்தம் என்னவென்றால் —''

''வருத்தம்.''

''என்னவென்றால் என் மகனைப்பற்றி அப்படிப் பெருமிதமாகக் கூறிக்கொள்ள முடியவில்லை பார். அவன் நடத்தைக் கெட்டுப் போனவன் என்று அவனை வெறுக்கிறாயா கண்ணே!''

''ஐயோ இல்லையம்மா இல்லை. அவரை எப்படி வெறுப்பேன்? நான் வெறுப்பது என்னைத்தான். வெறும் உடல் வேதனைக்குப் பயந்து அந்த இழிநிலைக்கும் இணங்கினேன்.''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை. என்னைப் பொறுத்தவ ரையில். நீ சேற்றில் வீசப்பட்ட செந்தாமரை. அதிலும் இந்த வீட்டின் பூசைக்கு என்றே மலர்ந்த மலர்.''

☆ ★ ☆

அருள்மொழியின் அனுபவமிக்க மென்மையான அழுத் தத்திற்கு உமா பணிந்து விட்டாள்.

மறுக்கும் வகையிழந்து திருமணத்துக்குச் சம்மதித்த போதிலும் அவள் உள்ளே புகைந்த குமைச்சலை அவளால் அருள்மொழியிடம் கூடக் கூறிக்கொள்ள முடியவில்லை.

இது ஆனந்தனுக்கும் அவளுக்கும் மட்டிலும் இடைப் பட்ட விஷயம். என்ன முயன்றும் அவன் தன்னை அணைத்த இருவேளைகளையும் உமாவால் மறக்க முடியவில்லை.

அந்த அணைப்புகளின்போது அவன் அவளது சம்மதம் விருப்பம் எதையும் கோரவில்லையே. ஏன் அவளது மறுப்பை மதிக்கவும் இல்லை சட்டை செய்யவும் இல்லை. ஒரு குலமகளை ஏன் மாலினி போன்ற அதிநாகரிகம் கொண்ட பெண்ணையானாலும் அவன் இவ்விதம் நடத்து வானா?

உள்ளத்தையும் உணர்ச்சிகளையும் ஒருங்கு மதிக்கும் காதல் அவனுக்கு இருந்திருந்தால் இது அவனால் முடியுமா?

இல்லை! இல்லவே இல்லை!

ஆனந்தனுக்கு உமாவின் உள்ளம் தேவையில்லை. அவ ளது உணர்ச்சிகளைப்பற்றி அவனுக்கு ஒன்றும் இல்லை. அவனுக்குத் தேவையானது அங்கங்கே அளவாக அமைந்த அங்கங்களை உடைய அவளது உடல் மட்டுமே தான்! அது வேண்டும் அவனுக்கு!



திருமணம் என்னும் பந்தமின்றி அது கிட்டாது என்ப தால் அவளை மணக்க நினைக்கிறான். அவ்வளவுதான்! அவ்வளவேதான்!

மற்றபடி ஒரு மனைவியின் மதிப்பு அவளுக்கு ஏது? ஆனால் அதைக்கோரும் தகுதியும் அவளுக்கு இல்லைதானே, ஏனெனில் அன்று அந்தச் சேற்று வாழ்வுக்கு இசைவு தெரிவித் தவள்தானே இவளும். அந்த எண்ணம் தானோ ஆனந்தனுக் கும்.

முன்னைவிடவும் அதிகமாகவே ஆனந்தனின் முன்னி லையில் இருந்து உமா விலகலானாள். ஆனந்தனின் வேசாகச் சுருக்கிய புருவங்களையோ, தாயும் மகனும் பரிமாறிக் கொண்ட பார்வைகளையோ உமா காணவில்லை. குனிந்த தலை நிமிர்ந்தால் அல்லவோ காண்பதற்கு.

## 15

அன்று மாலையில் செய் ஊற்றின் அருகே மாடியில் புத்தகத்துடன் எங்கோ பரத்தியானமாக உமா உட்கார்ந்திருந் தாள். இப்போதெல்லாம் மாலையில் ஆனந்தன் வரும் நேரத்தில் இப்படி விலகி விடுவது அவளது வழக்கம்.

ஆனால் இன்று ஆனந்தன் அவள் இருக்கும் இடம் தேடிவந்தான். சற்று நேரம் பின்புறமாக நின்று பார்த்து விட்டு அவள் அருகில் வந்து ''உமா'' என்று மெல்ல அழைத்தான்.

உமா திடுக்கிட்டு எழுந்தாள். மடியில் இருந்த புத்தகம் கீழே விழுந்தது. ''உங்கள் அம்மா எங்கே...'' என்று தடுமாறி யவள் திரும்பி உள்ளே செல்ல முயன்றாள்.

''நில் உமா'' என்று அவள் கையை பற்றித் தடுத்தான் ஆனந்தன்.

நெருப்பு சுட்டாற்போலத் தவித்தாள் உமா. உதடு துடிக்க உடம்பெல்லாம் நடுங்குவது தெரிந்தது.

விடாமல் அவளைப் பற்றித் தன் புறமாகத் திருப்பினான் ஆனந்தன்.

உமாவின் கண்களில் நீர் பொங்கி வழியக் கண்டான்.

அவன் கண்களில் வேதனை தோன்றியது. ஒரு விரலால் அவள் முகத்தை நிமிர்த்தி ''என்னைக் கண்டாலே வெறுப்பாக இருக்கிறதா உமா?'' என்று வருத்தத்துடன் கேட்டான்.

உமா பேசாது தலையசைத்தாள்.

''என்னை மணக்கப் பிரியம் இல்லையா? உனக்கும் பிடிக்கவில்லை என்றால் திருமணத்தை நிறுத்திவிடலாம் உமா. என் ஆசைகள் வீணானாலும் உன் மகிழ்ச்சிதான் எனக்கு முக்கியம்'' என்றான் மென்மையாக.

உமா அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

அவனது சொல்லின் பொருளை விழிகளிலும் கண்டாள்.

சிறு விம்மலுடன் அவன் மார்பில் முகம் புதைத்தாள்.

உமாவின் முதுகை வருடியபடியே ஆனந்தன் பேசினான்.

''உம்... அழக்கூடாது உமா. நீ அழுதால் என்னால் தாங்க முடியவில்லை'' என்றான் ஆனந்தன்.

''உமா உன்னை எவ்வளவோ வேதனைப்படுத்தி விட்டேன். கால முழுமைக்கும் அது போதும் உமா. உன் முகத்தில் எப்போதும் புன்னகை தவழவேண்டும்...'' என்று ஆறுதலாகக் கூறினான்.



''உமா ஒரு விஷயம் உன்னிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். அன்று முதலில் உன்னை அணைத்தேன் பார்... அன்று நானும் ஒன்றைக் கண்டுகொண்டேன் உமா. காதல் கல்யாணம் என்பனவற்றில் நம்பிக்கையை அடியோடு இழந்திருந்த நான் உன்னை காதலிப்பதைப் புரிந்து கொண்டேன். உண்மையில் அதைப்பற்றி உன்னிடம் சொல்லி உன்னை அம்மாவிடம் அழைத்துப் போவதற்காகத்தான் எப்படியும் வருவதாகச் செந்திருவிடம் சொன்னேன்.''

தோளை அணைத்து முதுகைத் தடவி அவன் பேசப் பேச உமாவின் கலக்கம் பறந்தோடியது.

☆ ★ ☆

சற்றுப் பொறுத்து அவளைத் தாயிடம் அழைத்து வந்தான் ஆனந்தன்.

உள்ளே வருகையில் அவன் பிடியிலிருந்து தன் கையை உருவிக்கொள்ள உமா முயன்றாள்.

அவன் பிடிவாதக்காரன் ஆயிற்றே. உமாவின் கையை மேலும் அழுத்தமாகப் பிடித்தான். உமாவுக்கு வெட்கத்தில் முகம் ரோஜா நிறமாகிப் போயிற்று.

காணாதது போல இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அருள்மொழியின் முகத்தில் புன்னகை பரவியது.

''குழந்தை!'' என்று மனதிற்குள் பிரியமாக உமாவைச் சீராட்டிக் கொண்டார்.

நேரே வந்து காலில் விழுந்து வணங்கிய மகனையும் வரப்போகும் மருமகளையும் இரு கைகளாலும் அணைத்து இருபுறமும் அமர்த்திக்கொண்டு பூரித்தார்.

ஆனால், அந்தப் பூரிப்பில் அவர் தன்னை மறந்து விடவில்லை. உமாவின் வாழ்க்கைப் பாதையில் இன்னமும் ஒரு முள் குத்தக்கூடும் என்று அவர் எதிர்பார்த்தார். அந்த வலியை அவள் தாங்கிக் கொள்ளுவாளா என்பதில் அவருக்கு சந்தேகம் இருந்தது. எனவே அந்த முள்ளைப் பற்றி மகனு டன் தனிமையில் பேசினார்.

''மாலினிக்கு எவ்வளவு தூரம் விஷயம் தெரியும் என்று தெரியவில்லை. ஆனந்தா! ஏற்கனவே அவள் நீ நிராகரித்து விட்ட ஆத்திரத்தில் புகைந்து கொண்டு இருக்கிறாள். அதற்கு உமா காரணம் என்று ஆகும் போது அவளது ஆத்திரம் எல்லாம் உமாவிடம் பாயும்'' என்றார் சற்றும் கவலையுடன்.

''ஒரு திருத்தம் அம்மா, உமாவால் மட்டுமே நான் மாலினியை மறுத்தேன் என்பதற்கு இல்லை. முதலிலேயே எனக்கு அவ்வளவு விருப்பம் இல்லை. நான் எப்படியெல் லாமோ நடந்துகொண்ட போதும் குறுக்கிடாத நீங்கள் — என்னிடம் எதையுமே வேண்டிராத நீங்கள் நிரம்பவும் சொல் லுகிறீர்கள் என்ற ஒரே காரணத்தால் தான் சம்மதித்தேன். போகப் போக அவளது நடவடிக்கைகள் எனக்கு வெறுப்பை உண்டாக்கி விட்டன'' என்றான் ஆனந்தன்.

''ஆனால் முடிவு உமாவால் ஏற்பட்டதுதானே?''

''உமாவும் ஒரு காரணம் அவ்வளவுதான். எப்படியும் நான் மாலினியை மணந்திருக்க மாட்டேன்.''

''எப்படியானாலும் விஷயம் அவளுக்கு இப்படித்தான் தோன்றும். உமாவால்தான் நீ அவளை ஒதுக்கியதாக நினைப் பாள்.''

''என்ன வேண்டுமானாலும் நினைத்துவிட்டுப் போகட் டும்'' என்றான் ஆனந்தன் அலட்சியமாக.



''அப்படி அலட்சியம் செய்ய முடியாது ஆனந்தா. 'அக்கினிப் பிரவேசம்' செய்துவிட்டு வந்த சீதையைக் கூடக் காட்டுக்கு அனுப்பிய தேசம் இது. கனகலிங்கத்தின் காரில் உமாவை மாலினி பார்த்திருக்கிறாள். இதை வைத்து அவள் எவ்வளவு கதை கட்டுவாள்? சும்மாவே அவளுக்கு வம்புக ளில் பிரியம் அதிகம்?''

''கற்பனை திருமட்டும் கதை கட்டட்டும். நமக்கு என் னம்மா வந்தது? உமாவைப்பற்றி உங்களுக்குத் தெரியும். எனக்கும் நன்கு தெரியும் — தவிர நான் ராமனும் அல்ல'' என்றான் ஆனந்தன் தனக்கே உரிய அழுத்தத்துடன்.

''நீ ராமன் அல்ல என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதா னே'' என்றார் அருள்மொழி பொறுமை இழந்து.

முகம் சிவந்து ''இருந்தாலும், என் உமாவுக்கு நான் போதும். எனக்கு ஏன் உங்களுக்கும் உமா போதும்'' என்றான் ஆனந்தன்.

''போதாதடா மகனே போதாது.''

''அம்மா நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? ஜாக்கிரதை'' என்றான் ஆனந்தன் ஆத்திரத்துடன்.

''உமாவுக்கு அது போதாது என்கிறேன். உன்னைச் சொல்லவில்லை. கனகலிங்கம் வீட்டுப் பேச்சு வெளிவந்தால் உமா தாங்கமாட்டாள் என்கிறேன்'' என்றார் அருள்மொழி விளக்கமாக.

''ஓ இவ்வளவுதானே. அவளை நான் சமாதானப் படுத் திக் கொள்கிறேன்'' என்று தன்னம்பிக்கையுடன் புன்னகைத் தான் மகன்.

அருள்மொழிக்கு அதில் சந்தேகம் இருந்தது. ஆனால் ஏற்கனவே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர் ஒரு

முயற்சியில் ஈடுபட்டு இருந்தார். அது நிறைவேற சிறிது அவகாசம் வேண்டும். ஒரு பதினைந்து நாட்கள்...

அதற்குள் கையில் 'ட்ரே'யுடன் உமா வந்து சேர்ந்தாள்.

கரும்பச்சை நிறச் சேலையும் முத்து லாக்கெட்டுடன் தங்கச் சங்கிலியும் அவளது பொன்னிறத்தை எடுத்துக் காட்டின.

''எனக்கே தெவிட்டவில்லையே என் மகன்...'' என்று நினைத்தபடியே மகனைப் பார்த்தார் அருள்மொழி.

அவன் விழிகளால் உமாவை விழுங்குவதைக் கண்டதும் தன்னையறியாமல் நகைத்தார்.

''என்ன அம்... அத்தை சிரிக்கிறீர்கள்?'' என்று புன்முறுவலுடன் 'டிரே'யை டீபாய் மேல் வைத்தாள் உமா. சிற்றுண்டித் தட்டுகளில் ஒன்றை ஆனந்தனிடம் அளித்துவிட்டு அடுத்ததை அருள்மொழியிடம் கொடுத்தாள்.

தட்டை வாங்கியபடியே ''ஒன்றுமில்லை, அந்த பிஸ்தா கேக்கை செய்து விட்டாய் போல் இருக்கிறதே என்று நினைத்தேன்'' என்றார் அருள்மொழி.

''உம் நன்றாக இருக்கிறதா?'' என்று இருவருக்கும் பொதுவாகக் கேட்டாள் உமா தானும் ஒரு தட்டை எடுத்துக் கொண்டு அருள்மொழியை ஒட்டி அமர்ந்தாள்.

''நன்றாயிருக்கிறது'' என்று அருள்மொழி கூற அதற்குள், ''பிரமாதம் ஆனால்...'' என்று இழுத்தான் ஆனந்தன்.

''என்ன ஆனால் என்றாள்'' உமா சற்றே முகம்மாற.

''கூடவே ஒரு கத்தியல் கொண்டு வர மறந்துவிட்டாய். உம் என்ன செய்வது? பல்லாலேயே கடித்துத் தின்று பார்க்கி-



றேன். இன்னம் இரண்டு போடு'' என்று காலித் தட்டை சோகத்துடன் நீட்டினான் ஆனந்தன்.

உமா கலீரென்று சிரிக்க ''முதுகில்தான் இரண்டு போட வேண்டும்'' என்றாள் அருள்மொழி. ''பேசிக்கொண்டு இருங்கள். நான் தோட்டக் காரனிடம் ஒரு பேச்சு சொல்லி விட்டு வருகிறேன்'' என்று எழுந்து சென்றார்.

மறைந்து கொண்டிருந்த தாயின் முதுகை அன்புடன் நோக்கிவிட்டு ''அம்மா இங்கிதம் தெரிந்தவர்கள் இல்லையா உமா'' என்று உமாவிடம் திரும்பினான்.

உமாவின் முகம் சிவப்பதைக் கண்டதும் உரக்கச் சிரித்தான். பிறகு ''உமா இங்கே வாயேன்'' என்று அழைத்தான்.

''ஊகூம்'' என்று எழுந்து ஓடப் போனாள் உமா.

''ஜென்னி...'' என்றான் ஆனந்தன்.

சட்டென நின்று ஜென்னியா? என்ன சொன்னாள்?'' என்று ஆர்வத்துடன் கேட்டாள்.

சோபாவில் சற்று ஒதுங்கி உட்கார்ந்து கொண்டு காலியாக இருந்த இடத்தைத் தட்டிக் காட்டினான் ஆனந்தன்.

''வந்து உட்கார்ந்தால் சொல்கிறேன்'' என்றான் அமர்த்தலாக.

''ஊகூம்'' என்று தலையசைத்தாள் உமா. ''தயவு செய்து...'' என்றான் கெஞ்சலாக.

''எத்தனை நாள் ஓடுவாயாம்? சரி போகிறது இங்கேயேனும் உட்கார்'' என்று ஒரு மோடாவைத் தன் எதிரே இழுத்துப் போட்டான் ஆனந்தன்.

ஒருவாறு உமா அதில் உட்கார்ந்ததும் அவளுடைய ஒரு கையைத் தன் கையில் எடுத்து ''உனக்கு உடம்பு நல்லா குணமாகி விட்டதா உன்னைப் பார்க்க வரலாமா என்று கேட்டாள். நான் சொன்னேன்...''

''வரச் சொல்லிவிட்டீர்கள் அல்லவா?'' என்று ஆவலுடன் குறுக்கிட்டாள் உமா.

அவன் பேசாதது போல பாவித்து ''அவளுக்கு என்னமோ குணமாகிவிட்டது. கஷ்டம் என்னவென்றால் பலகாரம் செய்கிறேன் என்று எங்களை நோயாளி ஆக்கிக் கொண்டு இருக்கிறாள் என்று நான் சொன்னேன்'' என்று நிதானமாகச் சொல்லி முடித்தான்.

சற்று அடக்கிப் பார்த்தும் முடியாமல் உமாவுக்குச் சிரிப்பு பீறிட்டது. சிரித்து முடிந்ததும் ''பொய்'' என்றாள்.

''ஐம்பது சதம் மெய் உமா. ஜென்னி நாளை வருவாள்'' என்றான் ஆனந்தன்.

☆ ★ ☆

அன்று ஆனந்தன் அலுவலகம் சென்ற பின்னர் உமாவும் அருள்மொழியுமாக அன்றைக்கு நடைபெறப் போகும் மகளிர் மன்ற விழா நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசிக்கொண்டு இருந்தனர்.

முக்கிய விருந்தாளிக்கு மாலை அணிவிக்க வேண்டியவள் உமா. உமா முதலில் மறுத்துப் பார்த்தாள், அருள்மொழி அவளை அதட்டி அடக்கிவிட்டார்.

''உன்னை மகளிர் மன்றத்திற்கு அறிமுகம் செய்ய வேண்டும். அங்கே என் வேலையில் பாதியை நீ பகிர்ந்து கொள்வாய் என்று பார்த்தால் நீ நத்தை போல் வீட்டுக்குள் பதுங்கப்



பார்க்கிறாயே. ஆனந்தன் வீட்டில் இருக்கும் நேரத்தில் நான் உன்னைத் தொல்லை செய்யப் போவதில்லை. மற்ற நேரமாவது எனக்கு உதவ வேண்டாமா? பேசாமல் சொன்னபடி கேள்'' என்று கேலியும் கண்டிப்புமாக உமாவின் மறுப்பை ஊதித்தள்ளி விட்டார் அருள்மொழி.

''முதலில் நீ வரவேண்டாம் உமா. மேடைக்கு எல்லோரும் வரும்வரை மற்ற பெண்கள் பூத்தூவுவார்கள். பிறகு இசை நின்று ஒலிக்கும். அப்போது நீ வரவேண்டும். கம்பளம் ஏதும் தடுக்கிவிட்டு விடாமல் நிதானமாகக் கீழே பார்த்து நட. அருகில் வந்ததும் நிமிர்ந்து மாலையைப் போடு.''

''அங்கே எனக்கு யாரையும் தெரியாதே அத்தை. வேறு யார் கழுத்திலேனும் மாலையைப் போட்டு விட்டால்?'' என்று நமட்டுச் சிரிப்புடன் வினவினாள் உமா.

''போக்கிரி. நான் அருகிலேயே இருப்பேனே. அப்படி விட்டுவிடுவேனா?'' என்று சிரித்தார் அருள்மொழி.

''அது யார் அத்தை அந்த அம்மா? அழைப்பிதழில் போட்டிருக்குமே எங்கே என்று தேடினாள் உமா.

''பார்த்துவிட்டு சங்கத்திலேயே விட்டு வந்து விட்டேன் கண்ணம்மா. அழைப்பு அனுப்புவதை உதவித் தலைவியின் பொறுப்பில் விட்டு விட்டேனா? ஆனால் அந்த அம்மாவின் பெயர் தெரிந்து என்ன செய்யப் போகிறாய் அவர் மிகவும் உயர்ந்தவர். இந்த ஆண்டு பத்ம விபூஷன் பட்டம் கிடைத்திருக்கிறதாம். அன்னை தெரசாவுக்கு அடுத்தபடி இவர்தான் என்கிறார்கள்'' என்று அவர் பேசும்போது ஒரு கார் வந்து நின்ற சத்தம் கேட்டது. ''இந்த வேளையில் யார்?'' என்று முடித்தார்.

ஜென்னியா? நேரமாகிவிட்டது என்று அந்த மக்கு டாக்சியில் வருகிறாளோ?'' என்றபடி எழுந்தாள் உமா.

அதற்குள் கூர்மையான ''ஹை ஹீல் ஷு''வின் சத்தத்தில் அருள்மொழி வந்தவரைப் புரிந்து கொண்டாள் முகம் கறுத்தது.

இன்னும் ஒருநாள் இவள் பொறுத்திருக்கக் கூடாதா?

# 16

படியில் ஏறும்போதே 'உமா' என்று சத்தமிட்டபடி தான் ஜென்னி வருவாள். அந்தக் குரல் கேளாததால் உமா தயங்கி நின்றாள்.

அதற்குள் மாலினி உள்ளே வந்து விட்டாள். வந்ததுமே அத்தையின் அருகில் நின்ற உமாவைப் பார்த்தாள். முகம் கடுகடுத்தது, ''அத்தை உங்கள் வீட்டில் டெட்டால் அல்லது பினாயில் இருக்கிறது அல்லவா?'' என்றாள்.

''மாலினி'' என்று அருள்மொழி அவளை அடக்க முயற்சித்தார்.

அவள் சட்டை செய்யாமல் ''எடுத்து வந்து விடெல்லாம் தெளியுங்கள். கண்ட கழுதைகளும் வந்து வீட்டின் சுத்தத்தைக் கெடுத்துவிட்டன.''

''மாலினி நீ இப்போது போய்விட்டு பிறகு வா.''



''என்னையா போகச் சொல்லுகிறீர்கள்?'' என்று வாயைப் பிளந்தாள் மாலினி. ''அதுவும் எவளோ ஒரு தரங்கெட்டவளுக்குப் பரிந்து...''

''மாலினி...! இதோ பார் மாலினி, உமா உன் அத்தானுடைய மனைவி ஆகப்போகிறவள். அவளை நீ மதிக்கப் பழகவேண்டும். இப்போது...'' என்று பொறுமையாகவே பேசினார் அருள்மொழி.

ஆனால் மாலினி குதித்தாள். ''அத்தானுக்குத்தான் அறிவில்லை என்றால் உங்களுக்கு எங்கே போயிற்று அத்தை? சங்கக் காரியதரிசி தயா சொன்னாள் — ஏதோ உங்கள் மருமகளாகப் போகிறவள் மாலை போடப் போவதாக. அடே அது யாரடா என்று பார்க்க வந்தால் இந்த நாய் இருக்கிறது. இருந்திருந்து இந்த தாசிக் கழுதையா உங்கள் மருமகள்?''

அருள்மொழி பொறுமையிழந்தார். சட்டென தம்பி மகளின் கையைப் பிடித்து அவளை வாயிற்புறமாகத் திருப்பினார். ''இப்போது போ அம்மா. சற்று அமைதியாகச் சிந்தித்து விட்டுப் பிறகு...''

கையை உதறினாள் மாலினி.

''என்னை விரட்டும் அளவுக்கு ஆகிவிட்டதா அத்தை? இவள் அத்தானுக்கு மனைவியாகப் போகிறாளா? இவளை நான்... நா... ன் மதிப்போடு பேச வேண்டுமா? பார்க்கிறேன். அத்தை பார்க்கறேன். இன்று மாலை போடப் போகிறாளா? வரட்டும் அதையும் பார்க்கிறேன், கனகலிங்கத்தின் வீட்டுப் பெண் உங்கள் வீட்டு மருமகள் என்று தெரிந்த பிறகு மகளிர் மன்றத்தில் உங்களுக்கு எவ்வளவு மதிப்பு இருக்கிறது என்று பார்க்கிறேன். உங்கள் தலை பூமிக்கும் கீழே பொத்துக் கொண்டு புதைகிறதா இல்லையா என்று பார்க்கிறேன்.

இன்று நானும் சங்க விழாவுக்கு வந்து இவள் வண்டவாளங்களைச் சந்தி சிரிக்க சிரிக்கப் பண்ணாவிட்டால் பார்க்கலாம். என்னையா விரட்டுகிறீர்கள்?''

அவள் கத்தக்கத்த அவளை இழுத்துச் சென்று காரில் ஏற்றி அனுப்பிவிட்டுத் திரும்பி வந்தார் அருள்மொழி.

அவர் எதிர்பார்த்தது போலவே முகம் வெளுத்து உடல் எல்லாம் கூனிக் குறுகித் துடித்துக் கொண்டு இருந்தாள் உமா. அருள்மொழி அருகில் வரவும் கதறலானாள். ''அத்தை வேண்டாம் அத்தை வேண்டாம்! நாய்க்கு முழுத் தேங்காய் ஒட்டுமா? எனக்கு இந்த வாழ்வு தகுமா? ஐயோ ஏழையாக இருக்கலாம் அனாதையாக இருக்கலாம். ஆனால் நான் கோழையாகிப் போனேனே? என்னால் உங்களுக்கும் அவமானம் வர வேண்டுமா? வேண்டாம் அத்தை வேண்டாம் அத்தை...''

எவ்வளவோ பாடுபட்டும் அருள்மொழியால் உமாவை அமைதிப்படுத்த முடியவில்லை. இதம், நயம், பயம், அதட்டல் எதுவுமே பயனில்லை. கடைசியாக ''உன்னை இழந்தால் ஆனந்தனுக்குப் பைத்தியம் பிடித்துப் போகும் உமா. இந்தக் குடும்பம் சீரழிந்து போக வேண்டும் என்பது தான் உன் விருப்பமா? அவனுக்காக நீ கொஞ்சம் அவமானத்தைத் தாங்கிக்கொள்ள முடியாதா?'' என்று கேட்டார்.

பிறகுதான் உமா சற்று அமைதியானாள்; ஆனபோதும் தன் பிடிவாதத்தை விடவில்லை. ''என்னை மணப்பதுதான் அவருக்கு சீரழிவு. என்னை மணந்தால் அவருக்கு அவமானம். உங்களுக்கும் அவமானம். அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது'' என்றாள்.

உமாவின் வெளுத்த முகத்தைக் காணச் சகியாமல் அருள்மொழி மகனுக்கு டெலிபோன் செய்தார். ''உன் சமாதானத்துக்கு அவசியம் வந்திருக்கிறது. என்ன வேலை என்றாலும் விட்டுவிட்டு உடனே வந்து சேர்...'' என்றார் வறட்சியாக.



☆ ★ ☆

மகன் வந்ததும் அவனையும் உமாவையும் தனியே விட்டு அகன்றார் அருள்மொழி.

பயந்த குழந்தை போல ஆனந்தனின் அணைப்பினுள் ஒண்டிக்கொண்ட போதும் உமா தன் நிலையிலிருந்து நெகிழவில்லை. ''வேண்டாம் வேண்டாம் என்னை மறந்து விடுங்கள்; தயவு செய்து மறந்து விடுங்கள்'' என்றுதான் கதறினாள்.

''உஷ்... உமா என்ன பேச்சு இது! உன்னை மறந்து என்னால் உயிரோடு இருக்க முடியுமா? உன்னால் தான் என்னை மறந்து வாழ முடியுமா? யோசியாமல் பேசுகிறாயே. இங்கே பார் உமா. நிமிர்ந்து என்னைப் பார் என்று அவள் முகத்தை நிமிர்த்தினான். இப்போது சொல். என்னைப் பிரிந்து உன்னால் வாழ முடியுமா?''

பேச்சு இழந்து தலையை அசைத்துவிட்டு முன்னிலும் அதிகமாக அவன் மார்பில் அழுத்தமாகப் புதைந்து கொண்டாள் உமா.

ஆனால் ஆனந்தனின் உதடுகளில் தோன்றிய புன்னகை உடனே மறைய அவள் வேறு ஒன்று சொன்னாள். ''ஆனால் கல்யாணம் வேண்டாம். நான் முன் போலவே இருந்து கொள்கிறேன். உங்கள் அடிமையாக வாழ்கிறேன். எல்லாவற்றிலுமே அதை உலகம் பொருட்படுத்தாது'' என்றாள்.

''உமா முட்டாள்'' என்று அவளைத் தன்னிடம் இருந்து பிரித்து நிறுத்தினான் ஆனந்தன். ''என்ன உளறுகிறாய்?'' என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

முகத்தைமூடி விம்மிக்கொண்டே ''மெய்யாகத்தான் சொல்லுகிறேன். எத்தனையோ பேர் அப்படி வாழ்கிறார்களே. எல்லோரும் அதை ஏற்றுக்கொள்ள வில்லையா? நாமும் அப்படி வாழலாம். முன்புதான் தன்மானம் பாராட்டினேன். இப்போது எல்லாம் விட்டு விட தயாராகி விட்டேன். திருமணம் மட்டும் வேண்டாம்'' என்றாள் பிடிவாதமாக.

என்ன சொல்வது என்று புரியாமல் ஆனந்தன் சற்று நேரம் மலைத்து நின்றான். பிறகு உமா உன்னை நான் சரியாக அறியாதபோது சூழ்நிலைகளால் உன்னைத் தவறாக எண்ணி அந்த மாதிரி வாழ்வை உன்னுடன் நடத்த நான் விரும்பியது உண்மைதான். ஆனால் இப்போது நிலைமையே வேறு. இந்த மாதிரி இனி பேசாதே எனக்குக் கோபம் வரும்'' என்றான் கூடியமட்டிலும் நிதானத்துடன்.

''வேறு வழியே இல்லையே'' என்றாள் உமா வேதனையுடன்; ஆனால் திடமாக.

''என்ன உமா இங்கே வா'' என்று அவளைத் தன் அணைப்பினுள் இழுக்க முயன்றான் ஆனந்தன். ஆனால் உமா விலகிச் சென்றாள்.

''இவள் பேசுவதைப் பாருங்கள் அம்மா. இவளை என்னதான் செய்வது?'' என்று ஆற்றாமையுடன் தாயிடம் முறையிட்டு அவரை அழைத்து வந்தான் ஆனந்தன்.

''அதை பிறகு பார்க்கலாம்'' என்றார் அருள்மொழி.

''அம்மா!''

''அந்தந்த வேலையை அவ்வப்போது பார்க்க வேண்டும். இந்தப் பிரச்சினை வினாடிக்குள் முடிந்து விடக்கூடியது அல்ல, மகளிர் மன்ற விழா இன்றைய நிகழ்ச்சி அதை



முடித்துக்கொண்டு அப்புறமாக நம் வீட்டு விஷயங்களை அலசலாம்.''

''அத்தை நான் அங்கே வரமாட்டேன். அங்கே மாலினி...'' அச்சத்துடன் தொடங்கினாள் உமா.

''மாலினி நாளை கரிபூசுவாள் என்று நீ இன்றே என் முகத்தில் கரிபூசப் போகிறாயக்கும்?'' என்று கடுமையாகப் பேசினார் அருள்மொழி.

ஆனந்தன் யோசனையுடன் தாயைப் பார்த்து விட்டுப் பேசாமல் நின்றான். உமாதான் திணறிப் போனாள்.

''அப்படி இல்லை; ஆனால் மாலினி...''

''மாலினி சொல்வதை யாரும் நம்பமாட்டார்கள். ஆனந்தன் அவளை நிராகரித்த ஆத்திரத்தில் இட்டுக்கட்டிப் பேசுவதாகத்தான் நினைப்பார்கள். ஆனால் நீ வரவில்லை என்றால் அவளது பேச்சு உண்மைதான்; அதனால் அவளுக்குப் பயந்து கொண்டுதான் நீ வரவில்லை என்று நினைப்பார்கள். அதற்கு மேலும் மற்றவர்கள் அவள் பேச்சை நம்பினால் நாளைக்கே ''உமாவாவது என் மருமகளாவது? எல்லாம் பொய்'' என்று மறுத்து விடுகிறேன். சரிதானா? தயவு பண்ணி இன்று மட்டும் என் காலை வாரி விட்டு விடாதே உமா'' என்றார் அருள்மொழி.

அன்றுவரை அறிந்திராத வண்ணம் அவர் ஒரு மாதிரி கண்டிப்புடன் பேசவே உமா திண்டாடினாள். தன் ஆதரவுக்காக ஆனந்தனைப் பார்த்தாள். அவனும் ''அம்மாதான் சொல்லுகிறார்களே உமா. சும்மா போ. கொஞ்சம் கஷ்டமாக

இருந்தாலும் நானே உன்னை அழைத்துக் கொண்டு வந்து விடுகிறேன்'' என்றான்.

''நீங்கள் எப்படி?''

''விழாவுக்கு வருவேன் உமா. எனக்குக்கூட அழைப்பு வந்திருக்கிறது'' என்று பையினுள் கையை விட்டவன், தாயின் பார்வையில் பேசாமல் நின்று விட்டான்.

ஒரு வழியாக உமா சம்மதிக்கவும் அருள்மொழி சுறுசுறுப்புடன் இயங்கினார். ''முதலில் நல்ல குளிர்ந்த நீரில் பஞ்சை நனைத்துக் கண்ணில் ஒற்று. அழுது சிவந்த கண்ணுடன் அங்கே வந்து நின்றால் நன்றாயிராது. பச்சையில் லேசாக ஜரிகை பார்டர் போட்ட சேலையைக் கட்டு...''

☆ ★ ☆

மாலையில்...

ஊர் உதைப்புடனேயே மகளிர் மன்ற கட்டிடத்திற்குள் உமா காலடி எடுத்து வைத்தாள்.

அவளது கலக்கம் காரணமின்றியும் போகவில்லை.

அங்கே மாலினியும் இருந்தாள்.

உமாவைச் சுட்டிக் காட்டி அருகிலிருந்த பெண்களிடம் ஏதோ பேசலானாள் அவள். அதைக் கண்டு உமா நடுங்கினாள்.



அருள்மொழியும் அதைக் கவனித்தார். ''இந்த வம்புக்காரிகளின் மத்தியிலேயே மாலினிக்குக் குடியிருப்பு. சொன்னாலும் கேட்பது இல்லை'' என்று முகம் சுளித்து விட்டுத் தன் அலுவல்களைக் கவனித்தார்.

இவரால் எப்படி இவ்வளவு சலனமற்று அலுவலில் ஈடுபட முடிகிறது என்று வியந்தவாறு படபடக்கும் மனதை மறைக்க முயன்றபடி அருள்மொழியின் பின்னேயே சுற்றினாள் உமா.

''அருள்மொழி அம்மையின் மருமகள் ஆகப் போகிறீர்களாமே வாழ்த்துக்கள்'' என்று சிலர் பாராட்டிய போது சகிக்க முடியாமல் இளித்து வைத்தாள்.

''மாலையை எடுத்துவைத்துவிட்டு வரலாம் வா'' என்று உமாவை உள்ளே அழைத்துச் சென்றார் அருள்மொழி.

''விபச்சார விடுதி நடத்தினானே அதே கனகலிங்கம் தான். அங்கேதான் என் அத்தான் இந்த ரதியைப் பிடித்திருக்கிறார். இவளுக்கு வருடக் கணக்காக இதே தொழிலாமே. அத்தான் இது மாதிரி இடங்களுக்கு வாடிக்கையாளராம். நல்லவேளையாக நான் தப்பித்தேனடியம்மா'' என்று கீச்சிட்டது மாலினியின் குரல்.

உமாவுக்கு மயக்கம் போடாத குறை. அவளுடைய கையை இறுகப் பற்றினார் அருள்மொழி. ''விடு, கழுதையை. தைரியமாக என்னோடு வா'' என்று அழைத்துச் சென்றார்.

சில வினாடி தனிமையில் உமா கேட்டுவிட்டாள். ''இப்படி ஒரு பெண்ணை மருமகளாக எண்ணினோமே என்று வருந்துகிறீர்களா அத்தை?''

''இல்லையம்மா. ஆனால் இப்படி ஒரு பெண்ணை என் தம்பி பெற்றானே என்பதுதான் என் கவலை.''

''அவளிடம் குற்றமில்லை...''

''உஷ் சும்மாயிரு உமா. இந்தப் பேச்சை எல்லாம் பேச இது நேரமில்லை வா. வேலையைப் பார்'' என்று கண்டித் தார் அருள்மொழி. உமா பேசாமல் உடன் சென்றாள்.

அறையைச் சுற்றி வந்து உள்ளே செல்லுகையில் ''இப் போது எதையும் பொருட்படுத்தாத முறையில் நடந்துகொள் '' என்று அறிவுரை கூறினார் அருள்மொழி.

அறையினுள் சென்றபோதும், மாலையை எடுத்தபோ தும் ஊசிகளாக தன்னைத் துளைத்த பார்வைகளை உணரா தது போல நடிக்க முயன்று ஓரளவு வெற்றியும் கண்டாள் உமா.

''நீ மேடையின் பின்னே போ உமா. அங்கே எல்லோ ரும் வந்து விட்டார்கள்'' என்று உமாவை அனுப்பி முன்னே சென்றார் அருள்மொழி.

அனைவரும் மேடையை அடைந்ததும் ''இப்போது பத்மவிபூஷன் பட்டம் பெற்றவரான உத்திரப்பிரதேசத்தில் இருந்து வந்துள்ள ஆசிரமத் தலைவிக்கு உமா மாலை அணிவிப்பார்'' என்று அறிவிப்புக் கேட்டது.

மேடையின் பின்னிருந்த அறையில் தன் தலைவிதியை நொந்தபடி மாலையுடன் உமா நின்று கொண்டிருந்தாள். தன் பெயரை அறிவிப்பில் கேட்கவும் திடுக்கிட்டவளாக வேக மாக சென்று மாலையை அணிவிக்க நிமிர்ந்தாள்.



''உமா என் மகளே!''

''ம்மா!''

பூமாலையை அணிவித்துவிட்டு விட்டுப் பொன் மாலை யென அவருடைய காலடியில் சரிந்தாள் உமா. ''உங்கள் மகள் வணங்குகிறேன் தாயே'' என்றாள் இந்தியில்.

விருந்தாளியாக வந்திருந்த ஆசிரமத் தலைவியும் உமாவை அள்ளி அணைத்துக் கொண்டார்.

''என் மகளே, என் மகளே!'' என்று அவர் இந்தியில் கூறியது வரையில் எல்லோருக்குமே புரிந்தது, ''நீ இங்கே எப்படி வந்தாய் குழந்தாய்?''

உமாவின் முகத்தை செம்மை படர்ந்தது. ''நான் என்று இழுத்து விட்டு அருள்மொழியைச் சுட்டிக்காட்டி ''இவர்... இவர்'' என்று மேலே பேச இயலாமல் தவிததாள்.

''உமா மருமகள் ஆகப்போகிறாள் என்று'' அருள்மொழி பெருமையுடன் ஆங்கிலத்தில் அறிவித்தார்.

''அப்படியா? வெரிகுட்'' என்று அருள்மொழியின் கையைப் பற்றிக் குலுக்கினார் அன்னையார். ''நீங்கள் மகா பாக்கியசாலி அம்மா. உமாவின் ஏழாவது வயதில் இருந்து இந்தப் பத்தொன்பது பிராயம் வரையிலும் உமாவை எனக் குத் தெரியும். எங்கள் ஆசிரமத்திலே வளர்ந்தவள். தவறு செய்யத் தெரியாதவள். தங்கம் என்றால் புடம் போட்ட தங்கம் அவள். அந்த மாதிரி குணவதியை மனைவியாகப் பெறப்போகும் உங்கள் மகனும் பெரும் பாக்கியசாலியே'' என்றார் ஆங்கிலத்தில்.

மேடையில் இருந்த ஒலிபெருக்கி தன் வேலையை வஞ்சனையின்றிச் செய்ய இந்த உரையாடல் எல்லோர் செவியிலும் விழுந்தது.

மாலினியும் வம்பர் மகாசபையும் பேந்த விழிப்பதை ஓரக்கண்ணால் கண்டுவிட்டு முன் வரிசையில் அமர்ந்திருந்த மகனுடன் விழியிலேயே இரகசியம் பேசிச் சிரித்தார் அருள்மொழி.

☆ ★ ☆

அன்றைய நிகழ்ச்சி முழுவதுமே அன்னை உமாவைத் தன் அருகிலேயே வைத்துக் கொண்டார். கடைசியாகக் கிளம்பும் போதும் "உங்களுக்குத் தொந்தரவு இல்லையென்றால் நான் உமா இருக்கும் இடத்திலேயே — அதாவது உங்கள் வீட்டிலேயே தங்கிக் கொள்கிறேனே" என்று அருள்மொழியிடம் கேட்டுக் கொண்டார்.

"அது எங்கள் நல்வினைப்பயன்" என்று சூழ நின்றாரைப் பெருமிதத்துடன் பார்த்து விட்டு அன்னையைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார், அருள்மொழி.

வீட்டில் கிடைத்த சில வினாடித் தனிமையில் ஆனந்தன் உமாவிடம் கேட்டான். "அம்மாவின் திறமையைப் பார்த்தாயா உமா? வாயால் ஒரு வார்த்தை மறுப்புக் கூறாமல் மாலினியின் மூக்கை அழகாக வெட்டிவிட்டார். இனி உனக்கு மறுப்பு இல்லையே உமா? 'இம்'தானே?"



இதழ்கள் எழிலாக வளைய உமா சிரித்தாள். முத்து பற்கள் மின்னின.

"உமா" என்று ஒரு வேட்கையுடன் அவசரமாக அவள் பக்கம் ஓர் எட்டு எடுத்து வைத்தான் ஆனந்தன்.

உமாவின் அகன்ற விழிகள் ஒரு கணம் அவனை மருண்டு நோக்கின; மறுகணம் முகம் சிவக்க ஓடி விட்டாள்.

☆ ★ ☆

பதினைந்து நாட்களுக்குப்பின் இரவின் தனிமையில் உமாவை ஆவலுடன் நெருங்கினான் ஆனந்தன். அவள் சட்டெனப் பின்னடையவும் அவன் திகைத்தான். "என்ன உமா?"

"அத்தை சொல்லி அனுப்பினார்கள்" என்று அவன் காலடியில் விழுந்து பணிந்தாள் அவள்.

"என்ன உமா" என்று அவளைத் தூக்கி நிறுத்திய போது மீண்டும் அவள் விலகிச் சென்றாள். பாலை எடுத்து வந்து "மீதி வைக்காமல் குடித்துவிட வேண்டுமாம். அத்தை சொன்னார்கள்" என்றாள் சிறு முறுவலுடன்.

பாலை அருந்திவிட்டு "உன் அத்தை வேறு ஒன்றும் சொல்லவில்லையா?" என்று சிறுகோபமும் சிரிப்புமாக அவன் கேட்டான்.

உமாவின் கன்னங்கள் சிவந்தன. ஓரக்கண்ணால் அவனைப் பார்த்துவிட்டு, "சொன்னார்களே, இந்தப் பழங்கள்

பலகாரங்கள் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் காலி பண்ணிவிட்டு, நல்ல பிள்ளையாகப் படுத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் இங்கே ரஷியன் காமிரா இருக்கிறது'' என்றவளுக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை.

கள்ளமற்றுச் சிரித்த அந்தச் செவ்விதழ்களில் ஆசையுடன் முத்தமிட்டான் ஆனந்தன்.